


ஜூபிடர் பிக்சர்ஸ்
மகிழ்ச்சியுடன் வெளியிடப்போதும்
மகோன்னதப் படம்.....................
மோகினி
உற்சாகமிகுந்த கதையும்...............
ஹாஸ்யம் ததும்பும் சம்பவங்களும்....
மாயக்குதிரையின் அற்புதச் செயல்களும்
உங்களை குதூகலிக்கச் செய்யும்..........
வி.என்.ஜானகி-மாதுரிதேவி-பாலையா
...மற்றும் பலர் நடிக்கிறது...
எ.எஸ்.எ.சாமி
எஸ்.டி.சுந்தரம்
லங்கா சத்யம்
JUPITER PICTURES CIRCUIT



சாப்பிடுங்கள்
ஸிரோலின் 'ரோச்'
இருமலுக்கும் ஜலதோஷத்திற்கும்



அந்த இருமலை நிறுத்துங்கள்
க்லைகொடின்
டெர்ப் - வஸாகா
இருமலுக்கு மிக உத்தமமான மருந்து. இது பிரபல டாக்டர்கள் சிபார்சு செய்யும் மருந்து.
Tamil
இது ஒரு அலெம்பிக் தயாரிப்பு
AL 506



பார்லிக்கஞ்சியை இம்முறையில் தயாரித்தால் நேரமும் சிரமமும் குறையும்
ஐந்தே நிமிஷத்தில் ருசியும் இனிமையும் மிகுந்த பார்லிக்கஞ்சி சாப்பிடலாம். இரண்டு ஸ்பூன் நிறைய பியூரிடி பார்லியை எடுத்து சிறிது ஜலத்தில் பசையாகக் கரைத்து. பின் இரண்டு டம்ளர் ஜலம் விட்டு ஐந்தே நிமிஷங்களுக்கு கொதிக்கவைக்கவும். இது உபயோகிப்பதற்கு வெகு சிக்கனமானது. ஏனெனில் அரிசிப்பார்லியைப்போல் எட்டு மடங்கு அதிக புஷ்டியுள்ளது.
பியூரிடி பார்லி கருகரப்பூட்டும் சீதள பிரதேசங்களில் விளையும் புஷ்டி மிகுந்த தானியங்களை மாவரைத்து தயாரிக்கப்படுகிறது. நுண்ணிய பட்டினும் சலிக்கப்பட்டு சுகாதார முறைப்படி தகர டப்பாக்களில் அடைத்து முத்திரையிடப்பட்டிருக்கிறது.
PURITY
INDIAN BARLEY
பியூரிடி
இந்தியன் பார்லி
அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிட், 201 செட்லா ரோடு, கல்கத்தா
ஏகவினியோகஸ்தர்களுக்கு எழுதுங்கள்:
மெஸர்ஸ். பாரி அண் கோ., லிமிடெட், த. பெ. நெ. 12. மதராஸ்

இது ஒரு ஸோப் அன்றி



மாயமல்லவா?

உள்ளதை உள்ளபடி சொல்லுகிறோம். இவ்விளம்பரத்தின் மூலம் நாங்கள் விற்க விரும்புவதெல்லாம் எளியோர் பணக்காரர் யாவருக்கும் கிட்டக்கூடிய ஓர் உயர்தரமான ஸோப். காந்தி ஸோப் உங்களுக்கு அழகு சிருங்காரம் முதலியவற்றை உண்டாக்குமென்று நாங்கள் வாக்குறுதி கொடுக்கவில்லை.

ஆனால் காந்தி ஸோப் பரிமளம் பொருந்தியவை என்றும் மிருதுவான சருமத்துக்கு கெடுதலை உண்டாக்காது என்றும் உறுதி சொல்லுவோம்.

இதர உயர்தர ஸ்வஸ்திக் தயாரிப்புகள். சீக்காய்ஸோப். பரிமள ஆமணக்கெண்ணெய், ஸ்வஸ்திக் க்ஷவர ஸோப், சலவை ஸோப்புகள், கோஸாவின் பிராண்ட் வனஸ்பதி முதலியன.




காந்தி ஸோப்

குணத்துக்கு நிகரற்றது.

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட் பம்பாய்.

மதராஸ் ஸேல்ஸ் டிப்போ: No. 14, G. ஸ்டிரிங்கர் தெரு. (ஸேவன் ஸ்கோயர்) மதராஸ்.
பெங்களூர் ஸேல்ஸ் டிப்போ: ஆர்க்காடு ஸ்ரீனிவாஸாச்சார் தெரு, பெங்களூர் ஸிட்டி.
கொச்சின் ஸேல்ஸ் டிப்போ: பஜார் ரோடு, மட்டாஞ்சேரி, கொச்சின்.



செம்பொன் நிறம்கொண்ட காரட் ஹல்வா டால்டாவில் தயாரித்தால் உயர்தரமாயிருக்கும்!

½ பவுண்டு காரட்டை சீவி நேர்த்தியாக துருவவும். 2 கப் பால் கொதிக்கவைத்து அதில் காரட்டைப்போடவும். சிறு சூட்டில் பால் பூராவும் கிட்டத்தட்ட வற்றும் வரை கிண்டிக்கொண்டிருக்கவும். 1½ கப் சர்க்கரை, துண்டாக்கிய பதாம் பிஸ்தா பருப்புகள், கிஸ்மிஸ் இவைகளைப்போடவும். கலவை சுமாராக கெட்டியானதும் ½ கப் டால்டாவை சூடாக்கி சிறுகச்சிறுக விட்டு ஹல்வா செம்பொன் நிறமாவது வரை வறுக்கவும். ஒரு சிட்டிகை பொடித்த ஏலக்காய், ஜலத்தில் கரைத்த ¼ தேக்கரண்டி குங்குமப்பூ இவைகளை சேர்த்துக்கொள்ளவும். டால்டா தனியாக விலகும்வரை ஹல்வா அடுப்பிலிருக்கவேண்டும். சூடாகவோ, ஆறினபிறகோ பரிமாறலாம்.



"ஆரோக்கியத்தைக் காப்பாற்றும்" உணவுகள் எவை?

நோய்களை எதிர்க்கும் உணவுகளே அவை. இது சம்பந்தமாக ராமான விவரங்களுக்கு எங்களுக்கு எழுதுங்கள்.

இலவசமான ஆலோசனைகளுக்கு இன்றே — அல்லது என்று வேண்டுமானாலும் — எழுதுங்கள்!

டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353,
பம்பாய் 1

HVM 77-23 TM

கல்கி

பொருளடக்கம்

மலர் 8 | இதழ் 9

செப்டம்பர் 26

சர்வதாரி ௵ புரட்டாசி 11

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

கல்கி

மலர் 8 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிட்டி பாப்பா —பாரதியார் | இதழ் 9

என்ன சேதி?

மாகாணப் பிரிவினை

பாஷாவாரி மாகாணப் பிரிவினைக் கமிஷன் சென்னைக்கு வந்து விட்டுப் பலரிடம் சாட்சியம் கேட்டு விட்டுத் திரும்பியும் போய் விட்டது. இந்த மாகாணப் பிரிவினை விஷயம் இப்போது அவ்வளவு முக்கியமான காரியமா என்பது முதல் கேள்வி. "இல்லை" என்பது பண்டித ஜவாஹர்லால்ஜியின் கருத்து. சென்னையில் சாட்சியம் கொடுத்தவர்களில் பலரும் அவ்விதம் சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால் ஆந்திர மாகாணத்தைப் பொறுத்தவரையில், இந்த விஷயத்தில் அபிப்பிராய பேதம் கிடையாது. அதாவது சாட்சியம் கொடுத்த ஆந்திரப் பிரமுகர்கள் எல்லாரும் ஒரு முகமாக "பாஷாவாரி மாகாணப் பிரிவினை உடனே செய்ய வேண்டும்; இந்த நிமிஷமே செய்ய வேண்டும்; செய்தே தீரவேண்டும்; இல்லாவிட்டால் பிரளயம் வந்து விடும்!" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனாலும் மாகாணப் பிரிவினைப் பிரச்னையை அனாவசியமான சிக்கலுக்கு உள்ளாக்கித் தாமதப்படுத்துவதும் ஆந்திரப் பிரமுகர்களே தான். அதாவது அவர்களுடைய பேராசைதான். சாட்சியம் கொடுத்த ஆந்திரப் பிரமுகர்களில் பத்தில் ஒன்பது பேர் "மதராஸ் மனதே" என்ற பாடத்தை ஒப்புவித்திருக்கிறார்கள். இந்த அர்த்தமில்லாத, அநீதமான, பேராசை பிடித்த கோரிக்கையினால் பிரிவினை தடைப்படும் என்பதில் ஐயமில்லை. விசாரணைக்கு வந்திருந்த நீதிபதிகள், "இது என்ன தொல்லை?" என்றுதான் எண்ணியிருப்பார்கள். "மதராஸ் மனதே" என்று சொன்ன பத்தில் ஒன்பது பேரைத் தவிர, மற்ற ஒருவரின் யோசனை "சென்னையைத் தனி மாகாண மாக்க வேண்டும்" என்பதுதான். அதாவது "உனக்கும் வேண்டாம்; எனக்கும் வேண்டாம்; சமுத்திரத்திலே தூக்கிப் போட்டு விடுவோம்!" என்று தர்ம நியாயமாகச் சொல்லியிருக்கிறார்கள். பெரிய நிர்வாகப் பொறுப்பு வாய்ந்த உத்தியோகங்களை வகித்த ஸ்ரீ எஸ். வி. ராமமூர்த்தியே இப்படிச் சொல்லியிருக்கிறார் என்றால், மற்றவர்களைப் பற்றிக் கேட்பானேன்? மொத்தத்தில், ஆந்திரர்களுக்குத் தனி மாகாணம் கிடைப்பது தடைப்படுமானால், அல்லது தாமதம் ஆகுமானால், அதற்கு முக்கிய காரணம் அவர்கள் சென்னை நகருக்கு ஆசைப்படுவதாகவே யிருக்கும்.

சென்னைத் தேர்தல்

வெகு நீண்டகாலத்துக்குப் பிறகு சென்னை நகர சபைக்குத் தேர்தல் இந்த செப்டம்பர் மீ 30உ நடைபெறுகிறது. வெளியூர்களிலுள்ள ஸ்தல ஸ்தாபனங்களின் விஷயம் எப்படி யிருந்தபோதிலும், தென்னிந்தியாவின் முக்கிய நகரமாகிய சென்னைப் பட்டினத்தின் நகர சபை காங்கிரஸ் ஆதிக்கத்தில் இருக்கவேண்டியது அவசியமாகும். எனவே, இந்தத் தேர்தலில் காங்கிரஸின் சார்பாக அபேட்சகர்களை நிறுத்தாமல் விட்டுவிட நேர்ந்தது பெரிதும் வருந்தத்தக்கது.

ஆனாலும் அபேட்சகர்களாக நிற்பவர்களுக்குள்ளே உண்மையான காங்கிரஸ்காரர்களும் தேசபக்தர்களும் தியாகிகளும் யார் யார் என்பதைக் கண்டு பிடிப்பது சென்னைநகர் வோட்டர்களுக்கு அதிக சிரமமாயிராது. உதாரணமாக, ஸ்ரீ கே. வெங்கடசாமி நாயுடு, ஸ்ரீமதி ராஜம் பாரதி, ஸ்ரீ ச. கிருஷ்ணய்யர், ஸ்ரீ கே. சடகோபன் போன்றவர்கள் நிற்குமிடங்களில் வோட்டர்கள் அவர்களுக்கே பெருந்திரளான வோட்டுக்களை அளிப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

ஸ்ரீ சி. என். முத்துரங்க முதலியாரைத் தலைவராகக் கொண்ட 'சென்னை நகரில் எல்லைக் கமிட்டி' என்ற தற்காலிக ஸ்தாபனத்தின் சிபார்சும் வோட்டர்களுக்கு வழிகாட்டியாக உதவக் கூடியது. "சென்னை நகரம் தமிழ்நாட்டுக்கே சொந்தமானது" என்ற அடிப்படையில், அந்தக்

தேர்தல் பிரசாரம்!



"நாயக்கர்வாள்! உங்கள் வோட்டை எங்கள் ராமலிங்கத்துக்கே போடுங்கள்! இவரை எதிர்த்து நிற்பவன் ஒன்றும் தெரியாதவன்; உபயோகமற்றவன்; லஞ்சம் வாங்குகிறவன்; அவனுக்கு உங்கள் வோட்டைப் போடவே போடாதீர்கள்!......"

"சீ, போம் ஐயா. வெளியே! நான்தான் அந்த ராமலிங்கத்தை எதிர்த்து நிற்கிறேன்! என்னிடமே உமது கைவரிசையைக் காட்ட வந்து விட்டீரே!......"

கொள்கையை ஆதரிக்கும் அபேட்சகர்களையே இவர்கள் பொறுக்கி எடுத்துச் சிபார்சு செய்திருக்கிறார்கள். இவர்களால் சிபார்சு செய்யப்பட்டிருப்பவர்கள் பெரும்பாலும் பழுத்த காங்கிரஸ் வாதிகளாகவும் இருக்கிறார்கள். சென்னை நகரின் வோட்டர்களில் மிகப் பெரும்பாலோர் தமிழர்கள்; காங்கிரஸ் அபிமானிகள். எனவே, எல்லைக்கமிட்டி சிபார்சு செய்திருக்கும் அபேட்சகர்களையே வோட்டர்கள் ஆதரித்துத் தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஜவுளி - நூல் கட்டுப்பாடு

மில் ஜவுளி - மில் நூல் கட்டுப்பாடு இப்போது ஓரளவு அமுலுக்கு வந்திருக்கிறது. நவம்பர் 1-ந் தேதியிலிருந்து பரிபூரணமாகவும் அமுலுக்கு வரப்போகிறது. புதிய ஏற்பாட்டின் பிரகாரம் சென்னை சர்க்கார் இம்மாகாணத்து மில்களிலிருந்தும் வெளி மாகாணங்களிலிருந்தும் நூலும் ஜவுளியும் மொத்தமாக வாங்கி, கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வியாபாரிகளுக்கும் வினியோகிப்பார்கள். பொது மக்களின் நன்மையை முன்னிட்டு ஜவுளிக் கட்டுப்பாடு அவசியம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் கட்டுப்பாட்டை அமுல் நடத்தும் முறையில், பெருந்திரளான ஜவுளி - நூல் வியாபாரிகளின் வயிற்றில் அடித்துவிடக் கூடாது. உதாரணமாக இம்மாகாணத்தில் மொத்தம் பத்தாயிரம் சில்லறை ஜவுளி வியாபாரிகளைப் பொறுக்கி எடுத்து ஜவுளி விற்பனைக்கு லைஸென்ஸும் கோட்டாவும் கொடுப்பார்கள் என்று தெரிகிறது. ஆனால் மொத்தம் இருபதாயிரம் ஜவுளி வர்த்தகர்கள் இப்போது வியாபாரம் செய்து வருகிறார்கள். ஜீவனோபாயத்துக்கு ஜவுளிக் கடையை நம்பி யிருந்த பாக்கிப் பத்தாயிரம் வர்த்தகர்களும் இனிமேல் பிழைப்புக்கு என்ன செய்வார்கள்?


இதைக் காட்டிலும் அதிகமாக நூல் விற்பனை வியாபாரிகள் பாதிக்கப்படுவார்கள் என்று தெரிகிறது. மொத்தம் இம் மாகாண ஆலைகளில் உற்பத்தியாகும் நூலையும் வெளி மாகாணங்களிலிருந்து வரும் நூலையும் சேர்த்து, பாதி நூலைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மற்றப் பாதியைத் தனிப்பட்ட வியாபாரிகளுக்கும் கொடுக்கப் போகிறார்களாம். மொத்தம் இம் மாகாணத்தில் வேலை செய்யும் சுமார் மூன்று லட்சம் தறிகளில் ஒரு லட்சம் தறிகள்தான் கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் வேலை செய்கின்றன. அப்படியிருக்க, பாதி நூலைக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுப்பதால் தனிப்பட்ட தறிகாரர்கள் வெகுவாகத் தொல்லைப்பட நேரிடும். நீண்டகாலமாக நூல் வியாபாரம் செய்து வந்த ஆயிரக்கணக்கான வியாபாரிகள் இடீரென்று பிழைப்பை இழக்கும்படி நேரிடும். லட்சக் கணக்கில் வியாபாரம் செய்து கொள்ளை லாபம் சம்பாதிக்கும் முதலாளிகளைப் பற்றி யாரும் அநுதாபப்படத் தயாராயில்லை. வெளியூர்களில் சிறிய கடைகளில் நூலும் துணியும் விற்று மாதம் ஐம்பது அல்லது நூறு சம்பாதிக்கும் வியாபாரிகளைப் பற்றித் தான் சொல்கிறோம். புதிய ஜவுளி-நூல் கட்டுப்பாட்டு விதிகளின்படி இத்தகையோர் ஆயிரக் கணக்கானவர் கடையை மூடி விட்டுப் பிழைக்கும் வழியின்றிக் கஷ்டப்பட நேரிடும் என்று அஞ்சுகிறோம். இதற்கு இடங் கொடுப்பது வீணாகக் காங்கிரஸ் சர்க்காருக்குக் கெட்ட பெயரை உண்டாக்குவதாகும்.

"எத்தனை அடி வேண்டும்?"

இந்தப் பழைய பிரச்னையை மறுபடியும் இந்திய சர்க்கார் கிளப்பி விட்டிருக்கிறார்கள். யுத்த காலத்தில் சினிமாப் படங்களின் நீளம் பதினோராயிரம் அடிக்கு மேல் போகக் கூடாது என்றிருக்

தது. யுத்தம் முடிந்த பிறகு இந்தக் கட்டுப் பாட்டை எடுத்து விட்டார்கள். எடுத்தது பெருந் தவறு என்பது நம்முடைய அபிப்பிராயம். அந்தத் தவறை உணர்ந்து இந்திய சர்க்கார் மறுபடியும் பதினோராயிரம் அடிக் கட்டுப்பாடு விதிப்பது பற்றி ஆலோசித்து வருகிறார்கள். இது சம்பந்தமாக சினிமா உற்பத்தியாளர் சங்கங்களின் அபிப்பிராயத்தைக் கேட்டிருந்தார்கள். சென்னைச் சங்கத்தார் "கூடவே கூடாது: பதினோராயிரம் அடி என்ற கட்டுப்பாடே கூடாது; அப்படிக் கட்டுப்படுத்துவது மனிதர்களின் சுதந்திரத்தில் தலையிடுவதாகும்!" என்று அபிப்பிராயம் தெரிவித்து விட்டார்கள். உணவு, உடை, தண்ணீர் உள்படப் பொது நன்மையை முன்னிட்டுக் கட்டுப்பாடு செய்யப்பட்டு வரும் இந்தக் காலத்தில், சினிமா நீளத்தைக் கட்டுப்பாடு செய்யக் கூடாது என்று சொல்வது விந்தையே யாகும். இதற்குத் தனி மனிதர்களின் சுதந்திரத்தைக் காரணமாகச் சொல்வது அதைவிட விந்தையாகும். தற்கொலை செய்து கொள்ளவும், சூதாடவும், குடிக்கவும் தனி மனிதர்களுக்குச் சுதந்திரம் அளிக்கப்பட வேண்டுமா? சினிமாக்கள் விஷயத்தையே எடுத்துக் கொள்வோம். அவரவர்கள் இஷ்டப்படி சினிமா எடுத்துக் காட்டலாமல்லவா? 'சென்ஸார் போர்டு' என்பது என்னத்திற்கு? சினிமா நீளக்—கட்டுப்பாட்டை எடுத்ததின் பயன் என்னவென்றால், சமீபத்தில் தமிழ் நாட்டில் வெளியான ஒரு படம் 22500 அடி நீளமாம்! இருபத்தையாயிரம் அடி நீளத்தில் ஒரு படம் வரப்போகிறதாம்! இத்தகைய படங்களைப் பார்க்கும் பொது மக்கள்,—ஸ்திரீகள், குழந்தைகள் உள்பட,—எவ்வளவோ சுகாதாரக் கேட்டுக்கு உள்ளாகிறார்கள். கல்வி சம்பந்தமான சிறு படங்களைக் காட்ட முடியாமலும் போகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, சினிமா எடுப்பதற்கு அவசியமான 'கச்சா பிலிம்' என்னும் பொருளுக்காக அளவில்லாத பணத்தை அன்னிய நாடுகளுக்குக் கொட்டிக் கொடுக்கவேண்டி வருகிறது. இந்திய சர்க்கார் ஹைதராபாத் நைஜாம் விஷயத்தில் காட்டிய உறுதியை இந்தச் சினிமா நைஜாம்களின் விஷயத்திலும் காட்டுவார்கள் என்று நம்புகிறோம்.

சந்திரனைப் பிடிக்க ஏணி!



நிகழ்ச்சிச் சித்திரம்



-சாஸ்திரி



செப்டம்பர் 13-ந் தேதி
இவரைக் கைது செய்து காவலில் வை!
செப்டம்பர் 17-ந் தேதி
என் ஆருயிர் நண்பரே!
காஸிம் ரஸ்வி கண்ட கனவு.....
.....கடைசியில் பலித்தே விட்டது!
டில்லி செங்-கோட்டை.

ஜனநாயகம் பிழைத்தது!

வீரர் ஜூலியஸ் ஸீஸரைப் பற்றிக் குறிப்பிடும்போது, "அவர் சென்றார், பார்த்தார், ஜெயித்தார்" என்று சொல்லுவது உண்டு. அதுபோலவே இப்போது இந்திய வீரர்கள் ஹைதராபாத்துக்குள் சென்றனர், பார்த்தனர், ஜெயித்தனர்!

ஒன்றரைக் கோடிக்குமேல் ஜனத்தொகையுள்ள,—சற்றேறக்குறைய ஒரு லட்சம் சதுர மைல் விஸ்தீரணமுள்ள ஒரு பிரதேசத்தை அற்ப சேதத்துடன் ஐந்தே நாட்களில் ஜெயித்த அதிசய சம்பவம் சரித்திரத்தில் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை!

சென்ற மகா யுத்தத்தின்போது சில நாட்களில் சில தேசங்களைக் கைப்பற்றியதாக ஹிட்லர் கோஷ்டியினர் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். பதினைந்து லட்சம் ஜனத்தொகை கொண்ட ஜெர்மன் நகரான ஹாம்பர்க்கைக் குண்டு மாரி பொழிந்து ஏழு நாட்களில் தரைமட்டமாக்கியதாக பிரிட்டிஷாரும் பெருமை யடித்துக் கொண்டனர். ஆனால் அந்த ஒரு சில நாட்களில் ஏற்பட்ட உயிர்ச் சேதத்தையும், பொருட் சேதத்தையும் கவனிப்போர் கதிகலங்காமல் இருக்க முடியாது.

இந்தியத் துருப்புகளோ வெனில், அராஜகமும் மதவெறியும் தாண்டவமாடி வந்த ஹைதராபாத்தை ஜனங்களின் உயிருக்கோ, பொருளுக்கோ சிறிதும் சேதமின்றிக் கைப்பற்றியது மகா அற்புதமான ஒரு சாகஸம் என்பதில் சந்தேகமில்லை.

ஹைதராபாத் போர் முனைகளில்கூட சொற்ப உயிர்ச் சேதமே ஏற்பட்டது. எனவே மிக மிகக் குறைந்த அளவு சேதத்துடன் மின்னல் வேகத்தில் மகத்தான வெற்றிபெற முடியும் என்பதை இந்திய தளபதிகளும், துருப்புகளும் உலகமறிய நிரூபித்திருக்கிறார்கள்.

ஒரு நகரத்தில் அடிக்கடி கொள்ளைக்காரர்கள் புகுந்து அமைதியைக் குலைத்து உயிர்களுக்கும் சொத்துக்களுக்கும் ஆபத்தை விளைவித்து வந்தால், அத்தகையோரை அடக்கி அமைதியை நிலைநிறுத்தி ஜனங்களையும் சொத்துக்களையும் காப்பாற்ற வேண்டியது போலீஸ் அல்லது இராணுவத்தின் இன்றியமையாத கடமையல்லவா? அதே கடமையைத் தான் இப்போது இந்திய இராணுவம் நிறைவேற்றியிருக்கிறது.

இந்தியாவுக்குப் பெரும் தலைவலியாக இருந்து வந்த ஹைதராபாத் பிரச்னையைத் தீர்த்ததற்காகவும், ஹைதராபாத் ஜனங்களை ராக்ஷஸர்களின் கொடுங்கோன்மையிலிருந்து விடுவித்ததற்காகவும் இந்திய சர்க்காரையும் இந்திய இராணுவத்தையும் ஹைதராபாத் மக்கள் மாத்திரமல்ல, இந்திய மகா ஜனங்கள் மாத்திரமல்ல, சமாதானத்திலும் ஜனநாயக ஆட்சி முறையிலும் பற்றுதல் உள்ள உலக மக்களும் கூடப் பாராட்டி வாழ்த்துக் கூறக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

* * *

நமது மாபெரும் தலைவர்கள் கூறியவை பொய்த்துப் போகவில்லை.

"ஹைதராபாத் பிரச்னையைப் பற்றி நீங்கள் பீதியோ, கவலையோ அடைய வேண்டிய அவசியமே இல்லை" என்று கவர்னர் ஜெனரல் ராஜாஜி ஜனங்களுக்கு உறுதி கூறினார். பீதிக்கோ, கவலைக்கோ எள்ளளவும் இடமின்றி ஹைதராபாத் பிரச்னை முடிவடைந்தது.

"ஹைதராபாத்தில் நிலவும் அராஜகத்தைத் தடுக்க போலீஸ் நடவடிக்கை எடுப்போம்" என்று பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு கூறினார். போலீஸ் நடவடிக்கை பூர்த்தியாகி அராஜகமும் தொலைந்து விட்டது.

"அவசரப் படாதீர்கள்; பழுத்தவுடன் ஆபரேஷன் செய்யப்படும்" என்று ஸர்தார் பட்டேல் கூறினார். ஆபரேஷன் அமோகமான வெற்றியுடன் நடைபெற்றது.

ஆனால் இந்தியாவின் விரோதிகள் கூறியவற்றில் ஒன்று கூடப் பொய்த்துப் போகாமல் இருக்கவில்லை.

"ஹைதராபாத் மீது இந்தியா படையெடுத்தால் ஹைதராபாத் சமஸ்தானம் முழுவதையும் சாம்பலாக்கி விடுவோம். இங்குள்ள ஒருகோடி ஹிந்துக்களையும் ஹதம் செய்து விடுவோம்" என்று கனலைக் கக்கினார் காஸிம் ரஸ்வி!

"ஹைதராபாத் மீது படையெடுத்தால் பின்னர் இந்தியா முழுவதும் ஐந்து ஆண்டுகள் வரையிலாவது

வகுப்புப் போருக்கு இரையாக நேரும்'' என்று ஹைதராபாத் பிரதம மந்திரி பயமுறுத்தினர்!

"இந்தியா படையெடுத்தால் பிறகு இந்தியாவில் எல்லோரும் இரத்த ஸ்நானம் செய்ய நேரும்'' என்று பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி ஜபருல்லாகான் ஜோஸ்யம் கூறினர்!

"கடைசியாக ஒரே ஒரு ரஸாக்கர் இருக்கும் வரையிலும் கூடப் போராடுவோம்'' என்றனர் வெண்ணெய் வெட்டி சிப்பாய்களான ரஸாக்கர்கள்!

ஹைதராபாத் விஷயத்தில் இந்தியா தலையிட்டால், பின்னர் வகுப்பு வெறிப் பிரளயம் ஏற்பட்டு விடும் என்று சர்ச்சில் கோஷ்டியினர் பரிதவித்தார்கள்! அதன் விளைவாக உலக அமைதிக்குக் கூடப் பங்கம் நேரலாம் என்று கூறிய "தீர்க்கதரிசி''களும் உண்டு!

நிஜாம் சரணாகதி அடைந்த பிறகு கூட துஷ்பிரசாரகர்கள் தங்களுடைய விஷமத்தனத்தை விட்டதாகத் தெரியவில்லை. நிஜாமின் சைன்யங்கள் சரணடைந்ததை அடுத்து மகத்தான வகுப்புக் கலகங்கள் குமுறிக் கொண்டு கிளம்பும் என பி. பி. ஸி. பிரசாரம் செய்தது.

இந்திய இராணுவத்தின் பராக்கிரமத்தையும், இந்திய சர்க்காரின் இணையிலா வெற்றியையும் கண்டு பொறாமை கொண்டு, இன்னும் பிரிட்டிஷ், அமெரிக்கப் பத்திரிகைகளில் சில இந்திய சர்க்காரின் நடவடிக்கைகளில் 'அது சொத்தை இது சொள்ளை' என்று புலம்பி வருகின்றன.

ஆனால் மேற்படி பிருகஸ்பதிகளுடைய 'தீர்க்க தரிசனம்' எல்லாம் அடியோடு பொய்த்துப் போனது மாத்திரமல்ல, அவற்றிற்கு நேர் மாறாகவும் காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன.

இந்திய வீரர்கள் ஹைதராபாத்துக்குள் பிரவேசித்த பின் மேற்படி நபர்கள் கூறியது போன்று எதுவும் நடைபெறவில்லை.

ஹைதராபாத் மீது இந்திய வீரர்கள் படையெடுத்த பின் காஸிம் ரஸ்விக்கு ஓடி ஒளிந்து கொள்வதற்குத்தான் நேரம் இருந்ததேயன்றி, வேறு எதற்கும் நேரம் இல்லை.

இந்திய சர்க்காரின் நடவடிக்கைகளை ஜமீயத் உலமா தலைவர் முதல், முஸ்லீம் லீக் தலைவர் இஸ்மாயில் சாகேப் சகலரும் ஏகோபித்து ஆதரித்தனர். நிஜாமுக்குப் பரிந்துகொண்டு ஒரு முஸ்லீம்கூட அசம்பாவிதமான காரியம் எதிலும் ஈடுபடவில்லை.

ஹிமயம் முதல் குமரி வரையில் பரந்து கிடக்கும் பாரத பூமியின் ஓரிடத்திலும், ஒரு கலகம் கூட நடைபெறாதது, இந்தியாவின் விரோதிகளுக்கு வெட்கத்தையும் பெரும் ஏமாற்றத்தையும் உண்டு பண்ணியிருக்கிறது.

அமைதி நிலவும் கிராமங்களில் புகுந்து நிரபராதிகளான பெண்களையும் சிசுக்களையும் சித்திரவதை செய்த 'வீரர்'களும் ரயில் கொள்ளைக்காரர்களுமான ரஸாக்கர்கள், இந்திய சிப்பாய்களைக் கண்டதும் புறமுதுகு காட்டித் தலை தெறிக்க ஓடி ஒளிந்து கொண்டார்கள். வேகமாக ஓட முடியாதவர்கள் அகப்பட்டுக் கொண்டனர்.

* * *

ஹைதராபாத் மீது இந்திய சர்க்கார் கைக்கொண்ட நடவடிக்கைகள் அதிகச் சேதமின்றியும் அதி சீக்கிரத்திலும் முடிவடைந்தது எல்லோருக்கும் மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கிறது.

ஹைதராபாத் மீது இந்திய சர்க்கார் அவசரப்பட்டுக் கொண்டு எத்தகைய நடவடிக்கையையும் எடுத்துக்கொண்டு விடவில்லை.

ஒரு வருஷ காலமாகப் பொறுத்தனர். நிஜாமின் நியாயமற்ற சில கோரிக்கைகளுக்கும் இணங்கினர். இந்திய சர்க்காரின் போக்கைக் கண்டு பலர் பொறுமை யிழந்து சர்க்காரைக் கண்டித்தார்களெனினும், அதற்காக சர்க்கார் நிதான புத்தியை இழந்து விடவில்லை. ஹைதராபாத் பிரச்னையைச் சமரசமாகத் தீர்க்க அரும்பாடு பட்டனர்.

ஆனால், ரஸாக்கர்களின் அட்டூழியங்கள் எல்லை மீறிப் போன பின்னர்தான், — சமரசமாகத் தீர்ப்பதற்கு என்னவும் இடமில்லை என்பது நிச்சயமாகத் தெரிந்த பின்னர்தான் நடவடிக்கைகளில் இறங்கினர்.

மிகவும் நெருக்கடியான சமயங்களில் கூட இந்திய சர்க்கார் தைரியம் குன்றி சோர்வடையாமலும், பொறுமைக்கும் கண்ணியத்துக்கும் முரணின்றியும், நிதான புத்தியுடனும் காரியங்களைச் செய்து வருகின்றனர் என்பதற்கு ஹைதராபாத் சம்பவமும் ஓர் எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது.

இந்தியாவில் பிரிட்டிஷாரின் ஆட்சிக் காலத்தில் நிஜாம் இவ்வாறு நடந்து கொண்டிருப்பாராயின், அவருக்கு என்ன கதி நேர்ந்திருக்கும் என்பது

பற்றி யாருக்கும் சந்தேகம் எழ இடமில்லை. பிரிட்டிஷாரின் அற்ப கோபத்துக்கு ஆளான இந்திய மன்னர்கள் சிம்மாசனத்தையே இழக்கும்படி நேர்ந்ததற்கு உதாரணம் கூற முடியும்.

மகத்தான வெற்றி பெற்ற பின்னரும் கூட நிஜாம் விஷயத்தில் இந்திய தளபதியும், சர்க்காரும் எவ்வளவு கண்ணியமாக நடந்து கொண்டு வருகிறார்கள் என்பதைச் சகலரும் கவனிக்க வேண்டும்.

மகாத்மா காந்தியின் மாசற்ற கொள்கைகளும் புனித நோக்கங்களும் நமது தலைவர்களின் ஹிருதயத்திலும் ஜனங்களின் ஹிருதயத்திலும் எவ்வளவு தூரம் வேரூன்றியிருக்கின்றன என்பதை மேற்படி சம்பவங்கள் உலகத்துக்கு எடுத்துக் காட்டுகின்றன.

வெற்றி பெற்ற பின்னரும் இந்திய சர்க்கார் ஆச்சரியகரமான பொறுமையுடன் காரியங்களைச் செய்து வருகிறார்கள். அராஜகத்திலும் குழப்பத்திலும் ஆழ்ந்து கிடந்த ஹைதராபாத்தில் சமாதானமும் ஒழுங்கும் நிலவும்படிச் செய்வதையே தங்களுடைய முழுமுதற் கடமையாகக் கொண்டிருக்கிறார்கள்.

மேற்படி சமஸ்தானத்தில் அமைதியும் ஒழுங்கும் ஏற்பட்ட பின், அரசியல் நிர்ணய சபை அமைக்கப்படும் என்றும், ஹைதராபாத்தின் எதிர்கால அரசியலை அந்தச் சபையே நிர்ணயிக்கும் என்றும் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு தேசத்துக்கு விடுத்துள்ள செய்தியில் கூறியிருப்பதிலிருந்து, இந்திய சர்க்காரின் நீதி நெறியையும், ஜன நாயக ஆட்சியில் அவர்களுக்குள்ள சிரத்தையையும் உலகம் அறிந்து கொள்ளும்.

அவசரப்படாமலும் பொறுமையுடனும் ஆய்ந்தோய்ந்து காரியங்களைச் செய்யும் ஆற்றல் நமது இணையற்ற தலைவர்கள் அடங்கிய சர்க்காருக்கு உண்டு என்பது இப்போது எல்லோருக்கும் நன்கு தெரிந்துவிட்டது.

எனவே, உற்ற சமயத்தில் உற்ற காரியங்களைச் செய்வார்கள் என்ற முழு நம்பிக்கையுடன் சுதந்திர இந்திய சர்க்காரை ஹிருதய பூர்வமாக ஆதரித்து வரவேண்டியது ஜனங்களின் கடமையாகும்.

இந்தியா முழுதும் அமைதியும் நம்பிக்கையும் நிலவியதால்தான், ஹைதராபாத் பிரச்னையை இந்திய சர்க்கார் இரத்தக் களறியின்றியும், ஜனங்கள் துன்பத்துக்கும் கஷ்ட நஷ்டங்களுக்கும் இலக்காகாமலும் தீர்த்து வைக்க முடிந்தது.

வகுப்புக் கலகங்கள் ஏற்பட்டு ஜனங்கள் கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாகும்படி நேர்ந்திருந்தால், இந்தியா அடைந்த மகத்தான வெற்றி பலனில்லாமல் போயிருக்கும்.

எனவே, அவ்வித அசம்பாவிதங்கள் எதுவும் ஏற்படாமல் கடவுள் அருள் புரிந்ததற்காகச் சகலரும், இந்தியா முழுவதும் ஜாதிமத பேதமின்றி ஆலயங்களிலும் மசூதிகளிலும் சர்ச்சுகளிலும் இன்று பிரார்த்தனை நடத்த வேண்டுமென்று நமது கவர்னர் ஜெனரல் ராஜாஜி அவர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். அந்த வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டியது எல்லோருடைய கடமையும் ஆகும்.

ஹைதராபாத் நெருக்கடியைத் திருப்திகரமாகத் தீர்த்து வைத்ததற்காகச் சகலரும் இறைவனைப் பிரார்த்திக்கும்போது, கிருபை கூர்ந்து நமக்கு ராஜாஜி, நேருஜி, சர்தார் பட்டேல் போன்ற அரும் பெரும் தலைவர்களை அளித்ததற்காகவும் இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும்.




தமிழ்த் திருமணம்

தமிழறிஞர் திரு பாஸ்கரத் தொண்டைமான் அவர்களின் புதல்வி திருநிறை செல்வி ராஜேஸ்வரிக்கும் திருநிறை செல்வன் வி. கே. பி. நடராஜன் எம். ஏ.க்கும் சென்ற 9-ம் தேதியன்று திருநெல்வேலியில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. திருமணத்துக்கு ரஸிகமணி டி. கே. சி. அவர்கள் சென்று மணமக்களை ஆசீர்வதித்தார். மணமக்களுக்கு ஏராளமான வாழ்த்துக்களும் பரிசுகளும் வந்து குவிந்தன.

வாழ்க, ராஜேஸ்வரி — நடராஜன்!

வீர தளபதி



பலர் எதிர்பார்த்ததற்கு மாறாக, விஸ்தாரமான நைஜாம் சமஸ்தானத்தை ஐந்தே நாளில் கைப்பற்றி, வெற்றிக்கொடி நாட்டி, ஒன்றரைக் கோடி மக்களுக்கு விடுதலை அளித்த நம் வீர தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ராஜேந்திர ஸிங்ஜி.

அலை ஓசை

கல்கி

அத்தியாயம் 14

ரஜனிபூர் ஏரி

அன்று பிற்பகலில் ராகவன் சீதாவைப் பார்த்து, "அப்படியானால், உனக்கு நிஜமாகவே தலையை வலிக்கிறதா?" என்று கேட்டான்.

"பின்னே, பொய்யாகவா தலையை வலிக்கும்? இது என்ன கேள்வி?" என்றாள் சீதா.

"சரி, நான் போய் வருகிறேன்!" என்று ராகவன் கிளம்பினான்.

"எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டாள் சீதா.

"புறப்படுகிறபோது, 'எங்கே போகிறீர்கள்?' என்று கேட்கக் கூடாது என்று உனக்குத் தெரியாதா? வேறு எங்கே போவேன்? ஏரிக்குத்தான்!"

"என்னை விட்டுவிட்டுத் தனியாகவா போவீர்கள்?"

"தனியாக என்ன? தாரிணியும் அவளுடைய தோழியுந்தான் வருவதாகச் சொல்லியிருக்கிறார்களே?"

"என்னை இங்கே ஒண்டியாக விட்டுவிட்டு அவர்களை மட்டும் அழைத்துக் கொண்டு போவீர்களா?"

"இங்கே நீ ஒண்டியாக இருப்பானேன்? இது என்ன காடா? வீடுதானே? தாமாவும் பாமாவும் உன்னைப் பார்த்துக் கொள்வார்கள்."

"அவர்களோடு என்னால் பேசிக் கொண்டிருக்க முடியாது."

"அப்படியானால் பேசாமல் படுக்கையில் படுத்துக் கொண்டிரு!"

"அப்படியாவது நீங்கள் போய்த்தான் தீரவேண்டுமா?"

"போய்த்தான் தீரவேண்டும். போட்ட திட்டத்தை உன்னுடைய தலைவலிக்காக மாற்ற முடியாது."

"நான் செத்துப் போனால் அப்போதாவது போட்ட திட்டத்தை மாற்றுவீர்களா?"

"செத்துப் போய்ப்பார்! அப்போது தெரிகிறது!"

சீதாவுக்கு அழுகையும் ஆத்திரமுமாக வந்தது. ஆயினும் அப்போது ராகவனோடு தகராறு செய்வதில் பயனில்லை என்று உணர்ந்தாள்.

"பெண் ஜன்மம் எடுத்தாகி விட்டது. தலைவலி என்று சொன்னால் என்ன பிரயோஜனம்? யார் கவனிப்பார்கள்? இங்கே தனியாகக் கிடந்து சாவதைக் காட்டிலும் உங்களுடன் வந்தே பிராணனை விடுகிறேன்!" என்று சொன்னாள்.

"விடுகிற பிராணனைச் சீக்கிரமாக விட்டுத் தொலைக்கலாம். புறப்படு உடனே!" என்றான் ராகவன்.

காரில் போகும்போது இருவரும் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. சீதா மட்டும் அடிக்கடி கைக்குட்டையால் தன் கண்களைத் துடைத்துக் கொண்டிருந்தாள்.

தாரிணியும் நிருபமாவும் இறங்கியிருந்த ஜாகையின் வாசலில் வண்டி நின்றது. மேல் மாடியின் முகப்பில் நிருபமா வந்து நின்று, கையைத் தட்டி அழைத்து, "கொஞ்சம் இப்படி வந்து உட்காருங்கள். தாரிணிக்கு இன்னும் பத்து நிமிஷம் ஆகும்" என்று சொன்னாள்.

ராகவன் சீதாவைப் பார்த்து, "மேலே போகலாம், வருகிறாயா?" என்று கேட்டான்.

"நான் வரவில்லை; காரிலேயே இருக்கிறேன். எப்போதாவது நான் புறப்பட ஒரு நிமிஷம் தாமதமானால்

பிரமாத கோபம் வந்துவிடும். 'இப்போது மட்டும்?'' என்ருன்.

"ஏதாவது உளறிக்கொண்டிராதே! தெரியுமா?'' என்று ராகவன் கோபமாகச் சொல்லிவிட்டுக் காரிலிருந்து இறங்கி வீட்டுக்குள் சென்ருன்.

சீதாவுக்குக் காரில் உட்கார்ந்திருந்த ஒவ்வொரு நிமிஷமும் ஒரு யுகமாக இருந்தது. அத்தகைய பல நிமிஷங்களுக்குப் பிறகு, மேலே கலகல வென்று சிரிப்புச் சத்தம் கேட்டது. அந்தச் சிரிப்புச் சத்தம் சீதாவின் நெஞ்சில் நெருப்பை மூட்டியது. தலையைச் சிறிது காருக்கு வெளியில் நீட்டி மேலே அண்ணாந்து பார்த்தாள். சிறிது நேரம் வரையில் பேச்சுச் சத்தமும் சிரிப்புச் சத்தமும் கேட்டதே தவிர, கண்ணுக்கு ஒன்றும் தெரியவில்லை. சட்டென்று பலகணிக்கருகே ஒரு காட்சி தென்பட்டது. ராகவன் ஏதோ ஒரு கவரைக் கையில் பிடித்துக் கொண்டு தாரிணியிடம் அதைக் கொடுக்கப் போனன். அவள் அதைப் பெற்றுக் கொள்ள மறுத்தாள். ராகவன் சட்டென்று அவளுடைய கரத்தைப் பிடித்துப் பலாத்காரமாக அந்தக் கவரைத் திணிக்க முயன்ருன். அப்படியும் அதைப் பெற்றுக் கொள்ளாமல் தாரிணி தன்னை விடுவித்துக் கொண்டு ஓடினன். ராகவன் அவளைத் தொடர்ந்து பின்னல் ஓடினன்.

அரை நிமிஷ நேரமே நீடித்திருந்த இந்தக் காட்சி சீதாவின் உள்ளமாகிற காமிராவில் படமாகப் பதிந்து விட்டது. சிறிது நேரம் சிந்தனை சக்தியையே இழந்திருந்தாள். பின்னர் ஏதேதோ சந்தேகங்கள் உதித்து மனதை அரிக்கத் தொடங்கின. உடம்பெல்லாம் விடவிடவென்று நடுங்கும் படியாக மனதில் அளவில்லாத ஆத்திரம் பொங்கியது.

சிறிது நேரத்துக்கெல்லாம் ராகவனும் தாரிணியும் மட்டும் கீழிறங்கி வந்தார்கள். தாரிணியைப் பின்னல் சீதாவுக்குப் பக்கத்தில் உட்காரச் செய்து விட்டுத் தான் முன்னல் டிரைவர் பக்கத்தில் அமர்ந்தான். நிருபமா பின்னல் வருவாள் என்று சீதா நினைத்தாள். ஆனல் அவள் வராமலே கார் புறப்பட்டதைக் கண்டதும் துணுக்குற்ருள். அதைப்பற்றி விசாரிக்க விரும்பினலும், பேசுவதற்கு நா எழவில்லை.

தாரிணி சீதாவின் முகத் தோற்றத்தைப் பார்த்து விட்டு, "ஏன் இப்படி ஒருமாதிரியாயிருக்கிருய், சீதா! உடம்பு ஏதாவது சரிப்படவில்லையா, என்ன?'' என்று கேட்டாள்.

"ஆமாம்; காலையிலிருந்து தலை வலி!'' என்று சீதா முணுமுணுத்தாள்.

"அடாடா! ரொம்பத் தலைவலி போலிருக்கிறதே! குரல்கூட எப்படியோ ஆகிவிட்டதே! இதோடு வெளியில் புறப்படாவிட்டால் என்ன? நாளைக்குப் போயிருக்கலாமே? ஏரி எங்கே ஓடியா போகிறது?'' என்று தாரிணி கூறியது சீதாவின் மனதில் எரிகிற தீயில் எண்ணெய் விட்டது போன்ற பலனை அளித்தது.

"வரவில்லை யென்று சொன்னல் கேட்டால்தானே?'' என்ருன்.

சற்றுப் பொறுத்துத் தாரிணி "உடம்பு சரியில்லை யென்றுதான் நிருபமாகூட வராமல் நின்று விட்டாள். இப்போதுகூட மோசம் போய் விடவில்லை. திரும்பிப் போய்விடலாம்! என்ன, மிஸ்டர் ராகவன்!'' என்ருள்.

அதற்கு ராகவன், "அவ்வளவு ஒன்றும் அவளுக்குப் பிரமாதமான தலைவலி இல்லை. ஏரியில் படகிலே போனல் ஒரு வேளை தலைவலி தீர்ந்தாலும் தீர்ந்து விடும்!'' என்ருன்.

"அதுவும் உண்மைதான்!'' என்று சொன்னள் தாரிணி.

* * *

நீல வானத்திலிருந்து ஒரு பெரும் பகுதியை எடுத்துப் பூமியில் வைத்தது போலிருந்தது ரஜனிபூர் ஏரி.

அதன் இரு பக்கங்களில் இரண்டு மலைத் தொடர்கள் சொர்க்கத்தைப் பாதுகாக்கும் மதில் சுவர்களைப்போல் உயர்ந்து நின்றன.

மற்ற இரு புறங்களில் பசுமையான மரங்கள் அழகிய நீல வர்ணச் சித்திரத்துக்குப் பச்சை வர்ணச் சட்டங்கள் போட்டதுபோல் நின்றன.

அங்கே நள்ளிரவின் நிச்சப்தம் நிலவியது. வைகறையின் சலனமற்ற சாந்தம் குடி கொண்டிருந்தது. மாலை நேரத்தின் மனோகரம் பரவியிருந்தது.

அந்த விஸ்தாரமான நீல நிற நீர்ப் பரப்பைப் பார்க்கும்போது, ஞானிகள் எங்கும் நிறைந்த பரம்பொருளைத் தங்களுக் குள்ளே காணும்போது அடையும் ஆனந்தத்தைப் பாமர ஜனங்களும் அடைவார்கள்.

காதலர்கள் தங்களுடைய காதலி களின் கண்களுக்குள்ளே தங்கள் பிரதி பிம்பத்தைக் காணும்போது அடையும் களிப்பை அந்த ஏரி நீரில் தங்கள் உருவப் பிரதிபலிப்பைப் பார்க் கும் எவரும் பெறுவார்கள்.

முதன் முதலிலே பெற்றெடுத்த குழந்தையின் இதழ்களில் இலேசாக அரும்பும் புன்னகையைப் பார்க்கும் போது அன்னைக்கு உண்டாகும் மகிழ்ச்சி, அந்த ஏரி நீரின் சிற்றலைகள் விரியும் காட்சியைப் பார்க்கும் அனைவ ருக்கும் உண்டாகும்.

தும்பை மலரைப்போல் வெண்ணி றத்துடன் விளங்கிய ஆயிரக்கணக் கான பறவைகள் அந்த ஏரி நீரின் மீது கூட்டங் கூட்டமாகப் பறந்து செல் லும் காட்சியை ஒரு முறை பார்த்த வர்கள் என்றென்றைக்கும் மறக்க மாட்டார்கள்.

அத்தகைய ஏரிக்கரையில் வந்து ராகவன், சீதா, தாரிணி மூவரும் காரிலிருந்து இறங்கினார்கள்.

ஏரியின் காட்சியைப் பார்த்து விட்டுத் தாரிணி, "ஆகா! என்ன அழகு! என்ன அழகு! நானும் இயற் கைக் காட்சிகள் எவ்வளவோ பார்த் திருக்கிறேன். இந்த மாதிரி பார்த்த தில்லை!" என்றாள்.

"அதனால்தான் உங்கள் இரண்டு பேரையும் இவ்வளவு வற்புறுத்தி அழைத்து வந்தேன். ஸ்விட்ஸர்லந்தில் உள்ள உலகப் பிரசித்தமான ஏரிகளை இதன் காலிலே கட்டி அடிக்க வேண்டும். ஆயினும் இதைப் பார்ப் பதற்கு உங்கள் இருவரையும் அழைத்து வருவதற்குள்ளே என் பிராணனில் பாதி போய்விட்டது!" என்றான் ராகவன்.

சீதா மட்டும் ஒன்றும் சொல்லாமல் ஏரியை நோக்கிக் கொண்டிருந்தாள். அவள் முகத்திலிருந்த கடுகடுப்பைப் பார்த்துவிட்டுத் தாரிணி "ஏரி என் னமோ அழகாய்த்தானிருக்கிறது. ஆனால் இரண்டு பேராக வந்திருந்தால் இன்னும் நன்றாக இதைப் பார்த்து அநுபவிக்கலாம். அல்லது நாலு பேராக வந்திருக்க வேண்டும்!" என்று கூறினாள்.

அவள் மனதில் நினைத்துச் சொன் னது சீதாவும் ராகவனும் மட்டும் வந்திருக்கலாம் என்று.

ஆனால் சீதா அதைத் தப்பர்த்தம் செய்து கொண்டு, "நான் வரவில்லை என்று ஆனமட்டும் சொன்னேன்; கேட்டால்தானே?" என்று முணு முணுத்துவிட்டு ஏரிக்கரையை நோக்கி விடு விடு என்று நடந்தாள். கரை ஓரமிருந்த மரத்தின் அடியில் உட் கார்ந்து ஏரியைப் பார்க்கலானாள். ஆனால் அவளுடைய கண்கள் ஏரியைப் பார்த்தனவே தவிர, மனது வேறு எங்கேயோ சஞ்சரித்துக் கொண் டிருந்தது. ஏரியின் குளிர்ந்த நீரில் அளாவிக்கொண்டு வந்து உலாவிய காற்று அவளுடைய உடம்பெல்லாம் அக்கினி ஜுவாலையை மூட்டியது.

அவள் விடுவிடு என்று நடந்து போனதைக் கவனித்த தாரிணி, ராக வனைப் பார்த்து, "உங்கள் மனைவி என்ன இன்றைக்கு இப்படி இருக் கிறாளே? இது தலைவலி மட்டும் அல்ல; உள்ளக் கோளாறும் ஏதோ இருக்கும் போலிருக்கிறது" என்று சொன்னாள்.

"இந்த மாதிரி ஒரு ஸீன் உற்பத்தி செய்வாள் என்று தெரிந்திருந்தால் அவளை அழைத்து வந்திருக்கவே மாட்டேன்" என்றான் ராகவன்.

"பெண்களின் மனதை அறியும் சக்தி உங்களுக்கு இல்லவே இல்லை யென்று தெரிகிறது. உங்கள் மனை விக்கு உங்களுடன் தனியாக வந்து உல்லாசமாக இருந்துவிட்டுப் போக வேண்டும் என்று எண்ணம்!"

"அவளைத் தனியாக அழைத்துக் கொண்டு வந்து என்ன செய்கிறது? அவளோடு எந்த விஷயத்தைப் பற்றிப் பேசுகிறது? எங்களிருவருக்கும் பொதுவான விஷயம் எதுவும் இல்லை. அவளுடைய பேச்சு என் மனதில் ஏறவே ஏறாது. நான் பேசுகிற விஷயம் அவளுக்குப் புரியாது."

"அது யாருடைய தப்பு? அவளை நீங்கள் படிப்பித்து உங்கள் நிலைக்குக் கொண்டு வந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் உங்களுடன் சமதையான

"ஏது ஏது? கொலைகாரிக்கு ரொம்பப் பரிந்து பேசுகிறாயே? இப்படிப் பேச எங்கே கற்றுக் கொண்டாய்?" என்றான் ராகவன்.

தாரிணி குறுக்கிட்டு, "அந்த ஸ்திரீ பிறகு என்ன ஆனாளாம், தெரியுமா?" என்று கேட்டாள். இத்தனை நேரம் மௌனமாயிருந்த அவளுடைய குரலில் இப்போது அதிசயமான மாறுதல் காணப்பட்டது. முன்னே சீதாவின் குரல் நடுங்கியது போல் இங்கே தாரிணியின் குரலும் நடுங்கிற்று.

ஆனால் ராகவன் அதைக் கவனியாமல், "யாருக்குத் தெரியும்? இரண்டு வருஷம் சிறையில் இருந்து விட்டு வெளிவந்த பிறகு எங்கே போய்க் கெட்டலைகிறாளோ? அதைப் பற்றி நமக்கென்ன கவலை!" என்றான்.

சீதாவின் மனதில் பம்பாயை விட்டுத் தான் ராஜம்பேட்டைக்குப் புறப்படுவதற்குச் சில நாள் முன்பு கையில் கத்தியுடனே ஒரு ஸ்திரீ வந்திருந்த சம்பவமும், ரயில் ஏறும் போது பத்திரிகையில் படித்தறிந்த விஷயமும், அப்போது தன் மனதில் ஏற்பட்ட சந்தேகமும், இப்போது டில்லிக்கு வந்த பிறகு அன்றொரு நாள் சாலை



முனையில் அதே ஸ்திரீயைக் கையில் கத்தியுடன் பார்த்த விஷயமும் நினைவு வந்தன. அதை யெல்லாம் பற்றிப் பிரஸ்தாபியாமல் வாயை மூடிக்கொண்டிருந்தான். அவனுடைய மனம் அந்த ஸ்திரீ வைத்திருந்த கத்தியின் மேல் அடிக்கடி சென்றது. அவன் இந்த ஊர் ராஜாவைக் குத்திக் கொல்ல முயன்றதற்குத் தக்க காரணம் இருந்திருக்க வேண்டும். என்ன அக்கிரமம் செய்தானே, என்னமோ? ஆனால் புருஷர்கள் மட்டுந்தானா அக்கிரமம் செய்கிறார்கள்? ஸ்திரீகளுந்தான் செய்கிறார்கள். உதாரணமாக, இந்தத் தாரிணியைப் போன்ற வெட்கங் கெட்ட ஸ்திரீயைப் பற்றி என்ன சொல்வது? இப்படிப் பட்டவர்களைக் குத்திக் கொன்றால் கூடப் பாதகம் இல்லை. தன்னிடம் மட்டும் அப்போது ஒரு கத்தி யிருந்தால்?......

தன்னுடைய எண்ணம் எவ்வளவு பயங்கரமான காரியத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்த சீதா திடுக்கிட்டுத் தாரிணியின் முகத்தை நோக்கினள். அவளுடைய நெற்றியிலிருந்த புதுக்காயம் கண்ணில் பட்டது. ஆகா! நல்ல வேலை செய்தான் சூரியா! அவன் மட்டும்



இப்போது இங்கிருந்தால், எவ்வளவு நன்றாய் இருக்கும்? தன்னை விட்டு ஒரு நிமிஷ நேரமும் அகலாமல் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருப்பான் அல்லவா? இவர்கள் இருவரையும் நாம் இலட்சியம் செய்ய வேண்டியதேயில்லையே!

இந்தச் சமயத்தில் ஏரியில் மிதந்து வந்த படகு ஒன்று கரையை அணுகியது. படகில் ஏறிக்கொண்டு வந்தவர்கள் கரையில் இறங்கினார்கள்.

"இந்தப் படகை அமர்த்தட்டுமா? ஏரியில் போய் வரலாமா?" என்று ராகவன் கேட்டான்.

தாரிணி, "நான் தயார்; போகலாம். ஆனால் உங்களுடைய மனைவி என்ன சொல்கிறாளோ?" என்றாள்.

"அவளும் தானே வருகிறாள். அப்படி அவள் வர இஷ்டப்படாவிட்டால், இங்கேயே கரையில் இருக்கட்டும். நாம் இருவரும் போய் வரலாம்."

இப்படிச் சொல்லி விட்டு ராகவன் வாடகைக்குப் படகு அமர்த்திக் கொண்டு வருவதற்காகச் சென்றான்.

* * *

ராகவன் அப்பாலே சென்றதும், தாரிணி சீதாவைப் பார்த்து, "சீதா! உனக்கு ஏதாவது என் பேரில் கோபமா? ஒரு மாதிரியாயிருக்கிறாயே?" என்று கேட்டாள்.

"ஒரு மாதிரி என்ன, ஒரு மாதிரி? எப்போதும் இந்த இலட்சணந்தான்!" என்று சீதா முணுமுணுத்தாள்.

"மறுபடியும் கோபமாகவே பேசுகிறாயே! நான் உன்னோடு சிநேகமாயிருக்க விரும்புகிறேன், சீதா!" என்றாள் தாரிணி.

"எதற்காக? நீயும் நானும் முன் பின் பார்த்தது கூட இல்லையே?" என்று சீதா சொன்னாள்.

இதற்குப் பதில் சொல்ல முடியாமல் தாரிணி திகைத்துப் போனாள்.

சற்றுப் பொறுத்து, "சீதா! உன் கழுத்தில் ஒரு ரத்தின ஹாரம் போட்டிருக்கிறாயே? அது ஏது?" என்று தாரிணி கேட்டாள்.

சீதா திடுக்கிட்டாள். அவள் மனதில் என்னவெல்லாமோ உருத்தெரியாத சந்தேகங்கள் உதித்தன. இந்தப் பாதகி எந்த விதத்திலாவது நம்மைக் கெடுத்து விடுவது என்று தீர்மானித்திருக்கிறாள் போலிருக்கிறது. ஒருவேளை நம் பேரில் திருட்டுக் குற்றம் சாட்டப் போகிறாளோ, என்னமோ? ஐயோ! இந்த நேரத்தில் சூரியா இங்கு இல்லாமற் போய் விட்டானே?

தாரிணி மறுபடியும், "சீதா! நான் கேட்டது உன் காதில் விழவில்லையா? கழுத்தில் ஒரு ரத்தின ஹாரம் போட்டுக் கொண்டிருக்கிறாயே, அது ஏது என்று கேட்டேன்!" என்றாள்.

"என் அம்மா எனக்குக் கொடுத்தாள்! நீ எதற்காகக் கேட்கிறாய்? ஒருவேளை நான் அதைத் திருடி விட்டேன் என்று உனக்கு எண்ணமோ?" என்றாள் சீதா.

"ஐயோ! என்ன கொடூரமாகப் பேசுகிறாய்? அந்த ரத்தின ஹாரம் ரொம்ப அழகாயும் வேலைப்பாடாயும் இருக்கிறபடியால், எங்கே செய்தது என்று தெரிந்து கொள்வதற்காகக் கேட்டேன். இதற்கு ஏன் இத்தனை கோபப் படுகிறாய்?"

"எனக்கு ஒன்றும் கோபமில்லை!"

"கோபமில்லையென்றால் சந்தோஷம். உன் அம்மாவுக்கு எந்த ஊர், சீதா! உன் பிறந்தகம் எங்கே?"

"அதையெல்லாம் பற்றி இப்போது ஒன்றும் என்னைக் கேட்க வேண்டாம். என் மனது சரியாயில்லை."

"அது ரொம்ப நன்றாய்த் தெரிகிறது!" என்றாள் தாரிணி.

* * *

ராகவன் வாடகைப் படகு அமர்த்திக்கொண்டு வந்து சேர்ந்தான்.

"சீக்கிரம் படகில் ஏறுங்கள். ஏற்கெனவே நேரம் ரொம்ப ஆகி விட்டது!" என்றான்.

"அவசியம் படகில் ஏறத்தான் வேண்டுமா? பேசாமல் திரும்பிப்போய் விடலாமே?" என்றாள் தாரிணி.

"அழகாயிருக்கிறது! இந்தப் படகோட்டியுடன் எவ்வளவோ வாதாடிப் படகு கொண்டு வந்திருக்கிறேன். நீங்கள் இப்போது தகராறு செய்யாதீர்கள். சீதா! எழுந்திரு! சீக்கிரம் வந்து படகில் ஏறு!"

சீதா எழுந்து வந்தாள். அவளுடைய கையைப் பிடித்துப் படகிற்குள்ளே ஏற்றிவிட்டான் ராகவன். பிறகு தாரிணி தயக்கத்துடன் வந்து தானாகவே படகில் ஏற முயன்றாள். அது சாத்தியப்படவில்லை. படகு நகர்ந்து நகர்ந்து சென்று கொண்டிருந்தது.

"சொன்னால் கேட்கிறீர்களா? இங்கே கையைக் கொடுங்கள்!" என்று கூறி ராகவன் தாரிணியையும் படகிற்குள் ஏற்றிக் கொண்டான்.

தாரிணி சீதாவின் பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டாள்.

ராகவன் அவர்களுக்கெதிரே யிருந்த படகுச் சட்டத்தில் உட்கார்ந்தான்.

படகு நகரத் தொடங்கியது.

இதற்கிடையில் திடீரென்று வானம் கருத்து மேகமண்டலங்கள் திரளுவதையும், காற்று பலமாக அடிக்கத் தொடங்கி யிருப்பதையும் அவர்கள் யாரும் கவனிக்கவில்லை.

ஏரிக்கரைக்கு அவர்கள் வந்தசமயம் ஏரியின் நீர்ப் பரப்பில், கடற்கரை மணலில் தோன்றுவது போன்ற பூ அலைகள் எழுந்து சத்தமின்றி விரிந்து பரவி மீண்டும் ஜலத்திரளில் மௌனமாகக் கலந்து கொண்டிருந்தன.

இவர்கள் ஏறிய படகு புறப்பட்ட சமயத்திலோ அலைகள் ஒரு அடி உயரம் எழும்பி விழுந்தன. ஆங்காங்கு அலைகளின் நுனியில் வெண்ணுரை காணவும் ஆரம்பித்திருந்தது. அலை அடிக்கும் ஓசை 'கும்' என்று கேட்கத் தொடங்கி யிருந்தது.

ஏரிக் கரையிலிருந்து அதன் நடுவில் இருந்த சோலைத் தீவு சுமார் இரண்டு பர்லாங்கு தூரம் இருக்கும். தீவை நோக்கிப் படகு போகலாயிற்று.

அரை பர்லாங்கு தூரம் போவதற்குள் காற்றின் வலிவு அதிகமாகி விட்டது. அலைகள் திரைத்தெழுந்து நுரை பொங்கி ஒரு கஜம் உயரம் வரையில் எழுந்து விழுந்தன. அலைகளின் சத்தம் 'ஹோ!' என்ற பெரும் ஓசையாகி விட்டது. படகு அப்படியும் இப்படியும் பலமாக ஆடி எழுந்து விழுந்தது.

படகுக்காரன் அவனுடைய பாஷையில் ஏதோ சொன்னான்.

தாரிணி, "இதென்ன, காற்று இவ்வளவு பலமாகி விட்டதே! திரும்பிப் போய் விடலாமா?" என்றாள்.

"அதெல்லாம் முன் வைத்த காலைப் பின் வைக்க முடியாது. உயிருக்கு அவ்வளவு பயப்பட வேண்டுமா?" என்றான் ராகவன்.

சீதா நாலா பக்கமும் திரும்பித் திரும்பிப் பார்த்துத் திரு திரு வென்று விழித்தாள். திடீரென்று "ஐயோ! அம்மா! எனக்குப் பயமா யிருக்கிறதே!" என்று கூச்சலிட்டு விட்டு விம்மத் தொடங்கினாள்.

ராகவன் மிகக்கடுமையான குரலில் "சீதா! இது என்ன மடத்தனம்? அழுகையை உடனே நிறுத்துகிறாயா, இல்லையா?" என்றான்.

சீதாவின் வெறி இன்னும் அதிகமாயிற்று. "ஐயோ! அம்மா! நீ சொன்னது சரியாய்ப் போய் விட்டதே; அலையில் விழுந்து நான் சாகப் போகிறேனே!" என்று அலறினாள்.

இந்த எதிர்பாரா நிலைமை ராகவனைக் கலங்க அடித்து விட்டது. அவன் மனக் குழப்பத்துடன் தாரிணியைப் பரிதாபமாகப் பார்த்தான்.

"இந்தச் சனியன்களை யெல்லாம் இதற்குத் தான் வெளியில் அழைத்துக் கொண்டு புறப்படக் கூடாது என்கிறது. நீங்கள் கொஞ்சம் சமாதானப் படுத்திப் பாருங்களேன்!" என்றான்.

"மிஸ்டர் ராகவன்! சமாதானப் படுத்திப் பயனில்லை. உங்கள் மனைவிக்கு 'ஹிஸ்டீரியா' மாதிரி இருக்கிறது. படகுக் காரனை உடனே கரைக்குத் திரும்பச் சொல்லுங்கள். வேறு வழியில்லை!" என்றாள்.

ராகவனும் படகுக்காரனை இரைந்து கூப்பிட்டு, "கரைக்குத் திரும்பு!" என்று உத்திரவிட்டான்.

படகுக்காரன் "குச் டர் நஹி, ஸாகிப்!" என்றான்.

"எப்படியிருந்தாலும், சரி! கரைக்கு உடனே படகைத் திருப்பு!" என்று ராகவன் கத்தினான்.

"படகுக்காரன் திருப்பமாட்டான்! அவனுக்கு யாரோ சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள்!" என்று கூவிவிட்டு, சீதா மேலும் விம்மினாள்.

"ஏதாவது பிதற்றாதே, சீதா! வாயை மூடு!" என்று ராகவன் அதட்டிவிட்டு, படகுக்காரனை மறுபடி பார்த்து, "திருப்பு உடனே! திருப்புகிறாயா, இல்லையா?" என்று கத்தினான்.

"டீக், ஸாகிப்! டீக்!" என்றான் படகுக்காரன்.

உண்மையென்னவென்றால், படகுக்காரன் படகைத் திருப்பத்தான் பார்த்தான். ஆனால் காற்றினாலும் அலையினாலும் அது அவ்வளவு சுலபமாயில்லை. படகுக்காரன் எவ்வளவு பலமாகக் கழியைப் போட்டாலும், படகு சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

இதற்குள் சீதாவின் விம்மல் சத்தம் அதிகமாயிற்று. இடையிடையே "அம்மா! அம்மா! நீ சொன்னது சரியாய்ப் போயிற்றே!" என்று அலறிக் கொண்டுமிருந்தாள். அவளுடைய கைகள் வெடவெட வென்று நடுங்கிக்கொண்டிருந்தன.

இதைப் பார்த்த தாரிணி, "மிஸ்டர் ராகவன்! 'ஹிஸ்டீரியா' அதிகமாகிக் கொண்டிருக்கிறது. நீங்களும் இங்கே பக்கத்தில் வந்து உட்கார்ந்து கையைப் பிடித்துக் கொள்ளுங்கள்!" என்று சொல்லிவிட்டு, சீதாவின் ஒரு கையைத் தான் கெட்டியாய்ப் பிடித்தாள்.

தாரிணி பிடித்த கையைச் சீதா பலமாக உதறி விடுவித்துக் கொண்டு ஒரு துள்ளுத் துள்ளிப் படகில் எழுந்து நின்றாள். படகோ பேயாட்டம் ஆடிக் கொண்டிருந்தது.

"ஓகோ! எனக்கு 'ஹிஸ்டீரியா' என்று சொல்லி ஜலத்தில் தள்ளிவிடப் பார்க்கிறாயோ? எனக்கு ஒன்றும் 'ஹிஸ்டீரியா' இல்லை! நான் விழமாட்டேன்!" என்று கூவினாள்.

"சீக்கிரம்! இவளை வந்து உடனே பிடித்துக் கொள்ளுங்கள்!" என்று தாரிணி கத்தினாள்.

ராகவன் எழுந்து சீதாவை நோக்கி ஒரு அடி எடுத்து வைத்தான்.

அந்தச் சமயத்தில் படகை ஒரு பெரும் அலை மோதியது. படகு ஒரே ஆட்டமாகத் தலை குப்புறக் கவிழ்ந்து விடும்போல் ஆடியது.

ராகவன் படகுக்குள்ளே கால் தடுமாறி விழுந்தான்.

சீதா "வீல்!" என்று கத்திக் கொண்டு தண்ணீரில் விழுந்தாள்.

தாரிணி "ஐயோ! கடவுளே!" என்று அலறினாள்.

படகுக்காரன் தன்னுடைய பாஷையில் ஏதோ உளறிக் கொட்டினான்.

கவிழ்ந்துவிடும் போலிருந்த படகு எழுந்து நிமிர்ந்தது.

தண்ணீரில் மூழ்கிய சீதா மேலே வந்து கொண்டிருந்தாள்.

நிமிர்ந்த படகு சீதாவை விட்டு அகன்று போய்க் கொண்டிருந்தது.

சீதா ஒரு தடவை தலையைத் தண்ணீருக்குமேல் தூக்கி "அம்மா!" என்று அலறினாள். அந்த அலறல் சத்தம் காற்றின் பேரொலிக்கும் அலைகளின் பெரும் ஓசைக்கும் மேலே கேட்டது. தாரிணி—ராகவன் இவர்களுடைய நெஞ்சில் ஈட்டி பாய்வது போல் அந்த அபயக்குரல் பாய்ந்தது.

தாரிணி "என்ன சும்மா நிற்கிறீர்களே! தண்ணீரில் குதித்து அவளைக் காப்பாற்றுங்கள்!" என்று கூவினாள்.

தடுமாறி விழுந்த ராகவன் அப்போது தான் சமாளித்து எழுந்தான்.

"ஐயோ! எனக்கு நீந்தத் தெரியாதே!" என்று சொல்லி விட்டு, சீதாவின் தலை தெரிந்த இடத்தைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

ராகவனுடைய அந்தரங்கத்தில் அப்போது ஒரு கணம் ஒரு பயங்கரமான எண்ணம் உதயமாயிற்று. "ஒரு வேளை இது தான் விதி போல் இருக்கிறது. சீதா இறந்து போனால்?..." மேலே அந்தப் பயங்கர எண்ணத்துக்கு இடங் கொடுக்க விரும்பாமல், "படகுக்காரா! அடே படகுக்காரா!..." என்று ராகவன் கூவினான்.

முழுகிக் கொண்டிருந்தவளின் பக்கத்தில் படகைக் கொண்டு போகும்படி சொல்ல அவன் உத்தேசித்திருந்தான். ஆனால் அதற்குள்ளே வேறு ஒரு எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்து விட்டது. தாரிணி படகிலிருந்து தண்ணீரில் குதித்து சீதா முழுகிக் கொண்டிருந்த இடத்தை நோக்கி வெகு லாகவமாக நீந்திப் போய்க் கொண்டிருந்தாள்!

அந்த அதிசயத்தைப் பார்க்க வருணனும் வாயுவும் ஸ்தம்பித்து நின்றார்கள்.

காந்தி மலர்

இந்தியாவின் தந்தையான காந்தி மகாத்மாவின் பிறந்த தினம் அக்டோபர் மாதம் 2-ந் தேதி வருகிறது. அந்தப் புனித தினத்தை முன்னிட்டு அடுத்த வாரத்துக் கல்கி இதழ் 2—10—1948 அன்று அதிக பக்கங்களுடனும் மூவர்ண அட்டைச் சித்திரத்துடனும் பல விசேஷ அம்சங்களைத் தாங்கிக் கொண்டு காந்தி மலராக வெளி வருகிறது. "கல்கி" காந்தி மலரின் விலை வழக்கம் போல் நாலு அணாத் தான்.

ஆல் இந்தியா ரேடியோ

ரேடியோ நாடகப் பரிசு

•

தமிழில் மூன்று சிறந்த ரேடியோ நாடகங்களுக்கு மூன்று பரிசுகள் வழங்கப்படும். முதற் பரிசு ரூ. 500/-, இரண்டாவது பரிசு ரூ. 300/-, மூன்றும் பரிசு ரூ. 100/-.

இத்திட்டத்தில் கலந்துகொள்ள விரும்புவோர் நிலைய நிர்வாகஸ்தர், ஆல் இந்தியா ரேடியோ, திருச்சிராப்பள்ளி அல்லது மதராஸுக்கு எழுதி முழு விவரமும் பெற்றுக்கொள்ளலாம். பரிசு சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் ஆல் இந்தியா ரேடியோ டிரக்டர் - ஜெனரலின் தீர்ப்பே முடிவானதும், சட்டபூர்வமானதும் ஆகும்.

நாடகங்கள் மேற்கண்ட நிலையங்களுக்கு வந்து சேர வேண்டிய கடைசி தேதி 1—12—1948.

No. 4

சரித்திரம் சொல்லும் சாட்சி



ஜெயமணி

உலகப் பிரசித்தி பெற்ற கோல்கொண்டா கோட்டை கொத்தளங்கள்.

"நிஜாம் பிரதிநிதிகள் ஐக்கிய நாடுகள் சபைக்குச் சென்று முறையிட்டுக் கொள்ளத் தீர்மானித்திருக்கிறார்களே, அவர்கள் அங்கு செல்வதற்கு வேண்டிய பிரயாண வசதிகள் அளிக்கப்படுமா?" என்று சில நாட்களுக்கு முன் இந்தியா பார்லிமெண்டில் ஒரு பிரமுகர் கேட்டார்.

"ஓ! பேஷாக அளிக்கப்படும். அந்தச் சபையிடம் ஜமீன்தார்கள் முறையிட்டுக் கொள்ள விரும்பினாலும், அவர்களுக்கும் அங்கு செல்வதற்கு வேண்டிய சாதாரண வசதிகளைச் செய்து கொடுப்போம்" என்று சர்தார் பட்டேல் பதில் அளித்தார்.

சுருக்கமான அந்தப் பதிலில் ஹாஸ்யச் சுவை ததும்புவதுடன், சர்வ தேசிய அந்தஸ்து இல்லாதவர்கள் மேற்படி உலக சபையில் முறையிட்டுக் கொள்வது எவ்வளவு மடத்தனம் என்பதையும் அது சொல்லாமல் சொல்லி விளங்க வைப்பதாக இருக்கிறது.

மகா ராஜாதி ராஜாக்கள், இஸ்பேட் ராஜாக்கள், ஜமீன்தார்கள், இனாம்தார்கள், பட்டாதார்கள் முதலிய ஒவ்வொரு கோஷ்டியினரும் தங்களுக்குச் சுதந்திர உரிமையும் சர்வதேச அந்தஸ்தும் உண்டென்று சொல்லிக்கொண்டு, ஐக்கிய நாடுகள் சபையிடம் முறையிட்டுக் கொள்ள முற்படுவார்களாயின், பின்னர் அந்தச் சபைக்கு உண்மையான சர்வ தேச விஷயங்களைக் கவனிக்கவே நேரம் இராமற் போய்விடும். ஜமீன்தார்களுக்கும் பட்டாதார்களுக்கும் அத்தகைய உரிமை உண்டு என்றால், உலகத்திலுள்ள ஒவ்வொரு தனி நபருக்கும்கூட அதே உரிமை உண்டு என்று ஏற்பட்டுவிடும்! பிறகு சர்வ தேச மகா சபை சர்வ ஜன விநோத சபையாக மாற வேண்டியதுதான்!

நிஜாம் தம்முடைய ராஜ்யம் ஒரு சுதந்திர ராஜ்யம் என்றும், எனவே அதற்குச் சர்வ தேச அந்தஸ்து உண்டென்றும் கூறி வந்தார்.

நிஜாம் ராஜ்யம் என்றைக்காவது சுதந்திரமாக இருந்தது உண்டா? சுதந்திரம் பெற நிஜாம் வீர தீர சௌர்ய பராக்கிரமமான என்னென்ன காரியங்களைச் செய்தார்? பெற்ற சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக நிஜாம் வம்சத்தினர் எக்காலத்திலாவது ஏதாவது தியாகம் செய்தது உண்டா? அவர்களுடைய சுதந்திரத்தை அபகரிக்க முற்பட்டவர்களிடம் அவர்கள் எவ்வாறு நடந்து கொண்டனர்? நிஜாம் பரம்பரை ஒரு தடவையாவது போரில் வெற்றி பெற்றது உண்டா? அவர்கள் எத்தனை பேர்களிடம் எத்தனை தடவைகள் சரணாகதி அடைந்தனர்?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் சிறிதளவும் சந்தேகத்துக்கு இடமின்றி, யாரும் மறுக்க முடியாதவாறு சரித்திரம் பதில் அளிக்கின்றது. எனவே, நிஜாம் பரம்பரையின் பூர்வாசிரம வரலாறுகள் பற்றிச் சரித்திரத்தின் ஏடுகளைச் சற்றுப் புரட்டிப் பார்க்கலாம்.

• • •

ஒரு காலத்தில் கிழக்கே சீனாவிலிருந்து மேற்கே அட்லாண்டிக் மகாசமுத்திரம் வரையில் அராபிய சாம்ராஜ்யம் பரந்து விரிந்து கிடந்தது. வட ஆப்பிரிக்கா, ஸ்பெயின், பிரான்ஸ் முதலிய பல தேசங்களிலும் அராபியர் ஆதிக்கம் செலுத்தலா

யினர். ஆனால், அவர்கள் எவ்வளவோ முயற்சி செய்தும் இந்தியாவில் மாத்திரம் சில நூற்றாண்டுகள் வரையில் அவர்களால் ஆதிக்கம் செலுத்த முடியவில்லை. பல தடவைகளிலும் இந்திய வீரர்கள் அவர்களுடைய படையெடுப்புகளைத் தகர்த்து அவர்களை முறியடித்தனர்.

இந்திய வீரர்கள் வெற்றி பெற்றபின் வெகு காலம் வரையில் இந்தியாமீது முஸ்லிம்களின் படையெடுப்பு எதுவும் இல்லாததால், மேற்படி படையெடுப்பு ஆபத்து அடியோடு ஒழிந்து விட்டது என்று கருதி ஹிந்து மன்னர்கள் தங்களுக்குள் சச்சரவிட்டுக் கொண்டிருந்தனர். பின்னர் கஜ்னி முகம்மது திடீரென்று இந்தியா மீது படையெடுக்க ஆரம்பித்தபோதுதான் இந்திய மன்னர்கள் திடுக்கிட்டு, படையெடுப்பு ஆபத்து தீரவில்லை என்பதை உணர்ந்து கொண்டார்கள்.

இந்தியா மீது மொகலாயர்களின் படையெடுப்புகளை இந்தியர்கள் மறப்பதென்பது முடியாத காரியம். அப்போது தான் இந்திய நகரங்கள் சூறையாடப்பட்டன; அற்புத சிற்பக் கலையின் சிகரமாக விளங்கிய ஆலயங்கள் தரைமட்ட மாக்கப்பட்டன; விக்ரகங்கள் சின்னாபின்னமாயின; விலையிலாப் பொக்கிஷங்கள் கொள்ளையடிக்கப் பட்டன; பல புனித ஸ்தலங்கள் படுகளங்களாக்கப் பட்டன. சகிக்க முடியாத அத்தகைய அழிவுக்கெல்லாம் காரணமான மொகலாயர் ஆட்சிக் காலத்தை இந்தியர்கள் எவ்வாறு மறக்க முடியும்?

முதன் முதலாக, பன்னிரண்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியாவில் டில்லியைத் தலைநகராகக் கொண்டு மொகலாய சாம்ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டது. பிறகு குஜராத், வங்காளம், தக்ஷிணம் (டெக்கான்) முதலிய பிரதேசங்களிலும் மொகலாயரின் ஆட்சி பரவியது. ஈவிரக்கமற்ற மொகலாயர்கள் ஹிந்துக்களின் தர்ம சிந்தனையையும் ஜீவகாருண்ய உணர்ச்சியையும் தங்களுக்குச் சாதகமாக உபயோகப் படுத்திக் கொண்டு, மத மாற்றம் என்ற கொள்கைக்குப் பதினாயிரக்கணக்கான ஹிந்துக்கள் பலியாகும்படி செய்தனர்.

மொகலாயரின் ஆட்சிக் காலத்தில் பட்டத்துக்கு வருவதற்காகச் சகோதரர்களைக் கொலை செய்வதும், நகரங்களைக் கொள்ளையடிப்பதும் சர்வ சகஜமாக நிகழ்ந்து வந்தன! சைன்யங்களுடன் சென்று நிரபராதிகளான ஜனங்கள் வசிக்கும் நகரங்களைச் சூறையாடுவதில் முஸ்லிம் மன்னர்கள் ஒருவருக்கொருவர் போட்டி போட்டனர். தைமூரும், நாதிர்ஷாவும் டில்லிமா நகரைச் சூறையாடி அடித்த சரித்திரப் பிரசித்தி பெற்ற கொள்ளைகளுக்கு உலகில் உவமையே இல்லை! அதனால் தான், ஹைதராபாத் ரஸாக்கர்களும் அவர்களுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றினர் போலும்!

இந்தியாவை ஆட்சி புரிந்த மொகலாய சக்கரவர்த்திகளுள் முகம்மது கோரி, முகம்மது துக்லக், பேபர், அக்பர், ஜஹாங்கீர், ஷாஜஹான், ஔரங்கசீப், ஷா ஆலம் முதலியவர்கள் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

அவர்களில் அக்பர் சக்கரவர்த்தியின் ஆட்சியைத் தவிர மற்றவர்களுடைய ஆட்சியில் எத்தனையோ குறைகளும், கோரங்களும் இருந்தன. அக்பருடைய சிறந்த ஆட்சியின் பலனாக மொகலாய சாம்ராஜ்யம் நன்கு ஸ்தாபிக்கப்பட்டது. ஹிந்து, முஸ்லிம் என்ற வேற்றுமை எதுவுமின்றி சகல மதத்தினருடைய அன்பையும் அவர் பெறுவது சாத்தியமாயிற்று. அதனால் அக்பரின் சைன்யங்கள் தோல்வி என்பதையே அறியாது வெற்றி பெற்றனர்.


ஔரங்கசீப் காலத்திலோ வெனில், நிலைமை அதற்கு நேர் மாறாக இருந்தது. மொகலாய சக்கரவர்த்திகளுக்குள் ஔரங்கசீப்தான் அபார திறமையும் உறுதியும் வாய்க்கப் பெற்றிருந்தார். எனினும் அவரது திறமையும் உறுதியும் துஷ்பிரயோகம் செய்யப் பட்டதால், இறுதியில் மொகலாய சாம்ராஜ்யமே சீரழிந்து சின்னாபின்ன மாகியது.

அக்பரின் சர்வ மத சம்மதமான கொள்கை இஸ்லாம் மத வெறியரான ஔரங்கசீப்புக்கு விஷமாக அமைந்தது.



அக்பர்


எனவே அவர் மதத்தை அடிப்படையாகக் கொண்டு தமது ராஜ்யத்தை ஸ்தாபிக்க முற்பட்டார். ஆலயங்களை அழிப்பதையும், ஹிந்துக்களை இடைவிடாது ஹிம்சிப்பதையுமே தமது குறிக்கோளாகக் கொண்டார். ஔரங்கசீப் கைக்கொண்ட அக்கிரமமான முறைகளிலிருந்தே மொகலாய சாம்ராஜ்யத்தை



1911-ம் வருஷம் டில்லியில் மகுடாபிஷேக வைபவம் நடந்தபோது ஐந்தாம் ஜார்ஜ் மன்னருக்கும் மேரி ராணிக்கும் நிஜாம் தலைவணங்கி சலாம் செய்யும் காட்சி.

அழிக்கும் நிலை மூண்டது. எவ்வளவு சக்தியும், திறமையும், உறுதியும் வாய்க்கப் பெற்றவராயினும், அட்டூழியங்களை விடுத்து ஜனங்களின் ஆதரவைப் பெற்றாலன்றி அத்தகையோர் அழிவது நிச்சயம் என்பதற்கு ஔரங்கசீப்பின் வாழ்க்கை, சரித்திரம் உள்ளளவும் உதாரணமாக விளங்கி வரும்.

மொகலாய ராஜ்யத்தின் ஒரு மாகாணமான தக்ஷிணம் அதாவது இன்றைய ஹைதராபாத் பிரதேசத்தை பஹ்மானி வம்ச மன்னர்கள் 1347 லிருந்து 1512ம் வருஷம் வரையிலும், குதுப் ஷாஹி வம்ச மன்னர்கள் 1521 - லிருந்து 1687 வரையிலும் ஆட்சி புரிந்தார்கள். முறையே குல்பர்க்கும் கோல் கொண்டாவும் பஹ்மானி, குதுப் ஷாஹி மன்னர்களின் தலை நகரங்களாக விளங்கி வந்தன. அக்காலத்துக்கு முன் அது வாரங்கல்லில் ஆட்சி புரிந்த ஹிந்து ராஜாக்களின் ஆதிக்கத்தில் இருந்து வந்தது.



ஔரங்கசீப்

அங்கு மொகலாயர்களின் ஆதிக்கம் ஏற்படுவதற்கு முன்பே பல நூற்றாண்டுகளாக கோல் கொண்டா உலகப் பிரசித்தி பெற்று விளங்கியது. அந்த நகரிலுள்ள கோட்டைகள், கொத்தளங்கள், மாடமாளிகைகள் சுரங்கங்கள் முதலியன ஒரு புறமிருக்க, கோஹினூர் போன்ற வைரங்களுக்குப் பிரசித்தி பெற்ற இடம் அது தான். அங்கு இருக்கிற நதிப் படுகையில் வைரச் சுரங்கங்கள் இருப்பதாகச் சரித்திராசிரியர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர்.

முகம்மது துக்லக் காலத்தில் இருந்த ஹஸன் அல்லது கங்கு பஹ்மானி என்ற ஓர் ஆப்கன் அதிகாரி ஹைதராபாத்தைச் சேர்ந்த குல்பர்க்காவைத் தலைநகரமாகக் கொண்டு பஹ்மானி ராஜ்யத்தை ஸ்தாபித்தான். பஹ்மானி ராஜ்யமும், கோல் கொண்டாவைத் தலைநகரமாகக் கொண்ட குதுப் ஷாஹி ராஜ்யமும் மறைந்த பின், 1724ல் ஹைதராபாத்தைத் தலைநகராகக் கொண்டு அஸாப் ஜா நிஜாம் உல் முல்கின் ராஜ்யம் ஏற்பட்டது. அஸாப் ஜா நிஜாம் உல் முல்க் என்ற பட்டம் பெற்ற மீர் கம்ருதீன் அலிகான் டில்லி சக்கரவர்த்தியிடம் ஒரு சாதாரண அதிகாரியாக இருந்தவர். தக்ஷிணப் பிரதேசத்தின் கவர்னராக நியமிக்கப் பெற்றவர்.

எனவே, ஹைதராபாத் டில்லி சக்கரவர்த்தியின் மேலதிகாரத்துக்கு உட்பட்டதாகவே இருந்து வந்தது.

டில்லி சக்கரவர்த்தியால் நியமிக்கப்பட்டு, மொகலாய சாம்ராஜ்யத்தின் மாகாணங்களில் ஒன்றான தக்ஷிணத்தை மேற்பார்வையிடுவதற்காக வந்த அஸாப் ஜா நிஜாம் காலடைவில் தாமும் ஏன் ஒரு மன்னராகி விடக் கூடாது என்று எண்ணினார்.

அப்போது மொகலாய சாம்ராஜ்யத்தைச் சிதறடிப்பதில் மகாராஷ்டிரர்கள் வெற்றி பெற்று வந்தனர். மேற்படி நிஜாம் டில்லி சக்கரவர்த்திக்கு எதிராக மகாராஷ்டிரர்களைத் தூண்டிவிட முற்பட்டார். மகாராஷ்டிரர்களின் சக்தியை எதிர்த்து நிற்க முடியாமல் தவித்து வந்த டில்லி சக்கரவர்த்திக்குத் தமது சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த மாகாணங்களைக் கவனிப்பதற்கு அவகாசம் இருக்க முடியுமா? அதுதான் சமயம் என்று நிஜாம் தமது எஜமானரான டில்லி சக்கரவர்த்தியைத் துரோகம் செய்து விட்டுத் தக்ஷிணத்தைத் தாமே கபளீகரம் செய்தார்.

எனவே, தற்போதைய நிஜாமும் !ரஸ்வி ரோஷ்டியினரும் அடிக்கடி பெருமையுடன் குறிப்பிட்டு வந்த அஸாப் ஜா ராஜ வம்சம் வீரத்தனத்தையோ, வெற்றியையோ, நியாயத்தையோ அடிப்படையாகக் கொண்டதல்ல; துரோகத்தினால் உருவானது என்பது சரித்திரம் சொல்லும் சாட்சியாகும்.

பின்னர் மகாராஷ்டிரர்கள் அஸாப் ஜா மீது படை யெடுத்தபோது, அவர் மேற்படி வீரர்களைக் கண்டு நடு நடுங்கி ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டு புதிதாக அடைந்த தமது ராஜ்யத்தைக் காப்பாற்றிக் கொண்டார்.

அந்த ஒப்பந்தமானது மொகலாய சாம்ராஜ்யத்தின் சிறப்பையே இழிவு படுத்தும் ஒரு தஸ்தாவேஜு என்று சரித்திராசிரியர்களால் வர்ணிக்கப்பட்டிருக்கிறது!

முதலாவது அஸாப் ஜா நிஜாம் 1748-ல் மரணமடைந்த போது, அவருடைய மூத்த புதல்வரும் பட்டத்துக்கு உரியவருமான காஸிர் உத்தின் டில்லியில் இருந்தார். எனவே, அவ்வமயம் ஔரங்காபாத்திலிருந்து மற்ற மூன்று புதல்வர்களும் மூத்த சகோதரரைத் துரோகம் செய்து விட்டுப் பட்டத்துக்காகத் தங்களுக்குள் போட்டி போட ஆரம்பித்தார்கள்.

தக்ஷிணப் பிரதேசத்துக்கு யார் மன்னராக வருவது என்பது பற்றி முதலாவது

உட்கார முடியாது!



"என்னங்க இது? மேலேயே ஏறி வந்து விட்டீங்களே! கொஞ்ச நேரம் கீழே உட்கார்ந்திருக்கக் கூடாதா?"

"உட்கார எனக்கு நேரம் இல்லே. நான் தேர்தலுக்கு நிற்கிறேன். உடனே வந்து உன் ஓட்டைப் போட்டு விட்டுப் போ!"

நிஜாமின் குமாரர்களுக்குள் போட்டா போட்டி ஏற்பட்ட அதே சமயத்தில், இந்தியாவில் யாருடைய ஆதிக்கம் நிலைப்பது என்பது பற்றி பிரிட்டிஷாருக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் பலமான போட்டி உண்டாயிற்று! எனவே, அஸாப் ஜா குமாரர்களுள் ஒருவருடைய கட்சியில் பிரிட்டிஷார் சேர்ந்து கொண்டனர். மற்றொருவருடைய கட்சியில் பிரெஞ்சுக்காரர்கள் சேர்ந்து கொண்டனர். எத்தனையோ சண்டைகளும் சூழ்ச்சிகளும் நடந்தபின் கடைசியில் மூன்றாவது குமாரரான ஸலபட் ஜங் பட்டத்துக்கு வந்தார். ராஜ்ய உரிமை கோரி, டில்லியிலிருந்து திரும்பி வந்த மூத்த குமாரர் விஷமிட்டுக் கொல்லப்பட்டார். இவ்வாறாக, முதலாவது நிஜாம் எஜமானரைத் துரோகம் செய்தும், இரண்டாவது நிஜாம் ஒரு சகோதரரைக் கொலை செய்து மற்றொரு சகோதரரைத் துரோகம் செய்தும் பட்டத்துக்கு வந்தனர். (அடுத்த இதழில் முடியும்.)

ஞாலம் நடுங்க வரும் கப்பல்!

"கப்பல் ஏறுவாயோ — அடிமை
கடலைத் தாண்டுவாயோ?"

என்று இமிர் பிடித்த ஒரு வெள்ளைக்காரன் அந்தக் காலத்திலே கேட்டான்.

அப்படிக் கேட்ட அதே வெள்ளைக்காரன் மாத்திரம் 1948-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 15-ம் தேதி வரை உயிரோடு இருந்து அன்றையதினம் பம்பாயிலே நடந்த மாபெரும் வைபவத்தையும் கண்ணாலே கண்டிருந்தானானால் அவன் மூர்ச்சையாகிக் கீழே விழுந்திருப்பான் என்பது நிச்சயம்.

இந்திய ராணுவம் ஹைதராபாத்துக்குள்ளே புகுந்து ஜயகோஷத்தை முழக்கிக் கொண்டு முன்னேறிக் கொண்டிருந்த போது, பம்பாயிலே ஒரு மிக முக்கிய சம்பவம் நிகழ்ந்தது. அன்றைய தினம் நம்முடைய பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு எத்தனையோ முக்கியமான வேலைகளை யெல்லாம் விட்டு விட்டு பம்பாய்க்கு வந்திருந்தார். பம்பாய் நகர முழுவதும் ஒரே கோலாகலமாக விளங்கியது.

சென்ற மகா யுத்தத்தின்போது, 'கிராப்ஸ் பீ' என்ற ஒரு சிறு ஜெர்மன் யுத்தக் கப்பல் நேச வல்லரசுக் கப்பல்கள் பலவற்றை மூழ்கடித்துப் பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் பெரும் தொல்லையை விளைவித்துக் கொண்டிருந்தபோது, 'அச்சிலீஸ்' என்ற ஒரு பிரிட்டிஷ் கப்பல் வெகு சாமர்த்தியமாக அதை மூழ்கடித்தது எல்லோருக்கும் ஞாபகம் இருக்கும்.

வீரப்பிரதாபங்கள் பல புரிந்த அந்தக் கப்பலை இந்திய சர்க்கார் பிரிட்டிஷ் சர்க்காரிடமிருந்து இப்போது விலைக்கு வாங்கியிருக்கிறார்கள். மேற்படி கப்பல் சென்ற வாரம் பிரிட்டனிலிருந்து பம்பாய்க்கு வந்த போது அதை வரவேற்பதற்காகப் பண்டித நேரு பம்பாய்க்குப் போயிருந்தார்.


மூவர்ணக் கொடி கம்பீரமாகப் பறக்க 'அச்சிலீஸ்' பம்பாய்த் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தது. ஜவாஹர்லால்ஜி அதை வரவேற்றுப் பேசும்போது, இந்தியாவுக்குக் கப்பல் படை இருக்க வேண்டியது எவ்வளவு அவசியம் என்பதை வற்புறுத்தி விட்டு மேலும் கூறியதாவது: "நண்பர்கள் வந்தால் அவர்களை வரவேற்போம்; விரோதிகள் வந்தால் அவர்களை அடித்து விரட்டுவோம். ராயல் இந்தியக் கடற் படை மிக்க சக்தி வாய்ந்ததாக விளங்கப் போகிறது" என்று முழக்கம் செய்தார்.

இந்தப் புதிய கப்பலுக்கு இந்திய சர்க்கார் "டில்லி" என்ற பெயர் சூட்டியிருக்கிறார்கள். இது நம்முடைய கடற்படைக்கு ஏறக்குறைய ஒரு தலைமைக் கப்பலாக விளங்கும். இந்தியக் கடற்படை தளபதி இந்தக் கப்பலிலேதான் இருப்பாராம்.

பொதுவாகச் சொல்லப் போனால், "டில்லி", இந்தியக் கடற் படைக்கே மாபெரும் பக்க பலமாகவும் பெரும் புகழ் அளிக்கத்தக்கதாகவும் விளங்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

* * *

"மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம்"
என்பதாகவும்,
"ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்வோம்"
என்பதாகவும் நம்முடைய கவிச்சக்கரவர்த்தி சுப்ரமண்ய பாரதியார் பாடிக் கனவு கண்ட விஷயம் எவ்வளவு சீக்கிரத்தில் நனவாகிக் கொண்டு வருகிறது!



கர்ணபூஷணமும் கல்யாணமும்

விருதுநகர் தேச பக்தர் ஸ்ரீ மாரியப்பாவின் சகோதரரான சிரஞ்சீவி ரா. தனுஷ்கோடிக்கும் ஸ்ரீ எஸ். கந்தசாமியின் புதல்வி சௌபாக்கியவதி மாரியம்மாளுக்கும் ஆகஸ்ட் மாதம் 8-ம் தேதி யன்று திருமணம் சிறப்பாக நடந்தேறியது. திருமண விழாவின் போது ஸ்ரீ மாரியப்பாவின் குமாரன் திருநிறை செல்வன் ராமநாதனுக்குக் காதணி விழாவும் இனிது நடந்தது. மேற்படி வைபவங்களுக்கு தமிழ்நாட்டின் பலபாகங்களிலிருந்தும் வாழ்த்துக்களும் பரிசுகளும் வந்து குவிந்தன. வாழ்க, ராமநாதன்!

வாழ்க, ! மணமக்கள் !





எங்கள்

வயிற்றுப் பிழைப்புக்காக நான் பம்பாயின்மீது படையெடுத்து வந்து எத்தனையோ வருடங்களாகிவிட்டன. ஆயினும் எங்கள் டிவிஷனையும் எங்களுடைய டிவிஷன் கௌன்ஸிலரான ஏகாம்பரம் அவர்களையும் என்னால் இன்றுவரை மறக்க முடியவில்லை.

சிலர் உலகத்தைச் சீர்திருத்த நினைக்கிறார்கள்; சிலர் தங்கள் தேசத்தைச் சீர்திருத்த நினைக்கிறார்கள்; சிலர் தாங்கள் பிறந்த ஜில்லாவைச் சீர்திருத்த நினைக்கிறார்கள்; சிலர் தாங்கள் வசிக்கும் வட்டாரத்தைச் சீர்திருத்த நினைக்கிறார்கள். இவர்களில் கடைசி இனத்தைச் சேர்ந்தவர் எங்கள் ஏகாம்பரம்.

நான் மட்டும் அல்ல; எங்கள் வட்டாரத்தைச் சேர்ந்த எல்லோருமே அவரை 'எங்கள் ஏகாம்பரம்' என்று 'செல்ல'மாகக் குறிப்பிடுவதுதான் வழக்கம்.

கடந்த இருபது வருட காலமாக இந்தப் பெயர் அவருக்கு நிலைத்து விட்டது. அதாவது, அவர் எங்கள் வட்டாரத்துக்குக் கௌன்ஸிலராக வந்ததிலிருந்து என்று வைத்துக் கொள்ளுங்களேன்! — அதற்கு முன்னால் அந்தப் பக்கத்தில் அவரை எல்லோரும் 'பொடிக் கடை ஏகாம்பரம்' என்றுதான் அழைத்து வந்தார்கள்.

ஆம், பூர்வோத்திரத்தில் அவருடைய தொழில் பொடி வியாபாரமாய்த்தான் இருந்தது. வெகு நாட்களாக எங்கள் டிவிஷனில் நல்ல பொடி கிடைக்காமலிருந்த பெருங் குறையை அவர்தான் முதன் முதலில் நிவர்த்தி செய்து வைத்தார். அதைப் பற்றி அவர் அடைந்த பெருமை இவ்வளவு அவ்வளவு அல்ல. அவரிடம் இருந்த சிறப்பான குணம் என்னவென்றால், அவர் எதையுமே, எப்பொழுதுமே தமக்கென்று செய்வதில்லை; எல்லாவற்றையும் எங்கள் டிவிஷன் வாசிகளின் நன்மைக்கென்றே செய்வார். 'என் கடன் பணி செய்து கிடப்பதே!' என்று எழுதப்பட்ட ஒரு சிறு போர்டு அவருடைய கடையின் முகப்பை அலங்கரித்துக் கொண்டிருக்கும். பொடி வியாபாரத்தையும் ஒரு 'பணி'யாகக் கருதிய அவருடைய மேதையை என்னவென்று சொல்வது, போங்கள்!

★

திருவாளர் ஏகாம்பரம் அவர்களுக்கு எங்கள் வட்டாரத்தைச் சீர்திருத்த வேண்டுமென்பதில் இருந்த ஆர்வம் கொஞ்ச நஞ்சமல்ல. அந்த ஆர்வத்தை என்னுடன் பேசநேரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர் காட்டிக் கொள்ளத் தவற மாட்டார்.

தினந்தோறும் நான் கடைக்குச் செல்லும் வழியில்தான் அவருடைய வீடு இருந்தது. அவர் வசித்து வந்த தெருவைக் கடக்கும்வரை யாரும் மூக்கைப் பிடித்துக் கொள்ளாமல் செல்ல முடியாது. காரணம், அந்தத் தெருவில் பூமிக்குக் கீழே செல்ல வேண்டிய சாக்கடைக் கால்வாய்களெல்லாம் மேலே சென்று கொண்டிருந்ததுதான்!

இந்த மாதிரி இன்னும் எத்தனையோ தெருக்கள் எங்கள் வட்டாரத்தில் இருந்தன. வீட்டுக்கு வீடு ஒரு சாக்கடைக் கால்வாய் கிளம்பி எதிரேயிருக்கும் மைதானத்தை நோக்கி மௌனமாகச் செல்லும் காட்சியையும், கொசுக்கள் தங்களுடைய ரீங்காரத்தின் மூலம் அவற்றின் மௌனத்தைக் கலைத்து மகிழும் காட்சியையும் எங்கள் வட்டாரத்தைத் தவிர வேறு எங்கும் பார்க்க முடியாது. இருபதாம் நூற்றாண்டிலும் தொடர்ந்து நடைமுறையில் இருந்துவரும் இந்த அதிசயத்தை எண்ணி வியந்த வண்ணம் மேலே சென்றால், தெருக் கோடியில் இருக்கும் சென்னை நகரசபையார் போர்டு, 'அசுத்தம் செய்யாதே; அசுத்தமே வியாதிக்குக் காரணம்' என்று நம்மை எச்சரிக்கும். இந்த எச்சரிக்கையைக் கண்டு சிரித்தால் எதிரே ஏகாம்பரம் தோன்றி, "என்ன ஸார், சிரிக்கிறீர்கள்?" என்று கேட்பார்.

"ஒன்றுமில்லை; இந்தத் தெருவை இவ்வளவு அழகாக வைத்துக்கொண்டு, 'அசுத்தம் செய்யாதே!' என்று கார்ப்பொரேஷன்காரர்கள் நம்மை எச்சரிக்கிறார்களே என்று நினைத்தேன்—சிரிப்பு வந்துவிட்டது!" என்பேன்.

ஏகாம்பரம்

விந்தன்


"அதற்குத்தானே ஸார், இரண்டு வருஷங்களாக நான் காடியாய்க் கத்திக் கொண்டு வருகிறேன்—எனக்கு உங்கள் வோட்டைப் போடுங்கள் ஐயா, இதையெல்லாம் வெளுத்துக் கட்டிவிடுகிறேன் என்று! யாராவது கேட்டால் தானே!" என்பார்.

பாவம், இரண்டு வருஷங்களாக நகர சபைத் தேர்தலில் நின்று, தாம் தோல்வியடைந்து விட்டதைத்தான் அவர் அடிக்கடி மேற்கண்டவாறு குறிப்பிடுவது வழக்கம்.

★

ஏகாம்பரம் இப்படி யென்றால், எங்கள் வட்டாரத்தைப்பற்றியோ சொல்லவே வேண்டாம். அதன் பெருமைகளைப் பற்றிச் சொல்லப் போனால், அவை எண்ணில் அடங்கா; எழுத்தில் அடங்கா; ஏட்டிலும் அடங்கா!—மலேரியாவா, வைசூரியா, காலராவா—எது வந்தாலும் அதற்கு முதல் வரவேற்பு அளிக்கும் பெருமை எங்கள் வட்டாரத்தையே சேரும். மழை காலங்களிலோ சொல்ல வேண்டியதில்லை. எங்கள் தெருக்களைப் பார்க்க இரண்டு கண்களும் இல்லாமலிருக்கக் கூடாதா என்று தோன்றும். இரண்டு நாட்கள் விடாமல் மழை பெய்துவிட்டால் ஓரே வெள்ளக் காடுதான். அந்த வெள்ளத்தில் நீந்திக் கொண்டு சென்றால், "இதற்குத்தானே இரண்டு வருஷங்களாக 'எனக்கு உங்கள் வோட்டைப் போடுங்கள்!' என்று நான் அடித்துக் கொள்கிறேன்!" என்று சொல்லிக்கொண்டே ஏகாம்பரம் எதிரே வந்து நிற்பார்!

இப்படி அவர் என்னைக் கண்டால் மட்டும் சொல்லிக் கொண்டிருக்கவில்லை; எங்கள் வட்டார வாசிகளில் யாரைக் கண்டாலும் சொல்லிக் கொண்டிருந்தார். இந்தத் தொந்தரவைத் தாங்க முடியாமல் தானோ என்னவோ, மூன்றாவது வருஷம் அவர் தேர்தலுக்கு நின்ற போது, எங்கள் வட்டார வாசிகள் அவரையே தங்கள் கௌன்ஸிலராகத் தேர்ந்தெடுத்து விட்டார்கள்!





"டேய், முனியா! நீ வர வர ரொம்ப அயோக்கியனாகப் போய்விட்டாய்! உன் எஜமானனிடம் சொல்லி உன்னை வேலையை விட்டுத் தள்ளிவிடச் சொல்கிறேன், பார்!"

முனியன்:—அவரை உங்களுக்குத் தெரியுங்களா! அப்படின்னு அவரு நேத்தே என்னை வேலையை விட்டுத் தள்ளிவிட்டாருங்க; அவருகிட்ட சொல்லி என்னைத் திரும்ப வேலைக்கு எடுத்துக் கொள்ளச் சொல்லுங்களேன்!

அத்துடன் அவருடைய கவலை தீர்ந்தது. அதற்குப் பிறகு அவரை யாரும் எதிர்த்து நின்று வெற்றி பெற முடியவில்லை. அதற்குள் வோட்டு சேகரிக்கும் வித்தையில்தான் அவர் கைதேர்ந்தவராகி விட்டாரே! அதன் பயனாக எங்கள் வட்டார வாசிகளின் ஆதரவு இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, அவரே வருஷாவருஷம் கௌன்ஸிலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார்!

★

பத்து வருஷங்களுக்குப் பிறகு ஒரு நாள் பழைய நண்பர்களைப் பார்த்துவிட்டு வரவேண்டுமென்பதற்காக நான் சென்னைக்குத் திரும்பினேன். எங்கள் வட்டாரத்தில் எத்தனையோ மாறுதல்களை நான் எதிர்பார்த்து வந்தேன். ஆனால், இங்கே வந்ததும் எந்த விதமான மாறுதலையும் காணாமல் திகைத்துப் போனேன். சர்க்கார் புராதனச் சின்னங்களைப் பாதுகாப்பதுபோல் திருவாளர் ஏகாம்பரமும் எங்கள் வட்டாரத்தின் பழம்பெருமைகளைப் பாதுகாத்து வருகிறாரோ என்று நினைத்தேன். இருந்தாலும் அவரை நேரில் பார்க்க வேண்டுமென்று எனக்கு ஆவலாயிருந்தது. வழக்கம்போல் மூக்கைப் பிடித்துக் கொண்டுசென்று அவருடைய வீட்டை அடைந்ததும், "ஏகாம்பரம் இருக்கிறாரா?" என்று ஆவலுடன் விசாரித்தேன்.

"யார் அது, ஏகாம்பரமா!" என்று கேட்டுக்கொண்டே உள்ளேயிருந்து வந்தார் ஒருவர்.

"ஆமாம், இந்த டிவிஷன் கௌன்ஸிலரைத்தான் கேட்கிறேன்!" என்றேன்.

"அவர் இந்த வீட்டை விட்டுப் போய் இரண்டு வருஷங்கள் ஆகப்போகிறதே!"

"அப்படியா! இப்பொழுது எங்கே இருக்கிறார்?"

"தியாகராய நகரில்."

"அவருடைய விலாசம் தெரியுமா?"

"தெரியாது; அடுத்தாற்போல் இருக்கும் கடைத்தெருவில் 'ஏகாம்பரம் எம்போரியம்' என்று ஒரு ஜவுளிக்கடை இருக்கிறது. ஒருவேளை அங்கே இருப்பார்" என்றார் அவர்.

உடனே நான் கடைத்தெருப் பக்கம் திரும்பி, ஒவ்வொரு கடையின் போர்டையும் கவனித்துக்கொண்டு சென்றேன். பத்து வருஷங்களுக்கு முன்னால் எங்கே பொடிக்கடை இருந்ததோ, அங்கேதான் 'ஏகாம்பரம் எம்போரியம்' இருந்தது. அந்தப் பெரிய போர்டுக்குக் கீழே, 'என் கடன் பணி செய்து கிடப்பதே!' என்று ஒரு சிறு போர்டு தொங்கவிடப்பட்டிருந்ததைக் கண்டதும், "சந்தேகமேயில்லை; இது அவருடைய கடைதான்!" என்று தீர்மானித்துக் கொண்டு உள்ளே நுழைந்தேன். அங்கும் ஏகாம்பரத்தைக் காணவில்லை. உள்ளேயிருந்த ஒருவர், "உங்களுக்கு யார் ஸார், வேண்டும்?" என்று கேட்டார்.

"ஏகாம்பரம் அவர்களைப் பார்க்க வேண்டும்" என்றேன்.

"அடடா! இப்பொழுதுதான் அவர் இங்கிருந்து போனார். நீங்கள் ஒன்று செய்யுங்கள்: நேரே 'டவு'னுக்குச் செல்லுங்கள். அங்கே 'ஏகாம்பரம் ஜுவெல்லர்ஸ்' என்று ஒரு கடை இருக்கிறது. அந்தக் கடையில் அவரைப் பார்க்கலாம்" என்றார்.

எப்படியாவது அவரைப் பார்த்துவிட வேண்டுமென்ற ஆவலில் அடுத்த நிமிஷமே நான் சைனா பஜாருக்குக் கிளம்பினேன். ஆனால் என்ன ஏமாற்றம்! அங்கும் ஏகாம்பரத்தைக் காணவில்லை!!

'பணி- செய்து கிடப்பதையே தங்கள் கடனாகக் கொண்டவர்களுக்கு ஓய்வென்பதே இருக்காதோ!' என்று எண்ணி நான் தயங்கிக் கொண்டிருந்தபோது, அங்கிருந்த ஒருவர் என்னை நோக்கி, "யாரைப் பார்க்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"ஏகாம்பரம் அவர்களைத்தான் பார்க்கிறேன்!" என்றேன்.

"அவர் இப்பொழுது தியாகராய நகரிலிருக்கும் பாண்டி பஜாரில் இருப்பார். அங்கே 'ஏகாம்பரம் அண்டு ஸன்ஸ் — கெமிஸ்ட்ஸ் அண்டு ட்ரக்கிஸ்ட்ஸ்' என்று ஒரு மருந்துக் கடை இருக்கிறது. இந்த நேரத்தில் அவரை அங்குதான் பார்க்கலாம். ஒருவேளை அங்கில்லாவிட்டாலும் அடுத்தாற்போல்தான் அவருடைய பங்களா இருக்கிறது. 'ஏகாம்பர நிலையம் எங்கே இருக்கிறது?' என்று கேட்டால் யாரும் சொல்வார்கள். அந்தப் பங்களாவின் முகப்புச் சுவரில்......" என்று அவர் மேலும் மேலும் சொல்லிக் கொண்டே போனார்.

நான் பொறுமையிழந்து, "......அந்தப் பங்களாவின் முகப்புச் சுவரில் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று எழுதியிருக்கும். அந்தப் பங்களாவிலும் அவர் இல்லாவிட்டால், கார்ப்பொரேஷன் கட்டிடத்தில் கட்டாயம் இருப்பார். அங்கும் இல்லா விட்டால்......" என்று அவருடன் சேர்ந்து சொல்ல ஆரம்பித்தேன்.

அந்த மனிதர் என்னை விறைத்துப் பார்த்தார். நானும் பதிலுக்கு அவரை விறைத்துப் பார்த்துக் கொண்டே நடையைக் கட்டினேன்.

எதிரே என்னுடைய நண்பன் கைலாசம் வந்து கொண்டிருந்தான். அவனைப் பார்த்ததும், "என்னப்பா, கைலாசம்! இந்த ஏகாம்பரத்தைப் பார்க்கவே முடியாதோ?" என்றேன் வெறுப்புடன்.

"ஏன், அவருக்காகத்தான் அலைந்து கொண்டிருக்கிறாயோ! அட, பைத்தியமே! இப்பொழுதெல்லாம் அவரை அவ்வளவு லேசில் பார்த்துவிட முடியாதே! அப்படிப் பார்ப்பதாயிருந்தால் முன்னாலேயே அவருக்கு எப்பொழுது சௌகரியப்படும் என்று கேட்டுக் கொண்டுதான் நீ வந்திருக்க வேண்டும்!" என்றான்.

எனக்கு ஒரே வியப்பாயிருந்தது. "என்ன, அவ்வளவு தூரம் அவர் முன்னுக்கு வந்துவிட்டாரா?" என்றேன்.

"ஆமாம், நம் டிவிஷனுக்குக் கௌன்ஸிலரானாரோ இல்லையோ!—டிவிஷன் முன்னுக்கு வருவதற்குப் பதிலாக அவர் முன்னுக்கு வந்து கொண்டிருக்கிறார்!" என்றான் அவன்.

"அதுதான் அவரைப் பார்ப்பதற்காக நான் இங்குமங்கும் அலைந்ததிலிருந்தே தெரிந்து விட்டதே!" என்றேன் நான்.

புனிதன் கதை

"புவனம் எல்லாம் போற்றி வணங்கும் புனிதன்" காந்தி மகாத்மாவின் கதையை இசையரசு ஸ்ரீ தண்டபாணி தேசிகர் இரண்டு இசைத் தட்டுகளில் பாடியிருக்கிறார். நல்ல கவிதா சக்தி பொருந்திய நாட்டுப் பாடலைப்போல் வெவ்வேறு சந்தங்களில் சாஹித்யம் அமைந்திருக்கிறது. சாஹித்யத்தின் பாவ வேறுபாடுகளை யொட்டி ராக தானங்களை அமைத்து ஸ்ரீ தேசிகர் உடலுருக, ஊனுருக, உள்ளமும் உருகப் பாடியிருக்கிறார்.


"வெள்ளையனடியில் அன்னையைக் கண்டு
உள்ளம் கொதித்திட்டான்
தாய்நிலைவிழுத் தான்சிறைநாடித் தவமும்
புரிந்திட்டான்"

"பாரதர்வாழ்வு சிறந்ததடா — உன்னும்
பண்டங்கள் யாவும் ருசித்ததடா
தாரணிகண்டு மலைத்ததடா — இன்றைத்
தருமன் பெயரும் நிலைத்ததடா!"

என்பவை போன்ற இடங்களில் சொல்லும், பொருளும், சங்கீதமும் ஒன்று சேர்ந்து உணர்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்தோடச் செய்கின்றன. இதுவரை காந்தி மகானைப் பற்றி இசைத் தட்டில் பாடியிருப்பவர்கள் எல்லாரும் பக்தியுடனேதான் பாடியிருக்கிறார்கள் என்றாலும், பக்திக்கேற்றபடி பாட்டின் அமைப்பும் உணர்ச்சி பாவமும் சங்கீதப் பொருத்தமும் "அமரன் காந்தி" என்னும் இசைத் தட்டுகளில்தான் மிக நன்றாய்ச் சேர்ந்திருக்கின்றன. ஸ்ரீ தேசிகரையும் எச். எம். வி. கம்பெனியையும் பெரிதும் பாராட்டுகிறோம்.

சமர்த்துக் குருவி

விஜயம்





ஒரு வேப்ப மரத்தில் ஒரு காக்கை கூடு கட்டிக்கொண்டு வசித்து வந்தது. அந்த மரத்துக்குப் பக்கத்தில் இருந்த புதரில் ஒரு குருவி கூடு கட்டி வசித்தது. குருவியும் காக்கையும் ரொம்ப சிநேகமா யிருந்தன. குருவி தனக்கு ஒழிந்த நேரத்தில் வேப்ப மரத்துக்குப் பறந்து சென்று அதன் உச்சாணிக் கிளையில் உட்கார்ந்து கொண்டு பாட்டுப் பாடும்; காக்கை தன்னை மறந்து கண்ணை மூடிக்கொண்டு கேட்கும்.

ஒருநாள் அந்தக் குருவி வான வீதியில் பறந்து வெகு தூரம் போய்விட்டது. அங்கே, போன இடத்தில் குருவிக்கு விலை உயர்ந்த ஒரு முத்து கிடைத்தது. அந்த முத்தை ஜாக்கிரதையாக மூக்கில் கொத்திக் கொண்டு தன் கூட்டுக்கு வந்து சேர்ந்தது.

குருவி வேப்ப மரத்தினிடம் போனதும் வழக்கம்போல் உச்சாணிக் கிளையில் உட்கார்ந்து ஜாக்கிரதையாக முத்தையெடுத்துக் கால்களில் இடுக்கிக் கொண்டு இளைப்பாறியது. வெளியே போயிருந்த காக்கையும் அப்பொழுதுதான் வந்து மரக் கிளையில் உட்கார்ந்தது. 'பளீர்' என்று ஒளி வீசிய முத்தைக் கண்டதும் காக்கைக்கு ஆச்சரியந் தாங்கவில்லை.

"விலை மதிக்கமுடியாத இந்த நல்முத்து உனக்கு எங்கே கிடைத்தது?" என்று கேட்டது காக்கை.

"இன்று காலையில் வெகுதூரம் காட்டில் பறந்து போனேன். அங்கே ஒரு சோலையில் இந்த முத்து கிடைத்தது!" என்று குருவி பெருமையுடன் சொல்லியது.

உடனே காக்கை, "எங்கே, அந்த முத்தை இப்படிக் கொடு, பார்க்கலாம்!" என்று கேட்டது. குருவியும் காக்கையை நம்பி முத்தைக் கொடுத்து விட்டது. அவ்வளவுதான்; அடுத்த நிமிஷம் காக்கை அந்த முத்தை எடுத்துக் கொண்டுபோய்த் தன் கூட்டில் வைத்துவிட்டது. தன்னால் ஆனமட்டும் குருவி காக்கையிடம் கெஞ்சியது, சண்டையிட்டது, ஒன்றும் பயனில்லை.

குருவிக்குக் கோபம் கோபமாய் வந்தது. அது உடனே வேப்ப மரத்தைப் பார்த்து, "மரமே,

மரமே! காக்கை என் முத்தைப் பிடுங்கிக்கொண்டது. காக்கையின் கூட்டைக் கலைத்து அதையும் வெளியே துரத்து!'' என்று சொல்லியது.



"காக்கை எனக்கு ஒரு தீங்கும் செய்யவில்லையே!" என்றது வேப்ப மரம்.

குருவி விறகு வெட்டியினிடம் போயிற்று. "விறகுவெட்டியே, வேப்ப மரத்தை வெட்டித் தள்ளு!" என்று கேட்டுக்கொண்டது.

விறகுவெட்டி, "நான் ஏன் பச்சை மரத்தை வெட்டவேண்டும்? முடியாது!" என்றான்.

குருவி அரசனிடம் போய், "அரசே, அரசே! அந்த விறகு வெட்டியைச் சிறையில் போடு!" என்றது.

"விறகு வெட்டி ஒரு தப்பும் செய்யவில்லையே!" என்றான் அரசன்.

குருவி ராணியிடம் போயிற்று. "ராணி, ராணி! ராஜாவுடன் பேசாதே. 'டூ' விட்டுவிடு!" என்று கேட்டுக் கொண்டது.

"அது முடியாது!" என்றான் ராணி.

குருவி கொஞ்சநேரம் யோசனை செய்துவிட்டு அரண்மனைத் தோட்டத்து வளையில் வசிக்கும் எலியினிடம் போயிற்று. "எலியே, எலியே! ராணியின் புடவைகளையெல்லாம் கடித்துப் போடு!" என்றது.

"ஐயையோ! அது முடியாது. அரண்மனையில் ஏராளமாய் எனக்குத் தீனி கிடைக்கிறது. அதற்கு ஆபத்து வந்து விடும்!" என்றது எலி.

குருவி பூனையிடம் போய் எலியை விழுங்கச் சொல்லியது. பூனை, "நீ சொல்லி நான் எலியை விழுங்க மாட்டேன்!" என்று மறுத்து விட்டது.

பிறகு குருவி ஒரு தடியினிடம் போய், "தடியே! பூனையை அடி!" என்றது. "ஐயோ, பாவம்; நான் மாட்டேன்" என்று தடி கூறியது.

கோபங்கொண்ட குருவி நெருப்பினிடம் போய்க் குண்டாந்தடியை எரித்துச் சாம்பலாக்கி விடும்படி வேண்டிக் கொண்டது. நெருப்பு மாட்டேன் என்று மறுத்து விட்டது.

குருவி குளத்தங்கரைக்குப் போய், நெருப்பை அணைத்துவிட வேண்டும் என்று சொல்லியது.

"நான் ஏன் அணைப்பேன்?" என்றது குளம்.

குளத்துத் தண்ணீர் முழுவதும் இறைத்து அதை வறண்டு போகச் செய்யும்படி குருவி யானையைக் கெஞ்சிக் கேட்டது.

"நான் குளத்து நீரை இறைத்து விட்டால் குடி தண்ணீருக்கு எங்கே போவேன்?" என்று கேட்டது யானை.

கடைசியாக, குருவி ஒரு சிற்றெறும்பினிடம் போய், "எறும்பே, நீ யானையின் காதில் புகுந்துவிடு" என்றது. "ஐயோ, நான் மாட்டேன். யானை இறந்து விடும்!" என்றது எறும்பு.

"அடே, எறும்புப் பயலே! என்ன திமிர் உனக்கு? உன்னை இதோ கொத்தித் தின்று விடுகிறேன், பார்!" என்று அதட்டியது குருவி.

எறும்பு பயந்து நடுங்கி, "வேண்டாம்! இதோ நான் யானையின் காதில் நுழைகிறேன்!" என்றது. இதைக் கேட்ட யானை நடுங்கி, குளத்து நீரை இறைக்கப் போயிற்று. குளம் நெருப்பை அணைக்க ஆரம்பித்தது. நெருப்பு தடியை நோக்கித் தன் ஜுவாலையை வீசியது. தடி பூனையின் மேல் பாய்ந்தது. பூனை எலியை விழுங்க ஓடிற்று. எலி ராணியின் புடவைகளைக் கடிக்கத் தொடங்கியது. ராணி அரசனோடு 'டூ' விட்டு விடுவதாகச் சொன்னான். அரசன் விறகு வெட்டியைத் தண்டிக்க அரண்மனைச் சேவகனை அனுப்பினான். விறகு வெட்டி வேப்ப மரத்தை வெட்டப் போனான். வேப்ப மரம் காக்கையின் கூட்டைத் தள்ளிவிடுவதாகப் பய முறுத்தியது. இவைகளையெல்லாம் கண்டு நடுங்கிய காக்கை, முத்தை யெடுத்து வந்து, குருவியினிடம் கொடுத்து விட்டு மன்னிப்புக் கேட்டுக் கொண்டது.

குருவிக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. அது எறும்பைப் பார்த்து, "எறும்பே, நீ யானையின் காதில் நுழைய வேண்டாம்!" என்று கூறியது. யானை முதல் வேப்ப மரம் வரையில் எல்லாம் தப்பிப் பிழைத்தன.



வெற்றிலைத் தட்டைக் குத்திட்டுப் பார்த்துக்கொண்டிருந்தேன். பால் டம்ளரை மேஜை மீது வைத்துவிட்டு உள்ளே போய் விட்டாள் தாயார். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் சரசரவென்று சமையலறையைத் துடைப்பத்தால் சுத்தம் செய்யும் சத்தம் கேட்டது. நடுநடுவில் தாயாரின் பெருமூச்சும் கலந்து வந்தது.

இரவு எட்டு மணியிருக்கலாம். வழக்கத்திற்கு விரோதமாக இரவு போஜனம் சீக்கிரமே ஆகிவிட்டது.

“அம்மா, ஏன் சிரமப் படுகிறாய்? அப்படியே போட்டுவிட்டுப் படுத்துக்கொள். எப்படியும் ராத்திரி லக்ஷ்மி திரும்பிவிடுவாள்; வந்து எல்லாவற்றையும் சரிப்படுத்தி விடுவாள்” என்று அம்மாவிடம் சொல்லிப் பார்த்தேன்.

“சே, இருந்திருந்து சம்மதத்திற்கு வந்தது முதல் இன்றைக்குத்தான் குழந்தை வெளியே போயிருக்கிறாள். தவிரவும் கல்யாணம். லேசில் கிளம்ப விட்டு விடுவார்களா? இதோ, எல்லாம் ஆகிவிட்டது. நானும் படுத்துக் கொள்ளத்தான் போகிறேன்” என்று சொல்லி, பால், மோர் வைக்கும் அலமாரியைக் கடைசி முறையாக ஒருதரம் இழுத்துப் பார்த்து விட்டுக் கிளம்பினாள், என் தாயார்.

என் அறைக்கு வந்து உட்கார்ந்துகொண்டேன். ஆம்; வாஸ்தவந்தான். இருந்திருந்து இன்றைக்குத்தான் லக்ஷ்மி வெளியே போயிருக்கிறாள். இன்றைக்கல்லவா — இல்லை, அவள் அருகிலில்லாத சமயத்திலல்லவா—என்னுடைய அலட்சிய புத்தியின் பயனை உணருகிறேன்!— ‘இருந்திருந்து வெளியே போயிருக்கிறாள்!’—தாயார்கூட இப்படிச் சொல்கிறாள். காரணம்? நானேதான்!

லக்ஷ்மி வீட்டிற்கு வந்து சுமார் ஒரு வருஷம் ஆகிறது. சொந்தத் தொழில் செய்யும் மும்முரத்தில், காலை ஏழு மணிக்குப் போய் ஆபீசுக்கும் வெளியிடங்களுக்கும் அலைந்து திரிந்துவிட்டு, இரவு ஒன்பது மணிக்குக் குறைந்து வீட்டிற்கு என்றைக்கு வந்தேன்? வந்த பிறகுதான் என்ன? உடம்பு அசதியில் கடந்த இரவுகளிலெல்லாம் என்ன பேசியிருப்பேனோ? அல்லது அதனிலும் கொடுமையாய், பிறருடைய உணர்ச்சிகளின் தன்மையைச் சிறிதேனும் அறியச் சக்தியற்றவனாய்ச் சொந்தவியவகாரங்களின் சிந்தனையிலேயே மூழ்கி, கண் மூடி,

புது வாழ்க்கை

எம். என். சுப்பிரமணியம்

கால் நீட்டி அதிலேயே எத்தனை இரவுகள் கழித்திருந்தேனோ?

இப்போதிருக்கும் என் மன வெழுச்சியில் இதெல்லாம் என் கற்பனைதானோ? இல்லை, இருக்க முடியாது. இந்த நிமிஷத்தில் தான் தொழில் சம்பந்தப்பட்ட என் யந்திர வாழ்க்கையினின்று விலகி நின்று அதையே ஊன்றிப் பார்க்கும் திறனுடனிருக்கிறேன். பணமும் புகழும் கொடுத்து வந்தாலும் அது என் உணர்ச்சியை அழிக்கும் அலங் கோலத்தை இன்றுதான் பார்க்கிறேன். இவ்வளவு நாட்களுக்குப் பிறகு இந்த விழிப்பு ஏற்படுவதற்குப் பதிலாக, ஒவ்வொரு இரவிலும் அன்றைய தினத்தின் சன்னைகளையும் அடுத்த தினத்திற்கான அலுவல் திட்டங்களையும் ஒரு சில மணி நேரங்கட்கு மட்டும் உதறித் தள்ளக்கூடிய சக்தி மட்டும் எனக்கு இருந்திருக்குமானால்......?

வாஸ்தவத்தில், சுபாவத்திலேயே நான் இதயமற்றவன்தானோ? இல்லையே! கடந்த மூன்று வருஷங்களுக்கு முன் கூட, தூயக் காதலைவளர்த்துத் தெய்வீக இன்பவாழ்க்கை நடத்த என் காளை உள்ளம் துடித்துக் கொண்டுதானே இருந்தது? பின், தற்போது நான் கடைப்பிடிக்கும் வாழ்க்கை முறை நானாக வகுத்துக் கொண்டது தானோ?

சோகத்தின் நடுவில் சிரிப்பு வருகிறது. காவிய ரசனை, கலா மோகம், அமைதி நிரம்பி எடுத்துக் காட்டாய் இருக்கக் கூடிய இல்லற வாழ்க்கைத் திட்டம்— இவைதானே சதா மனத்தை நிரப்பிக் கொண்டிருந்தன கலாசாலை நாட்களில்? பிறகு வாழ்க்கை வெள்ளம் பொருளீட்டத் துறையில் பாய்ந்தது. இப்பொழுது? முதன் முதலாக ஆத்ம சோதனை! வேடிக்கைதான்!

பங்களாவின் 'கேட்'டிற்கு மேல் மலர்ந்திருந்த மல்லிகை என்னைப் பார்த்து 'முல்லை நகை' செய்தது போலவே தோன்றியது. மின்சாரக் கம்பிகளிடையே சந்திரன் மேகங்களைக் கீறிக் கொண்டிருந்தான்.

நான் மட்டும் இஷ்டப்பட்டிருந்தால் எவ்வளவோ தினங்கள் அந்த மதி யென்னும் அமுதக் கிண்ணத்திலிருந்து அமுதத்தை அள்ளிக் குடித்து அவளுக்கும் அளித்திருக்கலாம். பொருளாசைதானே கண்ணை மறைத்து விட்டது?

சே, தப்பு. இப்படி ஒரே கோணத்தில் என் எண்ணங்களை விட்டு முடிவு செய்யக் கூடாது. பொருளாசையா எனக்கு? அதாவது, அளவுக்கு மீறிய பேராசைக் காரனா நான்? மனம் ஒப்பவில்லை. வாழ்க்கை இன்பத்திற்கு இன்றியமையாத வஸ்துக்களில் பொருளும் ஒன்றுதானே?

* * *

நான் பரம ஏழைக் குடும்பத்தில் பிறந்து மிகுந்த பிரயாசையுடன் உதவிச் சம்பளம் பெற்று, கலாசாலை மதிற்சுவரை வெற்றியுடன் தாண்டி வெளி வந்தவன். லட்சிய உலகத்திலிருந்து என்னைக் கீழிறக்கி உண்மை உலகைக் காட்டி உபதேசித்து, சென்னைக் காட்டிற்குள் உத்யோக வேட்டைக்குத் தட்டி அனுப்பினார், என் மாமா. கலாசாலை பட்டத் துப்பாக்கி பெரிய இலக்குகள் வரும்போதெல்லாம் புஸ் வாணமாகிவிடும்.

மாமாவிடம் சங்கதியைத் தெரிவித்துக் கைவிரித்து நின்றேன்.

“அப்பனே, துப்பாக்கி என்னவோ சாமானிய மானதல்ல. உனக்குத்தான் உபயோகிக்கத் தெரியவில்லை. சமயம் வந்தால் சமானிய இலக்குகள் அருகே வரும் போது, துப்பாக்கியைத் திருப்பிக் கொண்டு சுடாமல், கட்டைப் பக்கத்தால் ஓங்கி அடிக்கவும் தெரிந்து கொள்ள வேண்டும். புரிகிறதா?” என்றார் மாமா சிரித்துக் கொண்டே.

மாமா அனுபவஸ்தர். உத்தியோக வேட்டையில் எனக்கிருந்த பலவீனத்தைச் சீக்கிரமே அறிந்து கொண்டார் போலும்.

மூன் யோசனையோடு சிறிய மூலதனத்தைப் போட்டு ஒரு சொந்தத் தொழிலை ஆரம்பித்துக் கொடுத்து, அதைப் பெருக்கிக் கொள்ள வழிகளையும் காட்டிவிட்டு என்னிடமிருந்து நீங்கா விடை பெற்றுக் கொண்டு விட்டார். என்னுடைய தற்போதைய அந்தஸ்து, பாங்கி கையிருப்பு, பங்களா, கார் எல்லாம் அவர் காட்டிய வழிகளின் பலனே.

லக்ஷ்மி — மாமா அளித்த அன்பளிப்புக்கெல்லாம் சிகரமாய் அமைந்தவள்.

இன்றைக்கு ஞாபகம் வருகிறது—எங்கள் கம்பெனி சிறிதே தலையெடுத்திருந்த காலம்.

“இன்று மாலை மிலிடெரி கண்ட்ராக்டர் சாம்புவின் வீட்டிற்குப் போக வேண்டும். முக்கிய காரியம். நான் வீட்டிலேயே இருக்கிறேன். சரியாகச் சாயங்காலம் நாலு மணிக்கெல்லாம் வந்து விடு; சேர்ந்து போவோம்” என்றார் மாமா ஒரு நாள்.

“ஆசாமி பசையுள்ளவர்தான் போலிருக்கிறது! பெரிய ‘ஆர்டர்’கள் கிடைக்குமோ?” என்றேன் நான்.

“வாயேன், பார்ப்போம்!” என்றார் மாமா வழக்கம் போல் சன்னச் சிரிப்புச் சிரித்துக் கொண்டு.

சொன்னபடி சாயங்காலம் வீடு வந்து சேர்ந்த என்னை மாமா நன்றாக ‘ட்ரஸ்’ பண்ணிக் கொள்ளச் சொன்னார்.

“ஏதேது! நீங்கள் இன்றைக்குப் பண்ணும் அமளியைப் பார்த்தால் ‘ஆர்டர்’ ஒரு லட்சத்திற்குக் குறையாது போலிருக்கிறதே!” என்றேன் நான் ‘கோட்’டை மாட்டிக் கொண்டே.

“ஒரு லக்ஷமா! அட பைத்தியமே! உம்......உனக்குத் தெரிந்தது அவ்வளவு தான்! சரி, கிளம்பு! நாழியாகிறது!” என்று துரிதப்படுத்தினார்.

இருவரும் போய்ச் சேர்ந்தோம். நான் எதிர்பாராதபடி சாம்புவே எங்களை வரவேற்று உபசரித்தார்.

மூவரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கும் போதே மாமாவின் சமிக்ஞையின்மேல், புதுச் சிற்றாடையின் சலசலப்புச் சத்தம் கட்டியம் கூறி வர, மயக்கம் தரும் மருண்ட பார்வையோடு மெல்ல நடந்து வந்து எங்களை நமஸ்கரித்தாள், ஒரு பெண்!

வாழ்நாளில் ஒரு தரமாவது ஆகாய விமானத்தில் ஏறிச் சுற்றிவர வேண்டுமென்று நான் கொண்டிருந்த வெகு நாளைய ஆசையை அந்த நிமிஷத்தோடு விட்டுவிட்டேன்.

பிறகு பஜ்ஜி, சொஜ்ஜி, இன்னிசைப் பாடல்கள். அடுத்த பத்தாம் நாள் கல்யாணம். இவ்வாறு லக்ஷ்மி என்னுடையவளானாள்.

★

கொஞ்ச நாட்களில் மாமா மறைந்தார். நானும் லக்ஷ்மியும் மாதக் கணக்கில் மௌனக் கண்ணீர் வடித்தோம். ரொம்ப நாட்களுக்கு லக்ஷ்மியின் மருண்ட கண்களைப்



பார்க்கும்போதெல்லாம் கூடவே மாமாவின் கள்ளச் சிரிப்பொலியும் காதில் ஒலிக்கும்.

எங்கள் கம்பெனிக்குக் கிளைகள் ஸ்தாபிக்கும் விஷயமாய் மாமா கடைசி காலத்தில் போட்டிருந்த திட்டங்கள் யாவும் நிறைவேறாமலே நின்றிருந்தன. அவருடைய அபிலாஷையைப் பூர்த்தி செய்யும் ஆர்வத்தில் ஈடுபட்டே சென்ற ஆறு மாதங்களாகக் கடும் வேலை செய்து வந்தேன்.

தாம்பத்ய வாழ்க்கை ஆரம்பத்தில் அவள் காட்டிய உள்ளத் துடிதுடிப்பும், சர்வ சுதந்திரத்துடன் என்னுடன் இதயத்தைத் திறந்து பேசிய பேச்சுக்களும் இப்போது எங்கே? ஆம், இப்பொழுது வாய் பேசாது என் மனத்திடையே தோன்றும் ஆசாபாசங்களைத் தேடித் துழாவும் வேலையை அல்லவா அவளுக்கு வைத்து விட்டேன்?

சீசீ, இந்நிலைக்குக் காரணம்?

இன்று வீட்டில் ஆட்களும் வேண்டியவர்களும் நிறைய இருக்கிறார்கள். தேவைகள் அவ்வப்போது கவனிக்கப்பட்டு மாமா அமைத்து விட்டுப் போன பத்ததியில் தடையின்றிக் குடும்பம் நடந்து வருகிறது. பணத்திற்குத் தட்டு இல்லையென்றாலும் மாமாவின் திட்டத்தில் டாம்பீகத்திற்கு இடம் கிடையாது.

சரி, அதிர்ஷ்டம் என்று மட்டும் ஒன்று என்னை அணைத்துக் கொள்ளாமலிருந்து, சாமானிய மனிதனாய் நான் இருந்திருக்கும் பட்சத்தில், என்னுடைய இந்த மனப்பான்மையை வைத்துக் கொண்டு வாழ்க்கையை என்னால் சமாளித்திருக்க முடியுமா?— இந்தக் கேள்வியின் பயங்கரம் என்னை உண்மையில் கலக்குகிறது.

வெற்றிலைத் தட்டும் வாசனைப் பாக்கும் என்னை ஏளனம் செய்கின்றன.

"நீயாக எங்களை வலிய வந்து எடுத்து என்றைக்காவது போட்டுக் கொண்டதுண்டா?" என்றே அவை என்னைக் கேட்கின்றன போலும்!

"அவள் இருந்து பக்குவப்படுத்தி 'பீடா'வாகக் கொடுக்கும்போது உன்னையறியாமல் எங்களை மெல்கிறாய்! அப்போது வேண்டா வெறுப்பாய் ஏன் கடிக்கிறாய்? உண்மைகளை ஒழித்துவிட்டு ஒப்புக்காக ஏன் போலி உடன்பாடு?"

ஆம், வெற்றிலையும் பாக்கும் என்னை நோக்கி இப்படிப் பேசுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

வெட்கம் மிகுந்து தட்டை அருகே இழுத்து வைத்துக் கொண்டு வெற்றிலை போட்டுக் கொண்டேன்.

கிராம்பைக் கடித்து அதன் காரம் மண்டையில் தாக்கவே, சட்டென்று ஞாபகம் வந்தது.

அடடா, இன்று ஆபீஸ் 'காஷியர்' கோபாலரத்தினத்தின் கல்யாணமல்லவா? அழைப்பு அனுப்பியது மன்றிப் பிரத்தியேகமாக என்னை அழைத்திருந்தானல்லவா?



பழைய மதராஸில்!



கூட்டத்தில் ஒருவர் :—இந்த நாதஸ்வரக்காரர், ரொம்பப் பிரபலமானவரோ! இப்படி ஒரே கும்பலாக் கூடிக் கேட்கிறார்களே!

மற்றொருவர் :—அதெல்லாம் ஒன்றுமில்லே; அவர் நாதஸ்வரம் வாசித்து முடித்ததும் 'ஷேவ்' பண்ணிக் கொள்ளத்தான் எல்லாரும் காத்துக் கொண்டிருக்கிறார்கள்!

'கோபாலன் என் கம்பெனியில் வேலை செய்பவன். "கல்யாணத்திற்காக எனக்குப் பத்து நாள் 'லீவ்' கொடுத்தால் மட்டும் போதாது" என்று அவன் நாலு நாட்களுக்கு முன் சொல்லி நிறுத்தியபோது, நான் கொஞ்சம் மருட்சியடைந்து, "வேறு என்னப்பா வேண்டு மென்கிறாய்?" என்று கடுகடுத்துக் கேட்டு விட்டேன்.

கோபாலன் இரங்கிய குரலில், "தாங்கள் என் கல்யாணத்திற்குக் கட்டாயம் வரவேண்டும்" என்று கலங்கிய கண்களுடன் கேட்டுக் கொண்ட காட்சி என் கண் முன்னே இப்போது நிற்கிறது. அப்போதே நானும் என் அவசர புத்தியை நொந்து கொண்டு அவனைத் தட்டிக்கொடுத்துக் கண்டிப்பாய் வருவதாக வாக்களித்தேன். அவனும் நன்றி ததும்ப என்னைப் பார்த்துவிட்டு விடை பெற்றுக் கொண்டான். அவனுடைய கல்யாணத்திற்குப் போகாமலிருப்பதா?

ஆயினும் என்ன? இன்று வெகு நாட்களுக்குப் பின் என் மனத்திடையே தோன்றியிருக்கும் மாறுதலுக்குப் பின், லக்ஷ்மி வருமளவும் காத்திருந்து அவளுடன் அளவளாமல் போவதா? கண்டிப்பாய் இன்றிலிருந்து வாழ்க்கை முறையை மாற்றியே ஆகவேண்டும். குடும்ப விவகாரத்தில் ஈடுபட்டு, குடும்பசுகத்தை அனுபவித்து, மற்ற வேலைகளையும் திறம்படக் கையாள வேண்டும். இந்த விஷயத்தை அவளிடமும் தெரிவித்து விட்டு இன்றுவரை அறிந்தோ அறியாமலோ காட்டிய அலக்ஷிய மனோபாவத்திற்கு மன்னிப்பும் பெற வேண்டும். தொடர இருக்கும் புது வாழ்க்கைக்கு அவளுடைய யோசனைகளையும் ஒத்துழைப்பையும் பெற வேண்டும்.

மனதினின்று பெரிய பாரம் நீங்கினதுபோல் தோன்றியது. கடிகாரம் 'டாண், டாண்' என்று பத்து அடித்தது.

தூரத்திய உறவு. அவளுடைய கிராமத்தைச் சேர்ந்த ஒரு சிநேகிதியினுடைய கல்யாணத்திற்குத் தான் லக்ஷ்மி போயிருந்தாள். அவளுடைய தமையன் அழைத்துப் போயிருந்தான்.

"அடடா, நாழியாகிறதே! கோபாலன் கல்யாணத்தில் ஊர்வலம் ஆரம்பமாகியிருக்குமே!" என்று மனம் பறந்தது.

"சரி, எப்படியிருந்தால் என்ன? போய்த் தலையைக் காட்டிவிட்டு வந்துவிட்டால், பிறகு இரவு பூராவும் நம்முடையதுதானே? உள்ளத்தைத் திறந்து விடுவதற்கு நடு இரவைப் போன்ற சமயம்தான் எது?" என்று மறுபடி ஒரு எண்ணம் தோன்றவே, சட்டையையும் அங்கவஸ்திரத்தையும் எடுத்துப் போட்டுக்கொண்டு 'ஷெட்'டிலிருந்த 'காரை' எடுத்துக்கொண்டு, நானே ஓட்டிக் கொண்டு பொம்பூரை நோக்கி வண்டியை விட்டேன்.

★

எதிரே வந்த ஊர்வலம் கோபாலனுடைய கல்யாண ஊர்வலமேதான். மிடுக்காக உடை தரித்து நெற்றியில் சந்தனமும் குங்குமமும் திகழ, கோபாலன் முகமலர்ச்சியோடு அலங்கரித்த காரில் உட்கார்ந்து கொண்டிருந்தான். அவனது இளம் மனைவி தலை குனிந்துகொண்டு சுற்றுப் புறத்தைக் கவனியாது கவனித்துக் கொண்டிருந்தாள்.

ஆஹா! ஒரு வருஷத்திற்கு முன்பு நானும் இதே நிலையில் இதே ஆனந்தத்தை

அனுபவித்துக் கொண்டிருந்தேனல்லவா? அந்த இன்ப நினைவுகளின் ஞாபகம் வேகமாக வந்து தாக்கி ஒரு ஏக்கத்தையல்லவா தூண்டிவிடுகிறது! அல்ல; அப்போது அனுபவித்தது சொல்லொணா இன்ப உணர்ச்சி மாத்திரமே. இப்பொழுது நெஞ்சிலெழுவது அதே ஆனந்த உணர்ச்சி மாத்திரமல்ல; அதை மெருகிட ஒரு ஏக்கமும் கூடவே பிறந்து, இரண்டும் இரண்டறப் பின்னிக் கொள்கின்றன!

எங்கள் கிராமம்—அங்கேதான், என் கல்யாணம் நடந்தது. ஒரே தெருதான்! ஊர்வலம் கிளம்பித் தெருக் கோடியை அடைந்தவுடன் காரைத் திருப்பிக்கொண்டு வருவதற்காக டிரைவர் வண்டியை வேகமாய் விட்டு, ஜனத்திரளையும் வெளிச்சத்தையும் விட்டுக் கொஞ்சம் தூரம் போய்ப் பக்கத்திலிருந்த மைதானத்திலிருந்து சௌகரியமாய்த் திருப்பிக்கொண்டு வந்தான். அப்போது நான் லக்ஷ்மியின் கையை என் கையிலெடுத்துக் கொண்டேன். ஒரு கணந்தான்; மறுபடி வெளிச்சம் வந்துவிட்டது. கையை ஒரு அமுக்கு அமுக்கிவிட்டு விட்டேன். அடாடா, அந்த ஒரு கணத்தை வாழ்நாள் பூராவிலும் மறக்க முடியுமா?

இந்த எண்ணங்களோடு வண்டியிலிருந்து இறங்கிக் கல்யாணம் விசாரித்துவிட்டு ஊர்வலக் கூட்டத்தில் கலந்து கொள்ளப் போனேன். தற்செயலாக, ஊர்வலக் காரின் பின்புறத்தில் நடந்து வந்த பெண்களின் கூட்டத்தில் என் பார்வை சென்றது.

இது என்ன, நான் காண்பது உண்மைதானா?

லக்ஷ்மி இங்கே எப்படி வந்தாள்? என் கல்யாண ஊர்வலத்தின்போது அவள் உடுத்தியிருந்த அதே மஞ்சள் கலர் புடவை, அதேமாதிரி கழுத்தில் லேசாகத் தடவப் பட்ட சந்தனம்—அதே லக்ஷ்மி!

வெறும் பிரமையா? இல்லை! அவளும் என்னைப் பார்க்கிறாள்! நடையின் வேகத்தைத் தளர்த்தி என்னைக் காணத் தனித்து நிற்கிறாள்!

செய்வதையறியாமல், நான் அவளருகில் போய் நின்றேன். ஸ்திரீகள் கூட்டம் முன்னேறி விட்டது. 'காஸ் லைட்'டுகளின் வெளிச்சம், சந்திரிகையுடன் போட்டி போட்டுக்கொண்டு எங்கள் இருவர் மீதும் விழுகிறது. இனி சந்தேகமில்லை.

"லக்ஷ்மி! நீ இங்கே......"

"என் சிநேகிதியின் இந்தக் கல்யாணத்திற்குத்தான் அண்ணா என்னை அழைத்து வந்தான். நானும் கிளம்பத்தான் ஏற்பாடு செய்து கொண்டிருந்தேன். கவலையில்லாமல் அண்ணா கல்யாண வீட்டிற்குப் பக்கத்து வீட்டில் சீட்டாடுகிறான். நல்ல கோஷ்டி சேர்ந்து விட்டது போலிருக்கிறது!" என்று படபடத்துப் பேசியவள், குரலைத் தாழ்த்திக் கொண்டு, "சொல்லிக் கொள்ளாமல் வந்ததில் கோபமா?" என்று இரங்கிக் கேட்டாள். அவள் விழிகளிலும் முகபாவத்திலும் ஏக்கம் தொனித்தது.

"சே, அதெல்லாம் ஒன்றுமில்லை. சீக்கிரம் கிளம்பு. நானும் இதோ சொல்லிக் கொண்டு வந்து விடுகிறேன்" என்றேன்.

என்னவோ பேசினேனே தவிர, இருந்த இடத்தை விட்டுக் கால்கள் நகரவில்லை. ஒரு நிமிஷம் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு அப்படியே நின்றோம்.

ஊர்வலம் ரொம்ப தூரம் முன்னேறி விட்டது. நாங்கள் இருந்த இடம் பூராவும் இருளடையத் தொடங்கியது.

"இதோ சொல்லிக்கொண்டு வந்துவிடுகிறேன். அண்ணா சீட்டாடுகிறான்; நாளைக்குத்தான் வருவான்! நாம் போவோம்!" என்றாள்.

நிலவில் அவள் முகம் தோய்ந்திருந்தது.

"அவன் நன்றாகச் சீட்டாடட்டும்! யார் மூலமாகவாவது சங்கதி யனுப்பிவிட்டு வந்து சேர். நாம் போவோம்!" என்றேன் நான்.

வாழ்க, நடனக் கலை!

புதுடில்லி மெசானிக் ஹாலில் குமாரி அம்புஜத்தின் நடனக் கச்சேரி சென்ற வாரம் சங்கீத கலாநிதி ஸ்ரீ செம்மங்குடி ஸ்ரீனிவாசய்யர் தலைமையில் நடந்தது. "நந்தி மத்தளம் கொட்ட, நாரதர் யாழ் கூட்ட" என்பது போல் இந்தக் கச்சேரியிலும் சிறந்த பின்னணி வாத்தியங்கள் அமைந்தன. குமாரி ஏ. என். விசாலாக்ஷி பதங்கள் பாட, நிருத்ய சம்ராட் கோபாலகிருஷ்ணா தபலா, மிருதங்கம் வாசிக்க, சங்கீத ஆசிரியர் ஸ்ரீ சிதம்பரம் பிடில் வாசிக்க, நடனராணி ரமணி தாளம் போட, கச்சேரி பிரமாதமாக அமைந்து, அனைவராலும் பாராட்டப்பட்டதென்று அறிகிறோம்.



நிஜந்தான்!

கந்தன்:—என் அம்மா, தினம் ஒரு ஆப்பிள் பழம் தின்றால் பிறகு டாக்டரிடம் வைத்தியமே செய்து கொள்ள வேண்டாம் என்கிறார்களே? அது நிஜந்தானா?

அம்மா:—ஆமாம், அதற்கு என்ன வந்தது இப்பொழுது!

கந்தன்:—அது நிஜமாயிருந்தால் இன்னும் பத்து நாளைக்கு நான் டாக்டரிடம் போகவில்லை!

★

நல்ல யோசனை!

தகப்பனார் (சோம்பேறியான தம் மகனைப் பார்த்து):—என்டா, சதாகாலமும் சோம்பேறியா யிருக்கிறாயே! நெற்றி வேர்வை நிலத்தில் விழப் பாடுபட்டுச் சம்பாதிக்கும் உழைப்பாளிகளுக்கு மத்தியிலே நீ என்ன செய்து பிழைக்கப் போகிறாயோ!

மகன்:—கவலைப் படாதே, அப்பா? நான் கைக்குட்டை விற்றுப் பிழைத்துக் கொள்ளுவேன்!

★

தெரிந்த லட்சணம்

ஒருவர் (பெரிய மனிதர் ஒருவரிடம் சென்று):—ஐயா, நான் போஸ்டாபீஸில் வேலைக்கு மனு எழுதிப் போட்டிருக்கிறேன். அதற்கு யாராவது ஒரு பெரிய மனிதரிடமிருந்து நன்னடக்கைப் பத்திரம் வேண்டும் என்று பதில் வந்திருக்கிறது. என்னைத் தங்களுக்குப் பல வருஷங்களாகத் தெரியும். நன்னடத்தை யுள்ளவன் என்று ஒரு சர்ட்டிபிகேட் எழுதிக் கொடுத்தால் போதும்.

பெரிய மனிதர்:—சரி, அதற்கென்ன, எழுதிக் கொடுக்கிறேன். உன் பெயர் என்ன, எதுவரையில் படித்திருக்கிறாய் என்பதைச் சொல்.

தகுந்தவர்தான்!

ஒருவர்:—பார்த்தீர்களா, ஸார்! நம்ம தேவர் எலெக்ஷனுக்கு நிற்கிறாரல்லவா? அவருக்குப் போட்டியாகப் பக்கத்துத் தெரு நாயுடு நிற்கிறாராமே! தேவர் படித்தவர்; பொதுஜன அபிமானத்தைப் பெற்றவர்; ஏற்கெனவே எலெக்ஷனுக்கு நின்று அனுபவம் பெற்றவர். இந்த நாயுடுவுக்கு என்ன தெரியும்? இவருக்கு என்ன அநுபவம் இருக்கிறது?

மற்றவர்:—அப்படிச் சொல்லாதீர்கள், ஸார்! நாயுடு எலெக்ஷனில் நின்று அநுபவம் பெறாவிட்டாலும் பஸ் ஸ்டாண்டில் பஸ்ஸுக்கு நின்று அநுபவம் பெற்றவர். பொறுமைசாலி; விட்டுக் கொடுக்கும் மனோபாவமுள்ளவர். கடைசியில் எப்படியும் அவருக்கு இடம் கிடைக்கும்!

★

அவமதிப்பு?

கார் டிரைவர் (தலையைத் தொங்க விட்டுக் கொண்டு):—நாம் மாஜிஸ்டிரேட்டிடம் சந்தோஷமாகவும் சரளமாகவும் பழகினால் வழக்கில் ஜயித்துவிடலாம் என்று சொன்னாயே!

நண்பன்:—நீ அப்படித்தானே இருந்தாய்?

டிரைவர்:—ஆமாம்; கோர்ட்டுக்குள் நுழைந்ததும் மாஜிஸ்டிரேட்டைப் பார்த்து, 'குட்மார்னிங், ஸார்! சௌக்யந்தானே?' என்று சந்தோஷத்துடன் கேட்டேன். அதற்கு மாஜிஸ்டிரேட் கோபத்துடன், 'கோர்ட்டை அவமதித்ததற்காகப் பத்து ரூபாய் அபராதம்!' என்று கூறித் தண்டித்து விட்டார்.

★

அபிப்பிராயம்!

நீதிபதி:—ஜூரர்களே! இந்த வழக்கில் உங்கள் அபிப்பிராயம் என்ன? கைதி குற்றவாளியா, இல்லையா?



ஜூரர்கள்:—நாங்கள் அவன் குற்றவாளி இல்லையென்றுதான் எல்லோரும் ஒருமுகமாகக் கருதுகிறோம். இனி அம்மாதிரியான குற்றம் செய்யக் கூடாது என்று எச்சரிக்கை செய்து அவனுக்கு விடுதலை அளித்து விடலாம்.

வட்ட மேஜை

Head Quarters
Western Command
No. 3010/2/G. Edn.

புது டில்லி
11—9—1948

ராணுவத்தில் ஹிந்தி

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு.

ஜாதி மதம் பாராட்டுவது தவறு என்று நான் எண்ணுபவனாயினும் இதை வாசிப்போருக்காக நான் 'பிராமணனல்லாதவன்' என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். இன்னும் விஸ்தரித்துச் சொல்ல வேண்டுமென்றால் நான் ஆற்காட்டு முதலியார்கள் குடும்பத்தைச் சேர்ந்தவன்.

நான் சென்னையில் வசித்துக் கொண்டிருந்த போது சிறிது சம்ஸ்கிருதத்தோடு ஹிந்தி பாஷையையும் கற்றேன்.

பிறகு ராணுவத்தில் சேர்ந்ததும் ஹிந்தி கற்றதின் பயனாக வட இந்தியத் துருப்புகளுடன் பேசவும், சேவா பாஷையாகிய ஹிந்துஸ்தானியில் பல பரீட்சைகளைச் செவ்வனே தேறவும் சௌகரியமாயிருந்தது. இதன் காரணமாக நான் சிறிய உத்தியோகத்திலிருந்து இப்பொழுது லெப்டினெண்ட் கர்னலாயிருக்கிறேன். மேலும் பல பாஷைகளடங்கிய ராணுவக் கல்விக்கு முக்கிய அதிகாரியாயுமிருக்கிறேன்.

ஹிந்தி பாஷையைக் கற்பது குற்றமெனத் தமிழ் நாட்டினர் சிலர் புரளி செய்வதாகக் கேள்விப்பட்டு நான் மிகவும் வருந்துகிறேன்.

சேனையில் சேர்ந்து முன்னேற்றமடைய விரும்புவோரும், தென் தேசம் பல துறைகளிலும் முன்னேற்றமடைய விரும்புவோர் ஒவ்வொருவரும் இந்தப் புரளியைக் கண்டிப்பார்கள் என்று நம்புகிறேன்.

ஆ. தீ. சுந்தரமூர்த்தி.

செட்டிநாடு
12—9—48

தமிழ்ப் பாட புஸ்தகங்கள்

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு.

1949-ம் வருட இண்டர்மீடியட் பரீட்சைக்குச் 'சேரன் செங்குட்டுவன்' 'கருத்தும் எழுத்தும்' என்ற பாட புத்தகங்களையும், ஈசகன், பெரியாழ்வார், பெண் கொடி என்ற உப பாட புத்தகங்களையும் நமது யூனிவர்ஸிடியார் வைத்திருக்கிறார்கள். அந்த இரண்டு உப பாட புத்தகங்களும் முழுவதும் செய்யுளாகவே இருக்கின்றன. ஏன் நமது தமிழ் நாட்டில் கருத்து ஆழமும், பொருள் தெளிவும் உள்ள உரை நடைப் புத்தகங்கள் இல்லையா? மேலும் சேரன் செங்குட்டுவன் என்ற புத்தகம் இதுவரை எண்ணற்ற தடவைகளாக நமது யூனிவர்ஸிடியாரால் பாட புத்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது. நமது யூனிவர்ஸிடியார் கண்களில் இந்தப் புத்தகம் தவிர வேறு புத்தகங்கள் தென்படவில்லையா? ஏன் இவ்வாறு யூனிவர்ஸிடியார், படிக்கும் மாணவர்களுக்கும், கற்றுக் கொடுக்கும் உபாத்தியாயர்களுக்கும் சலிப்பைத் தரக்கூடிய புத்தகங்களையே திரும்பத் திரும்ப வைக்கிறார்கள்?

எ. வெங்கடராமன்.

சிலோன்
11—9—48

தாமதம் ஏன்?

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு.

இலங்கையில் செலாவணி கட்டுப்பாடு ஏற்பட்ட பின் ஒவ்வொருவரும் தமது அரிசி ரேஷன் கார்டைத் தபாலாபீஸில் காண்பித்து மாதம் ரூபாய் இருபத்தைந்து அனுப்பலாமென்று இலங்கை சர்க்கார் உத்தரவு பிறப்பித்தது. ஆனால் சாதாரண மணியார்டர் மூலம் அனுப்பினால் இரண்டு மாத காலத்திற்குப் பிறகும், தந்தி மணியார்டர் மூலம் அனுப்பினால் சுமார் இருபது நாளைக்குப் பிறகும்தான் பணம் விலாசதாரருக்குப் போய்ச் சேருகிறது.

இப்படி காலதாமதமாகிறதை இலங்கை ஜெனரல் போஸ்ட் மாஸ்டருக்கு எழுதிக் கேட்டால், இந்திய சர்க்கார்தான் காலதாமதம் செய்கிறது என்று பதில் அளிக்கிறார்.

ஆகையால் இந்த ரூபாயை நம்பி ஜீவனம் செய்யும் எளிய குடும்பங்களுக்கும், ஸ்கூல் பீஸ், போர்டிங் செலவுகளுக்காக எதிர்பார்க்கும் மாணவர்களுக்கும் உரிய காலத்தில் பணம் கிடைப்பதற்கான ஏற்பாட்டை இந்திய சர்க்கார் செய்வார்களா?

ஆ. பால்த்துரை.

திருப்பனந்தாள்
9—9—48

போனஸ் விஷயம்

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு.

நான் ஒரு விவசாயி. 1947-ல் குறுவை நெல் முழுதும் சர்க்காருக்கு அளந்து கொடுத்தேன். அப்பொழுது நெல் அளப்பவர்களுக்கு போனஸ் கொடுப்பதாக சர்க்கார் கூறியிருந்தது. அதற்கான இ பாரங்களும் வாங்கினேன். ரிஜிஸ்தர் மூலம் போனஸ் தொகைக்கு (100 ரூ.க்குச் சற்று அதிகம்) ஜில்லா சப்ளை ஆபீசருக்கு மனுச் செய்து கொண்டேன். ஆறு மாதம் சென்றது: ஆபீசரை நேரில் தரிசனமும் செய்தேன்! 'முக்காலும் மூன்று வாட்டி' என்றபடி மூன்று நடைகள் தரிசனம் செய்தேன்!!! "தபாலில் வரும், போம்" என்ற திருவாக்கு மலர்ந்தருளியதை நம்பி மூன்று மாதங்கள் பின்னும் கழித்தேன். பிறகு ரிஜிஸ்தர் கடிதம் மூலம் ஞாபகப் படுத்தினேன். மாதம் ஒன்பதும் பூர்த்தியாகி விட்டது. பணம் வந்தால் இந்தப் பசலி குறுவைக்குப் பின்னுக்காவது வாங்கலாமென்று கனவு கண்டேன் — சம்பா விற்காவது உதவாதா என்றெல்லாம் கனவு

கண்டேன். எல்லாம் வெறும் பகற் கனவாகவே முடிந்தன.

தாளடிக்காவது உதவுமென்று இன்னமும் கனவு காண்கிறேன்.

கே. சீனிவாசன்.

ஜாம்ஷெட்பூர்
30—8—48

ஒரு சிறு குறை

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு.

நீண்ட தூரம் தமிழ் நாட்டிலிருந்து எழு நூறு, எண்ணூறு மைல்கள் தொடர்ந்து ரயிலில் பிரயாணம் செய்பவர்கள் ஓடும் வண்டியில் படும் நரகவேதனையைக் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. சென்ட்ரல் ஸ்டேஷனில் எட்டு மணிக்குக் கிளம்பும் வண்டி நான்கு மணிக்கே நிறைந்து விடுகிறது. பன்னிரண்டுக்கு மேல் கம்பார்ட்மெண்ட் உள்ள மெயிலில் மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளுக்கு மூன்றே மூன்று 'பெட்டிகள்' தான்! அந்த இடத்திற்குள் தான் நெருக்கியடித்துக்கொண்டு வண்டி கிளம்ப நான்கு மணி நேரத்துக்கு முன்னமேயே ஏறி உட்கார்ந்திருக்க வேண்டும்.

ஆள நெருக்கத்தில் கம்பார்ட்மெண்டுக்குள் உட்கார்ந்திருப்பதால் உடல் வியர்த்து விடுகிறது. இந்த மூன்று 'பெட்டிகளில்' மட்டுமே மேற்கொண்டு போகும் ஸ்டேஷன்களில் எல்லாம் பிரயாணிகள் ஏறிக் கொண்டிருப்பதால் மூன்றாம் வகுப்பு கூட்ஸ் வண்டியாகவே மாறி விடுகிறது.

மூன்றாம் வகுப்புகளுக்கு மின்சார விசிறியும், குழாயும் வைத்துச் சீர்திருத்தம் செய்யப் போவதாகக்கூடச் செய்திகள் அடிபடுகின்றன.

மின்சார விசிறி வைத்தாலும் சரி, வைக்காவிட்டாலும் சரி, பிரயாணிகளின் கும்பலுக்கேற்றபோல கம்பார்ட்மெண்டுகளின் எண்ணிக்கையையாவது அதிகப்படுத்தலாமே!

ரயில்வே வருமானத்தில் பாதிக்குமேல் மூன்றாம் வகுப்புப் பிரயாணிகள் கொடுப்பது என்பதை நினைவில் கொண்டு இந்தச் சிறு குறையைச் சுதந்திர அரசாங்கம் நிவர்த்தி செய்யுமா?

ராஜலட்சுமி.

ஸ்ரீரங்கம்
13—9—48

புது மதராஸில்!



"கமலம்! கார்ப்பரேஷன் குழாய்த் தண்ணீர் இப்படி ஒரே அடியாய் நாறுகிறதே! அதை மாற்ற நீ என்ன செய்கிறாய்?"

"நாங்கள் குழாயிலிருந்து தண்ணீரைப் பிடித்து, சுமார் ஒன்றரை மணி நேரம் காற்றாடத் திறந்த பாத்திரத்தில் வைத்திருந்து, பிறகு கொஞ்சம் மருந்து போட்டுக் கலக்கி வைத்து, அப்புறம் நன்றாய்க் காய்ச்சி **ஆறவைத்துவிட்டு.........கிணற்றுத்** தண்ணீரைக் குடிக்கிறோம்!"

நெல் விலை

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு.

என்குடி தாலுகாவில் தற்சமயம் கார் நெல் அறுவடையாகி வருகிறது. போன வருஷம் வரை கார் நெல்லை கண்ட்ரோல் செய்யப்பட்ட விலையில் சர்க்காருக்கு எல்லோரும் அளந்து வந்தார்கள். ஆனால் இவ்வருஷம் சர்க்கார் மேற்படி தாலுகாவில் கொள்முதலை நிறுத்திவிட்டதாகத் தெரிகிறது. சர்க்கார் ரேஷனை எடுத்தவுடன் அரிசி விலை படிப்படியாக உயர்ந்து, தற்சமயம் ஒருபடி (பட்டணம் படி) ரூ. 1-4-0க்கு கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. இந்த நிலைமையில் ஏழை ஜனங்கள் கார் நெல் அறுவடையை மிக ஆவலுடன் எதிர்நோக்கி யிருந்தார்கள். அறுவடை சமயம் விலை குறையலாம்; ஏதோ கொஞ்சம் நெல்லை வாங்கி வைத்துக் கொள்ளலாம் என்று நினைத்தார்கள். அதற்கு நேர்மாறாக மில் தரகர்களும் கள்ள மார்க்கட்டுக்காரர்களும் மூப்பத்தி ஏழரைப் படி (பட்டணம் படி) கொண்ட கலம் ஒன்றுக்கு ரூ. 18—0—0 வீதம் பகிரங்கமாகக் களத்து வாசலிலேயே வாங்கி வருவதாகத் தெரிகிறது. கார் நெல் கலம் ஒன்றுக்கு கண்ட்ரோல் விலை சுமார் ரூ. 7—12—0.

கார் நெல் அறுவடையை எதிர்நோக்கி யிருந்த ஏழை மக்கள் 18 ரூ. கொடுத்து எப்படி வாங்க முடியும்? நெல் விலையைக் கவனித்து எளியவர்களுக்கு சர்க்காரால் நிர்ணயம் செய்த விலைக்கே கிடைக்கும்படி உடனே ஏற்பாடு செய்யுமாறு சர்க்கார் அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கிறேன்.

வி. திருமலை அய்யங்கார்.

போடி
3—7—48

தையல் பாடம் அவசியமா?

"கல்கி" மாமா அவர்களுக்கு.

இந்தப் பள்ளிக்கூடங்களில் தையல் பாடம் எதற்காகத்தான் வைக்கிறார்களோ தெரியவில்லை! அதனால் வீட்டிலும், ஸ்கூலிலும், நாங்கள் படும்பாடு சகிக்கவே முடியவில்லை. தையல் பாடம் நடத்தும் நேரம் வந்துவிட்டால் பெரிய எமகண்டமாகத்தான் இருக்கிறது. உபாத்தியாயினி துணியையும், ஊசி நூலையும் கொண்டு வா என்கிறாள். கொண்டு போகாவிட்டால் கோபித்துக் கொள்கிறாள். **எங்கள் அப்பாவுக்கு முப்பது ரூபாய்தான் சம்**

பணம். அதில் என்ன வெள்ளம்தான் வாங்கிக் கொடுக்க முடியும்? வீட்டிலே வந்து அழுதால், அம்மா, "ஏதோ இரண்டு எழுத்து வரட்டும்னு பள்ளிக்கூடம் அனுப்பினால் ஸ்லேட்டு, புஸ்தகம் போருதுன்னு, துணியையும், மணியையும் கொண்டா என்று கேட்டால் நான் எங்கே போவது? நாம் உடுத்திக்கவே இங்கே துணியைக் காணோம். உனக்கு தினம் இதெல்லாம் யாராலே தர முடியும்? எங்கிட்ட வந்து பிராணனை வாங்காதே. போடி சனியனே! நீ பள்ளிக்கூடமே போகவேண்டாம்" என்கிறாள். போதாததற்கு எங்கள் அக்காவுக்கு வேறு தினம் ஸ்கூலில் என்னவோ பக்ஷணங்கள் பண்ணச் சொல்லித் தருகிறார்கள். அதற்காக அவள் "கால் ரூபாய் கொடு" "இரண்டணா கொடு" என்று அம்மாளைக் கேட்கிறாள். இதற்கெல்லாம் பணத்துக்கு எங்கே போவது? அம்மாவாளும் "இதெல்லாம் வீட்டிலேயே கற்றுக்கொள்ளக் கூடாதா?" என்று சொல்லுகிறாள்.

மாமா! எங்க பாட்டி பக்ஷணம் வாங்கித் தின்னு என்று ஊருக்குப் போகும்போது கொடுத்த பணத்திலே உங்களுக்குக் கடுதாசி எழுதி யிருக்கேன். நீங்களாவது தயவுசெய்து கல்வி மந்திரி கிட்டச்சொல்லி, இந்தத் தையல் பாடம், பக்ஷணப் பாடம் எல்லாம் ஸ்கூலுக்கு வேண்டாம் என்றோ, அல்லது ஸ்கூல் செலவிலேயே எங்களுக்கு அவையெல்லாம் சொல்லித் தரும்படியோ சிபாரிசு பண்ணுங்கள்.

ஏ. லக்ஷ்மி.

தியாகராயநகர்
28—8—48

இவ்வருஷத்துக்குள் நியமிக்குமா?

"கல்வி" ஆசிரியர் அவர்களுக்கு,

'சட்டக் கல்லூரி' என்றாலே சாதாரணமாக இந்தக் காலத்தில் யாருக்குமே அலட்சியமாக இருக்கிறது. "மாம்பலூர் காலேஜ் தானே?" என்று உதாசீனமாகச் சொல்வோரும் உண்டு. மாணவர்கள் கூடச் சட்டப்படிப்பை எவ்வளவு லேசாக எடுத்துக்கொண்ட போதிலும், அதன் விஷயத்தில், கல்வி இலாகா அசட்டையாக இருப்பது தவறாகும்.

வரும்படி ஸ்திரமில்லாத வக்கீல் தொழிலை நம்பி இந்தப் படிப்பிலே ஈடுபடும் மாணவர்களின் தேவையை-படிப்பு விஷயத்திலே தான்!—கவனித்து, வேண்டியதைச் செய்வது கல்வி இலாகாவின் கடமை அல்லவா?

மாணவன் சம்பளம் கட்ட சற்றுகாலதாமதமானால் அதற்குப் பொறுப்பதில்லை!

ஆனால் கல்லூரி திறந்து இரண்டு மாதமாகப் போகிறது 'ரோமானியர் சட்டம்', 'முஸ்லிம் சட்ட'ப் பாடங்களுக்கு ஆசிரியர்கள் இன்னும் நியமிக்கப்படவில்லை. மாணவர்கள் சுயமாகவே படித்துப் பரீட்சையில் தேறி விடுவார்கள் என்றாலும், கல்வி இலாகா தன் கடமையில் தவறலாமா? அந்த ஆசிரியர்கள் நியமனம் ஆகாததற்குக் காரணம் பணச் சிக்கனத்தை நாட்டி இருக்கவே இருக்காது என்பது சர்வ நிச்சயம். கவனக் குறைவாக இருக்குமோ?

படிப்பிலே மிக ஆர்வமுள்ள மாணவர்கள், "ஆசிரியர் நியமனம் இந்த வருஷத்திற்குள் ஆகி விடுமோ?" என்று ஆத்திரப் படுகிறார்கள்! அப்படிப்பட்டவர்களை சாந்தப் படுத்துவதற்காகவாவது விரைவிலே கல்வி இலாகா மேலே குறிப்பிட்ட பாடங்களுக்கு ஆசிரியரை நியமிக்குமா?

பு. வெ. சுப்பிரமண்யம்.

கேத்தனூர்
31—8—48

நம்மில் ஒருவரா?



நடுவிலிருப்பவர் :—வருகிற எலெக்ஷனில் உங்கள் வோட்டை நம்ம நாயுடுகாருக்குக் கொடுக்கவேணும், நம்மில் ஒருவர் இவர்; இவரை மறக்கப்படாது, சார், என்ன?

மற்றவர் :—என்னங்க! நம்மில் ஒருவர் என்று இவரைச் சொல்கிறீங்களே; நம்மில் மூன்று பேர் என்று சொல்லுங்கள்!

கிராமங்களுக்கு வைத்திய உதவி

"கல்வி" ஆசிரியர் அவர்களுக்கு,

இந்த ஊரில் சுமார் மூன்று வருடங்களாக ஆஸ்பத்திரியில் டாக்டர் இல்லை. இங்குள்ளது ஒரு ஜில்லா போர்டு ஆஸ்பத்திரி. இங்கே இருந்தவர் வேலையை ராஜிநாமா செய்து விட்டு நகரத்தில் சொந்த ஆஸ்பத்திரி நடத்துகிறார். அவருக்குப்பின் வேறு டாக்டரே நியமிக்கப்படவில்லை.

இம்மாதிரி பல கிராமங்களில் டாக்டர்கள் இன்றி ஆஸ்பத்திரிகள் மூடிக் கிடக்கின்றன. நம்ம ஆஸ்பத்திரிகளில் ஆகாரம், மருந்து இலவசம் என்று சொல்வது பெயரளவுக்குத் தான்! அங்கும் பணம் இல்லை என்றால் காரியம் கைகூடுவதில்லை.

இதற்கெல்லாம் காரணம் வைத்தியத் தொழில் வியாபாரத் தொழிலாக மாறி வருவது தான். கிராமங்களின் நிலை இவ்வாறு இருக்கிறது. நகரங்களிலோ கணக்கற்ற டாக்டர்கள் ஓரே இடத்தில் குவிந்து இருக்கிறார்கள். சர்க்கார் முனிசிபாலிடி ஆஸ்பத்திரிகளில் வேலை செய்பவர்களைத் தவிர எத்தனையோ பேர் சொந்த ஆஸ்பத்திரிகளும் வைத்து நடத்துகிறார்கள். ஒரே இடத்தில் ஏராளமாகக் குவிந்து இருக்கும் டாக்டர்களை கிராம ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பி கிராம மக்கள் சிகிச்சை பெற சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா? மெடிகல் காலேஜுகளில் இடமில்லையே என்று ஏங்கும் மாணவர்களுக்கு இடமளித்து, டாக்டர்களை ஏராளமாக உற்பத்தி செய்து அவர்களுக்குச் சேவையையும் தியாகத்தையும் உபதேசித்து எங்களைப் போன்ற ஏழைகள் உதவிபெற வழி செய்வார்களா?

ஆர். ஞானகியம்மாள்.

★ இந்த இதழில் வெளியாகி யிருக்கும் வட்ட மேஜைக் கடிதங்களில் புது டில்லி ஆ. நீ. சுந்தரமூர்த்தி அவர்கள் எழுதியிருக்கும் கடிதத்துக்கு ரூ. 25 பரிசளிக்கப்பட்டது.



பிரமன் படைப்பிலே.....!

கவி ரவீந்திரநாத் டாகுர்

பிரும்மாவின் தொழிற்சாலையில் வேலை முடிந்து வீட்டுக்குப் போவதற்கான மணியும் அடித்தது. அப்பொழுது அவருக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. உடனே அவர் தம் உக்கிராண அறைக்காரரை (ஸ்டோர் கீப்பரை)க் கூப்பிட்டு "கொஞ்சம் பஞ்சபூதங்கள் கொண்டுவாரும்; நான் ஒரு புதிய ஜீவனைச் சிருஷ்டிக்கப் போகிறேன்!" என்று கூறினார்.

அதைக் கேட்ட உக்கிராண அறைக்காரர் மிகவும் பவ்யமாக, "ஸ்வாமி! தாங்கள் யானை, திமிங்கிலம், மலைப்பாம்பு, சிங்கம், புலிபோன்ற மிருகங்களைச் சிருஷ்டிக்கும்பொழுது, பஞ்ச பூதங்களின் செலவைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை. ஆகையால் பெரியதும் கடுமையானதுமான பூதங்கள் எல்லாம் ஏராளமாகச் செலவழிந்து விட்டன. ஆகவே பூமி, நீர், அக்கினி முதலிய பொருள்கள் மிகவும் குறைவாகத்தான் மிஞ்சியிருக்கின்றன. ஆகாசமும் காற்றும் வேண்டிய அளவு இருக்கின்றன. இனி, தங்கள் உத்தரவுப்படி செய்யச் சித்தமாயிருக்கிறேன்" என்றார்.

நான்முகனின் நான்கு முகங்களிலும் யோசனைக் குறிகள் தோன்றின. பிறகு அவர் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவராய், "சரி, உக்கிராண அறையில் இருப்பவற்றைக் கொண்டுவாரும், பார்ப்போம்" என்றார்.

பிரும்மா இந்தத் தடவை சிருஷ்டிக்கும் பிராணி விஷயத்தில், பூமி, நீர் அக்கினி மூன்றையும் வெகு சிக்கனமாகக் கையாண்டார். அந்தப் பிராணிக்குக் கொம்பு வைக்கவில்லை; நகம் வைக்கவில்லை. அக்கினியை மிகச் செட்டாகவும் சாதுரியமாகவும் பிரயோகித்தார். அதனால் அந்த மிருகம் யுத்தத்தில் உதவக் கூடியதாக அமைந்தது.

அந்தப் பிராணிக்குக் 'குதிரை' என்ற பெயர் சூட்டப்பட்டது. அந்த மிருகத்தைச் சிருஷ்டித்தபோது வாயு, ஆகாசம் என்ற இரண்டு தத்துவங்களையும் அதிகமாகவும் ஆச்சரியகரமான முறையிலும் கையாண்டதால் அது வாயுவேகம், மனோவேகம் முதலியவற்றையும் தோற்கடிக்கக் கூடிய வேகம் வாய்ந்த மிருகமாகி விட்டது. ஓட்டத்தில் தன்னை யாரும் மிஞ்சிவிடக் கூடாது என்பதுதான் அதன் அந்தரங்க ஆசை.

பிரும்மாவுக்குத் தன்னுடைய அந்த அற்புதச் சிருஷ்டியில் அபார மகிழ்ச்சி ஏற்பட்டது. மற்ற பிராணிகள் வசிப்பதற்கென்று அவர் காடு, மலை, குகை முதலிய இடங்களை நிர்மாணித்தார். ஆனால் குதிரைக்கென்று ஒரு தனி இடம் நிர்மாணிக்கவில்லை; அதைத் திறந்த வெளியில் தன் மனம் போனவாறு திரியும்படி விட்டுவிட்டார்.

* * *

அதன் அருகிலேயே தான் வசித்து வந்தான் மனிதன். அவனுக்கோ அதிசயப் பொருள்களைச் சேகரிப்பதில் ஆர்வம் அதிகம். இனி தன்னால் தாளமுடியாது என்கிற வரை பொருள்களைச் சேகரித்து வைத்துக் கொண்டு விடவேண்டும் என்ற ஆசை மனிதனுடன் கூடவே பிறந்ததல்லவா! மைதானத்தில் எதேச்சையாக ஓடியாடி மேய்ந்து கொண்டு நின்ற குதிரையைப் பார்த்தான். அதை எப்படியாவது

கட்டிப் பிடித்து விடவேண்டும் என்ற ஆசை அவன் உள்ளத்தில் இயற்கையாகவே எழுந்தது. அதைப் பிடித்துப் பழக்கி விட்டால் 'கடை கண்ணிக்குப் போய்வர சௌகரியமா யிருக்குமே!' என்ற எண்ணம் அவனுக்கு. கடைசியில் எப்படியோ வலை போட்டு அதைப் பிடித்து விட்டான். அதன் முதுகின்மேல் சேணம் வைத்துக் கட்டினான்; வாயில் இரும்புக் கடிவாளத்தை இழுத்துப் பூட்டினான். 'உனக்குச் சுதந்திர உணர்ச்சி உதவவே உதவாது' என்று அதற்கு நினைவுறுத்துவதற்காக அடிக்கடி சவுக்கால் அடிக்கவும் குதிகால் மிதியைக் கொண்டு குத்தவும் செய்தான். உயரமான சுவர்கள் எழுப்பிக் குதிரை லாயம் ஏற்படுத்தி அதில் அதைக் கட்டிப் போட்டான்.

ஆகாசம், வாயு இவ்விரண்டு தத்துவங்களும் கட்டுண்டிருந்த குதிரையைக் கட்டு அறுத்துக்கொண்டு ஓடிவிடுமாறு தூண்டின. ஆனால் கட்டு அழுத்தமானதா யிருக்கவே அதனால் அறுத்துக் கொண்டு ஓட முடியவில்லை. தன் சுபாவத்துக்கு நேர் மாறாக இப்படிக் கட்டுண்டிருப்பதை விரும்பாமல் அது தன் பின் கால்களால் உதைக்கத் தொடங்கிற்று. சுவரின் சுண்ணாம்பு பொலபொலத்து உதிர்ந்ததே தவிர வேறு ஒரு பலனும் ஏற்படவில்லை. குதிரையின் குளம்புகள்தான் தேய்ந்தன.

இதைக் கண்ணுற்ற மனிதனுக்கு மிகவும் மனவருத்தம் உண்டாயிற்று. 'என்ன, நன்றி கெட்டமிருகம் இது? நான் இதற்குப் புல், கொள்ளு, தண்ணீர் எல்லாம் வைக்கிறேனே! அது மட்டுமா? இதைக் கவனித்துக் கொள்ளுவதற்காக நிறையச் சம்பளம் கொடுத்து ஆள்வேறு போட்டிருக்கிறேன். இதற்காக நான் இவ்வளவெல்லாம் செய்கிறேனே! இதற்குக் கொஞ்சமாவது நன்றியிருக்கிறதா?' என்று மிகவும் மனவருத்த முற்றான்; கோபமும் கொண்டான். அதன் பலனாகக் குதிரைக்குத் தடியடிப் பிரயோகமும் கிடைத்தது. அடி பொறுக்க மாட்டாமல் அது உதைப்பதை அடியோடு மறந்தது. அதுமட்டும் அல்ல; அவன் சொன்ன சொற்படி ஆடவும் ஆரம்பித்தது.

மனிதன் தன் நண்பர்களை யெல்லாம் கூப்பிட்டுக் காட்டி, "இதைப் போன்ற எசமான விசுவாசமுள்ள பிராணி இந்த உலகத்திலேயே கிடையாது" என்று கூறி வாயாரப் புகழ்ந்தான். நண்பர்களும், "நியாயந்தானே! இது நீரைப் போலவும் தர்மத்தைப் போலவும் குளுமையாக இருக்கிறது. நாங்கள் இம்மாதிரிப் பிராணியை எங்கள் ஆயுளில் கண்டதில்லை" என்று சொல்லித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர்.

குதிரைக்கோ தற்காப்புக்கான கொம்பும் இல்லை; நகமும் இல்லை; கடிப்பதற்கு அழுத்தமான பற்களும் இல்லை. என்ன செய்யும், பாவம்! மனிதனிடமுள்ள பீதியின் காரணமாக அது தன் பின் கால்களால் உதைப்பதையும் நிறுத்திவிட்டது. தன் மனவருத்தத்தை வெளியிடுவதற்கு, ஆகாயத்தை அண்ணாந்து பார்த்துக் கனைப்பதைத் தவிர, அதாவது அழுவதைத் தவிர அதற்கு வேறு ஏதாவது வழி தென்பட்டால்தானே? அது அடிக்கடி கனைக்க ஆரம்பித்தது. அதனால் மனிதனுக்குத் தூக்கம் கெடலாயிற்று. ஆகவே அதன் வாயை மூடிவிட அவன் வழி கண்டு பிடித்து விட்டான். இருந்தாலும் அதன் கனைப்புச் சப்தம் இடையிடையே கேட்கத்தான் செய்தது. 'தன்னிடமுள்ள எசமான விசுவாசம், பக்தி இவற்றைக் காட்டுவதற்காக அது இப்படிக் கனைக்கிறதாக்கும்!' என்று சொல்லி மனிதன் அண்டை அயலாரைச் சமாதானப் படுத்தி வைத்தான்.

ஒருநாள் அது கனைத்த சப்தம் பிரும்மாவின் செவிகளுக்கு எட்டியது. அவர் பூமியில் உள்ள மைதானத்தில் ஒரு தடவை தன் பார்வையைச் செலுத்தினார். அங்கே அவருடைய அற்புதச் சிருஷ்டியான குதிரை



யைக் காணும். அவருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. 'இது யாருடைய வேலையாயிருக்கலாம்?' என்று ஒரு கணம் யோசித்தார். அடுத்த விநாடி எமதர்மனைக் கூப்பிட்டு, "டேய், என்னிடமே உன் வேலையைக் காட்டுகிறாயா? குதிரையைத் திருடினது நீதானே?" என்று ஆத்திரத்துடன் கேட்டார்.

"பிரும்ம தேவா! என்மேல் ஏன் வீண் சந்தேகம் கொள்ளுகிறீர்கள்? ஒரு தடவை உங்கள் உயர் சிருஷ்டியான அந்த மனிதனின் பக்கம் திரும்பிப் பாருங்களேன்! விஷயம் விளங்கும்" என்று பயபக்தியுடன் சொன்னான் எமதர்மன்.

ஒரு சின்னஞ் சிறு இடத்தில் நாற்புறமும் சுவர் எழும்பி இருப்பதையும், அதன் நடுவில் குதிரை மோப்பம் பிடித்தவாறு நின்று கொண்டிருப்பதையும் கண்ணுற்றார் பிரும்மதேவர். அவருடைய உள்ளம் நெகிழ்ந்தது. உடனே அவர் மனிதனை அழைத்து வரச் செய்து, "இந்தப் பிராணியை இப்பொழுதே விட்டுவிடு. இல்லாவிட்டால் இதற்கும் புலிபோன்ற நகங்களையும் பற்களையும் சிருஷ்டித்து விடுவேன். அப்புறம் உனக்கு அபாயம்தான் ஏற்படும். ஜாக்கிரதை!" என்று எச்சரித்தார்.

"சேச்சே! அப்படிச் செய்யலாமா? செய்தால் ஹிம்சைக்கு இடம் கொடுத்ததாக வல்லவா ஆகிவிடும்? அது கிடக்கட்டும். ஒரே ஒரு விஷயம். உங்கள் சிருஷ்டியைப் பற்றி அபிப்பிராயம் கூற எனக்கு உரிமை அளிப்பீர்கள் என்று எண்ணுகிறேன். இந்தப் பிராணி சுயேச்சையாக வாழ்வதற்கு அருகதை யற்றது என்பது என் தாழ்மையான அபிப்பிராயம். அதனால்தான் உங்கள் சிருஷ்டியாகிய குதிரையின் நன்மையை உத்தேசித்து, நான் அதிகப் பணம் செலவழித்து இதற்கென்று ஒரு லாயம் கட்டி வைத்திருக்கிறேன்" என்றான் பேச்சில் வல்லவனான மனிதன்.

ஆனால் பிரும்மாவின் செவிகளில் அவனுடைய சொற்கள் ஏறவில்லை. அவர் மிகவும் பிடிவாதமாக, "உன்னிடம் நான் அதெல்லாம் கேட்க வரவில்லை. நீ இந்தக் கணமே அதை விட்டுவிட வேண்டும்" என்று கட்டளையிட்டார்.

"உங்கள் உத்தரவுப்படி செய்யச் சித்தமாயிருக்கிறேன். ஆனால் ஒரே ஒரு வேண்டுகோள். ஒரு வாரம் உங்கள் சிருஷ்டியின் போக்கைப் பார்த்துக் கொள்ளுங்கள். அப்புறமும் 'அது திறந்த வெளியில்தான் இருக்கத் தகுந்தது. நான் கட்டியிருக்கும் லாயத்தில் இருக்கத் தகுதியற்றது' என்று நீங்கள் நினைத்தால் எனக்கு ஒருவித ஆட்சேபமும் இல்லை" என்றான் மனிதன்.

"இப்பொழுதே போய் அதை அவிழ்த்து விடு" என்று உத்தரவிட்டார் பிரும்மா.

மனிதன் "உத்தரவுப்படியே" என்று சொல்லிவிட்டு பூலோகத்துக்கு வந்தான். வந்ததும் வராததுமாகக் குதிரையின் இரண்டு முன்னங் கால்களையும் சேர்த்து இறுகக் கயிற்றால் கட்டிவிட்டுத் திறந்த வெளியில் அவிழ்த்து விட்டான். அது தவளை தத்துவதுபோல முன்னங் கால்களைத் தூக்கித் தூக்கி வைத்துத் தாவிக் குதிக்க ஆரம்பித்தது.

பிரும்மா வெகு தொலைவில் இருந்த பிரும்ம லோகத்திலிருந்தே அதன் நடையலங்காரத்தைக் கவனித்தார். அவருடைய கண்களுக்கு அதன் கால்களில் இருந்த கட்டுக்கள் புலப்படவில்லை. தனது உயர்ந்த சிருஷ்டி என்று எண்ணிய குதிரை இப்படிப் படுமோசமாக நடந்து, தனக்கு அவப்பெயரைத் தேடித் தருவதில் முனைந்திருப்பதைக் காண அவருக்கே மிகவும் வெட்கமாய்ப் போய்விட்டது. 'அடேடே! நாம் பெரிய தவறு அல்லவா செய்து விட்டோம்!' என்று அவர் வாய்விட்டுக் கூறிக்கொண்டார்.

அதே சமயம் மனிதன் அவரெதிரே கைகூப்பிக்கொண்டு நின்றான். "நான் இந்த மிருகத்தை வைத்துக்கொண்டு என்ன செய்வது? உங்கள் பிரும்மலோகத்தில் இடம் இருக்குமானால் இப்பொழுதே அனுப்பி விடச் சித்தமாயிருக்கிறேன்!" என்றான்.

பிரும்மா மன வருத்தத்துடன், "வேண்டாம். நீ அதை உன் லாயத்திலேயே கட்டிப் போடு" என்றார்.

"பிரும்மதேவா! இது மனிதனுக்கு ஒரு பெரிய சுமையல்லவா!" என்றான் மனிதன்.

"இதுதான் அப்பா, மனிதனுடைய உயர்ந்த பண்பு!" என்று சொல்லிப் புகழ்ந்தார் பிரும்மா. 'மனிதன் புகழ்ச்சிக்கு மயங்கி ஏமாந்து விட்டானே!' என்று மனக்குள் பிரும்மா பூரித்தார்.

ஆனால் 'படைத்த பிரமனையும் ஏமாற்றி விட்டோமே!' என்ற மகிழ்ச்சியில் மனிதனுடைய வாய் இதழ்களில் தோன்றிய குறுநகைக்கு அர்த்தம் பிரும்மாவுக்கு விளங்கினால் தானே?

[மொழிபெயர்ப்பு: அக்ஷயம்.]


கட்டழகி
ருக்மணி தேவியின்
சரும பாதுகாப்பு
லக்ஸ்
டாய்லட்
சோப்
LUX
LUX TOILET SOAP
"என் அழகுபடுத்தும் முறை வெகு சுலபம்" என்கிறார் சௌந்தரியவதி ருக்மணி தேவி. "நான் தவறாமல் லக்ஸ் டாய்லட் சோப்பினால் கழுவுகிறேன், அவ்வளவுதான். அதன் கறுகறுப்பான நுரை எனது மேனியை பட்டைப்போல் வழவழப்பாகவும் மிருதுவாகவும் செய்கின்றது. உங்களுடைய மேனியை மலர்ச்சியுடனும் சுத்தமாகவும் வைத்துக் கொள்ள நீங்கள் லக்ஸ் டாய்லட் சோப் உபயோகியுங்கள்."
லக்ஸ் டாய்லட் சோப்
சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்!
LTS. 190-23 TM

நீலப் புடவை

தாபன்

அன்று ஞாயிற்றுக்கிழமை. ஆபீஸ் இல்லையாதாகையால் என் கணவர் சாப்பாட்டை முடித்துக்கொண்டு மாடியில் ஏதோ கதைப் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தவர் அப்படியே சாய்வு நாற்காலியில் அயர்ந்து தூங்கிவிட்டார். வெற்றிலைத் தட்டுடன் மாடிக்குச் சென்ற நான் அவரது ஆழ்ந்த நித்திரையைக் கலைக்க மனமில்லாமல் கீழே வந்து துணிமணிகளுக்குச் சோப்புப் போடலாமென்று கிணற்றுக்குச் சென்றேன்.

நாலைந்து வீடுகள் சேர்ந்த காம்பவுண்டு ஆதலால் வரிசையாக மூன்று வீடுகளைத் தாண்டித்தான் தோட்டத்துக் கிணற்றுக்குச் செல்லவேண்டும். மூன்றாவது வீட்டு மல்லிகா என்னைக் கண்டதும் "அலமு, இங்கே வா, அம்மா! இந்தப் புடவைகளைப் பார்" என்று என்னை அழைத்தாள். அவள் வீட்டுத் தாழ்வாரத்தில் புடவை வியாபாரி ஒரு பெரிய மூட்டையை அவிழ்த்து விதவிதமான வர்ணங்கள், புதுமாதிரி பார்டர்கள், கோடுகள், கட்டங்கள் போட்ட புடவைகளைப் பரப்பியிருந்தான். நூறும் நம்பர் நூல் புடவைகள்தாம் என்றாலும் பட்டைவிடப் பகட்டாக இருந்தன. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொருவித நவீன இனிமைப் பெயர்களிட்டு வியாபாரி அதை வானளாவப் புகழ்ந்துகொண்டிருந்தான். அவைகளிலிருந்து ஒரு நீல நிறப் புடவையை எடுத்து வைத்துக்கொண்டு "இதைப் பார் அலமு. இதுதான் எனக்குப் பிடித்திருக்கிறது" என்றாள் மல்லிகா. வாஸ்தவம்தான். அது மிக்க நன்றாயிருந்தது. உடல் பூராவும் தூய நீல நிறம். ஒற்றைக் கம்பி ஜரிகை பார்டர், இருஓரங்களிலும் அலங்காரமாக வளைவு நெளிவுகளுடன் ஓடியிருந்தது. "இதில் எத்தனை இருக்கிறது?" என்றேன்.

"இரண்டே இரண்டு புடவைகள்தான் இருக்கின்றன. நேற்று பதினைந்து இருந்தன. இன்றைக்கு இரண்டே இரண்டுதான் பாக்கி" என்றான் வியாபாரி.

என் மனதில் சந்தோஷம் பொங்கியது. மல்லிகாவுக்கு ஒன்று போக மற்றொன்றை எனக்கு வாங்கிக்கொள்ள வேண்டுமென்று ஆசை. வியாபாரியை அங்கேயே இருக்கச் சொல்லிவிட்டு 'புடவையை என் கணவரிடம் காண்பித்து வருகிறேன்' என்று கூறி நீலப் புடவையுடன் என் வீட்டுக்குச் சென்றேன்.

மாடிப்படிகளில் நான் ஏறிச் செல்லும் சப்தத்தைக் கேட்டு கண் விழித்துக் கொண்ட என் கணவர், 'ஏது, ஒரே அவசரமாய் வருகிறாயே?.........புதுப் புடவையா? ......எங்கே......கொண்டு வா, பார்க்கலாம்" என்றார்.

"மல்லிகா இதேமாதிரி ஒன்று வாங்கியிருக்கிறாள். நானும் ஒன்று வாங்கலாமா?" என்றேன்.

நாற்காலியில் சாய்ந்திருந்தவாறே அந்தப் புதுப் புடவையைக் கையில் வாங்கிப் பார்த்தார். உடலைப் பிரித்துப் பார்த்தார். பார்டரை உற்று நோக்கினார். இவ்வளவு தூரம் துணிமணிகளைக் கவனித்துப் பார்க்கும் திறன் உடையவரென்று நான் அதுவரை நினைத்ததுகூடக் கிடையாது.

"என்ன, புடவை எப்படியிருக்கிறது? பதினைந்து ரூபாய் சொல்கிறான். பதின்மூன்று, பதிமூன்றரைக்குத் தந்துவிடுவான். 'உடுமாத்துக்கு' நன்றாக உழைக்கும், எடுப்போமா?" என்றேன்.

முழுமதியை மேகத்திரை மறைப்பதுபோல அவரது முகத்தின் சாதாரண பிரகாசத்தை ஏதோ ஒரு மெல்லிய இருள் படலம் படர்ந்து மறைப்பதுபோல் இருந்தது. ஆழ்ந்த பெருமூச்செறிவதையும் அவர் கண்களின் கடையோரங்களில் முத்துப்போல் கண்ணீர் துளித்திருப்பதையும் கண்டதும் என் மனம் பெரிதும் சஞ்சலமடைந்துவிட்டது. 'அலமு' என்றார் தலையை நிமிர்த்தி என்னைப் பார்த்தவாறு. அவர் குரல் குழைவும் கனிவுமாயிருந்தது.

"இந்த நிறம்தானா உனக்குப் பிடித்திருக்கிறது? வேறு கலர்களில் ஏன் பார்க்கக் கூடாது?" என்றார்.

இந்தக் கேள்வியின் ஒவ்வொரு வார்த்தையும் நிறுத்தி நிறுத்தி சோகம் தோய்ந்து வருவது போலிருந்தது.

"இது நன்றாக இல்லையா?" என்றேன்.

"நன்றாய்த்தான் இருக்கிறது. ஆனாலும் இந்த நிறம்............" என்று நிறுத்தி என் முகத்தைப் பார்த்தார். அதற்குமேல்

சொல்ல வேண்டாமென்று ஏதோ ஒரு சக்தி அவருள்ளேயே எழுந்து அவர் பேச்சைத் தடை செய்வது போலிருந்தது.

"இது நூல் புடவை இல்லையா...அதுவும் இதே மாதிரிதான்......ஆனால் பட்டு. பனாரஸ் ஸில்க்... ஹூம்..." என்று சொல்லிப் பெருமூச்சு விட்டார்.

பதில் சொல்லத் தெரியாமல் நான் நின்றேன்.

"கல்யாணிக்கு ஒருதட்வை இந்தமாதிரிப் புடவைதான் எடுத்தேன். அதையெல்லாம் ஏன் இப்போது இழுக்கவேண்டும். ஹூம்...சரி...உனக்குப் பிடித்திருந்தால் இதை வாங்கிக் கொள். பர்ஸ் கோட்டு பையிலிருக்கிறது" என்று மென்று விழுங்கிக்கொண்டே பேசினார்.

என் மனம் ஆத்திரமும் வேதனையும் கலந்து துன்பமடைந்தது. கல்யாணி என் மூத்தாள். அவள் இறந்து ஐந்து வருஷத்துக்கு மேலாகிறது. என்னை மணந்தும் நான்கு வருஷங்களாகின்றன. அவர் என்ன சொல்ல நினைத்தார் என்பதை அறிந்து கொள்ள என் மனம் துடிதுடித்தது. அதிக ஆவலுடன் "எப்போது எடுத்தீர்கள்... சொல்லுங்கள்" என்று நான் வற்புறுத்திக் கேட்கவே அவர் பின்வருமாறு சொல்லத் தொடங்கினார் :—



சென்ற மாதம் 20-ம் தேதி பெங்களூர் சிவில் ஸ்டேஷன் நகரசபைத் தலைவரும் அங்கத்தினர்களும், மேன்மை தங்கிய இந்திய கவர்னர் ஜெனரல் ராஜகோபாலாச்சாரியார் அவர்களுக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்தபோது, பெங்களூர் ஸ்ரீ டி. கே. எத்திராஜுலு நாயுடுவின் புதல்வியும் சென்னை நடன ஆசிரியை ஸ்ரீமதி எம். கே. செல்வமணியின் சிஷ்யையுமான குமாரி விலோசனா பரத நாட்டியமாடி கவர்னர் ஜெனரலையும் மற்றவர்களையும் மகிழ்வித்தாள். கவர்னர் ஜெனரல் ராஜாஜி, குமாரி விலோசனாவுக்குத் தம்முடைய கையெழுத்தை எழுதிக் கொடுப்பதை மேலேயுள்ள படத்தில் காணலாம்.

அப்பொழுது நான் திருச்சியில் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். கல்யாணியை மணந்து ஆறு மாதம்தான் ஆகியிருந்தது. கல்யாணியின் தந்தை சென்னையிலிருந்தார். தலை தீபாவளிக்கு உங்கள் மனதுக்குப் பிடித்தபடி புடவையும் வேஷ்டி அங்கவஸ்திரங்களும் வாங்கிக் கொள்ளுங்கள் என்று இருநூறு ரூபாய் தந்தி மணியார்டர் செய்திருந்தார்.

'உனக்கு எந்தமாதிரிப் புடவை வேண்டும்?' என்று கேட்டேன் கல்யாணியை. 'எது வேண்டுமானாலும் உங்கள் மனதுக்குப் பிடித்தபடி எடுத்து வாருங்கள்' என்று சொல்லிவிட்டாள். அவளையும் கடைக்கு அழைத்துக் கொண்டு போய்ப் பார்த்து எடுக்கலாமென்றாலும் என் வேலைத் தொந்திரவுகள் குறுக்கே நின்றன. கடைசியில் தீபாவளிக்கு முதல் நாளே கடைக்குச் சென்றேன். நாலைந்து கடைகளில் பலவிதமான புடவைகளைப் பார்த்தேன். கல்யாணியின் தங்க நிறத்துக்கு நீல நிறப் புடவைதான் ஏற்பாக இருக்கும் என்று என் மனதுக்குப் பட்டது. என் மனம் போலவே ஒரு பிரபல கடையில் ஒரு நீலப் பட்டுப் புடவை இருந்தது. விலை நூற்றிருபத்தைந்து. வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வந்து கல்யாணியிடம் காட்டினேன். அவளுக்கும் அந்த நிறம் மிகவும் பிடித்திருந்தது. 'எது உங்களுக்கு இவ்

ளவு நன்றாகப் பார்த்து வாங்கத் தெரிகிறதே — பெண்கள் தோற்றுப்போக வேண்டியதுதான்' என்று என்னை மனதாரப் பாராட்டினார். அந்தப் புடவையை உற்சாகத்தோடு என் தாயாரிடம் கொண்டு போய்க் காண்பித்தான்.

அப்போது என் தாயாரும் உயிரோடிருந்தாள். புடவையை வாங்கிப் பார்த்ததும் 'கணேசா, இதை ஏன் எடுத்து வந்தாய் இவ்வளவு பணம் கொடுத்து. முதன் முதலாக ஆக்கமும் சிறப்புமாய்ப் புடவை எடுக்க வேண்டியவன் இந்தக் கறுப்பு நிறத்தைத் தானா விலைக்கு வாங்கவேண்டும்? இதைக் கொண்டு போய்க் கொடுத்துவிட்டு வேறு நிறத்தில் மஞ்சள், குங்குமம் இப்படி ஏதாவது பழுப்பு நிறத்தில் எடுத்து வா'' என்று கட்டளை யிட்டாள்.

என் மனதுக்கு வருத்தமாய்ப் போய் விட்டது. கடைக்காரன் திரும்ப எடுத்துக் கொள்ள மாட்டான். அப்படித் திருப்பிக் கொடுப்பதும் நன்றாயில்லை. கல்யாணிக்கு அந்தப் புடவை பிடித்திருக்கிறது. அதை அறிந்த பிறகும் திருப்பிக் கொடுத்து விடுவதானால் அவள் மனம் நொந்து போகும்.

'கறுப்பு ஒன்றுமில்லை. நீல நிறம்தான்— எல்லாரும் எடுத்திருக்கிறார்கள். முகூர்த்தப் பெண்களுக்குக்கூட இம்மாதிரி எடுக்கிறார்கள். இது சும்மா இருக்கட்டும்' என்று ஒரு போடு போட்டேன்.

அன்றிலிருந்து என் தாயாருக்கு என் மீது மனக் கசப்பு ஏற்பட்டு விட்டது. யாரிடம் எதைப் பற்றிப் பேசினாலும் 'ஆக்கமில்லாத அந்த நீல நிறப் புடவை'யைக் குறிப்பிடாமலிருக்க மாட்டாள்.

இரண்டு மூன்று தடவைதான் கல்யாணி அந்தப் புடவையைக் கட்டியிருப்பாள். நல்ல வேளை, வெளுக்கப் போட்டபோது வண்ணான் அதை வலை வலையாகக் கிழித்துக் கொண்டு வந்திருந்தான்.

கல்யாணி கர்ப்பவதியாகித் தளர்ந்து பலவீன சரீரத்துடன் வீட்டில் நடமாடும் போது ஒரு நாள் மெல்லிசாகக் கனமில்லாதிருக்குமென்று அந்தப் பழைய நீலப் பட்டுப் புடவையை எடுத்து உடுத்திக் கொண்டாள். அதைப் பார்த்ததும் என் தாயாருக்குப் பழைய நினைவு வந்து விட்டது. 'கல்யாணி இந்தப் புடவை உனக்கு வேண்டாம்— களைந்து விடு' என்று கண்டிப்பாக உத்தரவிட்டாள்.

தெய்வத்தின் சதியோ அல்லது என் தாயாரின் மனதில் எப்படியோ புகுந்து கொண்ட சஞ்சலத்தின் பலனோ, அந்தப் பிரசவத்தினின்றும் மீளமாட்டாமல் தாயும் குழந்தையும் மீளா உலகை யடைந்து விட்டனர். அந்த ஏக்கத்திலேயே என் தாயாரும் இறந்தாள்......

“அலமு, என் தாயாரைப் போல அசடாக நான் இருப்பேன் என்று நினைத்துக் கொள்ளாதே. சகல உலகையும் ஆண்டருளும் பரம்பொருளின் திருவுளப்படிதான் எல்லாம் நடைபெறுமே யன்றி துணியின் நிறத்தினாலும் நிறத்தினாலும் ஏதேதோ நடைபெற்று விடுகின்றன என்று நினைப்பது முட்டாள்தனம்...... இந்த நிறம் உனக்கு நன்றாய்த் தானிருக்கும்...... எடுத்துக் கொள். கோட்டுப் பையில் பணப் பை இருக்கிறது. ரூபாய் பதினைந்தானாலும் சும்மா வாங்கிக் கொள்'' என்று வற்புறுத்தினார் என் கணவர். “சரி, அப்படியே ஆகட்டும்'' என்று அவரிடம் பொய் சொல்லிவிட்டுப் புடவை வியாபாரியிடம் “இந்தப் புடவை மாதிரி வேறொன்று வீட்டிலிருக்கிறது. இப்போது தேவையில்லை'' என்று சொல்லிவிட்டுத் துணிமணிகளையும் சோப்பையும் மல்லிகாவின் வீட்டிலிருந்து எடுத்துக் கொண்டு தோட்டத்துக் கிணற்றுக்குச் சென்றேன். மனம் ஏனோ கனமாயிருந்தது. நீல நிறம் என் மனதில் ஒருவித பயத்தையும் குழப்பத்தையும் உண்டாக்கியது.

* * *

சுமார் ஒரு மாதத்திற்குப் பிறகு ஒரு நாள் என் கணவரும் அவருடைய நண்பர்களும் மாடியில் உட்கார்ந்து ஒரே அமர்க்களமாய்ப் பேசிக் கொண்டிருந்தனர். ஒருவரையொருவர் 'பெண்டாட்டிக்கு அடிமை' என்றும் 'ரவிக்கை சர்க்கார்' என்றும் கேலி செய்து கொண்டிருந்தனர். நான் கீழே மாடிப்படி யருகே நின்று அவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தேன். அப்பொழுது என் கணவர் சொன்னார்:—

“ஒரு தடவை நீலப் புடவை ஒன்றை வைத்துக் கொண்டு 'இதை வாங்குங்கள்' என்றான். நான் என்ன செய்வது? பெட்டி நிறையப் புடவைகள் இருக்கின்றனவே என்றால் கேட்பானா? ஒரு யுக்தி செய்தேன். என் முதல் மனைவிக்கு நீலநிறப் புடவை எடுத்த காரணத்தால்தான் எத்தனையோ கஷ்டங்கள் வந்துவிட்டதாக அளந்தேன். அதற்குப் பிறகு, பாவம், அவன் அந்தப் புடவைப் பேச்சையே எடுப்பதில்லை'' என்று சொல்லிச் சிரித்துக்கொண்டிருந்தார்.

தில்லை வனத்தின் திருமணம்

எஸ். வி. எஸ்.

உலகத்தில் யாருக்கும் தோன்றாத யோசனைகள் உபாயங்கள் என் நண்பன் தில்லைவனத்துக்குத் தோன்றும்.

கல்யாணம் செய்துகொள்ள இருக்கும் பிள்ளைக்குப் பெண் பிடிக்கவில்லையென்றால், கொஞ்சமும் சங்கோசமின்றி 'பெண் பிடிக்கவில்லை' என்று கூறிவிடலாம். இப்படி முகத்தில் அடித்தாற்போல் சொல்வதற்குச் சங்கோசமாக இருந்தால், பண விஷயத்தில் பெண் வீட்டுக்காரர்களின் சக்திக்கு மீறி கேட்டு விடுவது, அல்லது 'இந்த வருஷம் பையனுக்குக் கல்யாணம் பண்ணிக் கொள்ள இஷ்டமில்லை' என்று சொல்லி விடுவது. இப்படி எத்தனையோ விதங்களில் தட்டிக் கழிக்க வசதியிருக்க என் அருமை நண்பன் தில்லைவனத்துக்கு வேறு ஒரு புது மாதிரியான யோசனை தோன்றியது. தான் தட்டிக் கழிக்க வேண்டிய பெண்ணாக இருந்தால் அந்தப் பெண்ணின் மீது அபாரமாக அளவுக்குமேல் **காதல்** கொண்டுவிட வேண்டியதுதான் வழி என்று தீர்மானித்தான்.

இவ்வாறு அவன் தீர்மானித்ததற்குக் காரணம் இருந்தது.

தில்லைவனம் சென்னையில் ஒரு கல்லூரியில் பீ. ஏ. வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். அவன் தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த பெரிய மிராசுதாரரின் அருமைப் புதல்வன். அவன் சென்னையில் கல்லூரியையொட்டி யிருக்கும் ஹாஸ்டலில் வசித்து வந்தான். அவனுக்குக் காதல் கதைகள் என்றால் ரொம்பப் பிடிக்கும்.



அவன் ஒரு நாள் 'ரோமியோவும் ஜூலியட்டும்' என்ற ஷேக்ஸ்பியர் நாடகத்தைப் படித்துக் கொண்டிருந்த போது ஒரு கடிதம் வந்தது. கடிதம் எங்கிருந்து வந்தாலும் வெகு ஆவலுடன் பிரித்துப் பார்க்கும் தில்லைவனம், ரோமியோவும் ஜூலியட்டும் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்ட காதல் மொழிகளைப் படிப்பதில் ஈடுபட்டு, கடிதத்தை மறந்தே போனான்.

முதல் தடவையாகத் தில்லைவனம் அந்த நாடகத்தைப் படித்ததால், கதைப் போக்கில் மூழ்கி ஒரே மூச்சில் படித்து முடித்தான். கதை மிக சுவாரஸ்யமாகச் சென்று வெகு சோகமாக முடிந்தது. அந்தச் சோகத்தில் மூழ்கி, தில்லைவனம் சித்தபிரமை பிடித்தவன் போல் உட்கார்ந்திருந்தான்.

இவ்வாறு புஸ்தகத்தை மூடிவிட்டு உட்கார்ந்தபோது, மேஜையின்மேல் கிடந்த கடிதம் கண்ணில் பட்டது.

மனசு ஒரே சோகத்தில் அமுங்கி யிருந்ததால் நிதானமாக உறையைப் பிரித்தான். பிறகு மெள்ளக் கடிதத்தைப் பிரித்து, படிக்கத் தொடங்கினான்.

என்ன ? என்ன ? தில்லைவனத்தின் முகம் இப்படி விகார மடைவானேன் ? அவனுக்கு என்ன நேர்ந்து விட்டது ? அப்படி துக்ககரமான விஷயம்தான் அதில் என்ன எழுதியிருக்கிறது ?

தில்லைவனம் கலவரப்படும் அளவுக்கு, அப்படியொன்றும் அதில் சோகச் செய்தியில்லை. அவனுடைய அத்தைமகள் ஷண்முகவடிவை வருகிற சித்திரையிலே தில்லைவனத்துக்குக் கல்யாணம் கட்டிக் கொடுத்துவிட வேண்டும் என்று அவனுடைய அத்தையும், தில்லைவனத்தின் தந்தையும் அபிப்பிராயப் படுகிறார்களாம். இதில் தில்லைவனத்தின் அபிப்பிராயம் கேட்பதற்கு ஒன்றுமில்லை யென்றாலும் விஷயத்தைத் தெரிவிப்பதற்குத்தான் இதை எழுதினார்களாம்.

தனக்கு மனைவியாக வாய்க்கப் போகும் ஷண்முகவடிவை

நினைத்தவுடனே தில்லைவனத்துக்கு என்னவோ செய்தது. காதல் புரிந்து கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று திடசங்கல்பம் செய்திருந்த தில்லைவனத்துக்குத் தன்னைக் கேட்காமல் ஷண்முகவடிவைத் தன் கழுத்தில் கட்டுவது பிடிக்கவில்லை.

மேலும் ஷண்முகவடிவு சுத்தப் பட்டிக்காட்டுப் பெண். தில்லைவனம் பத்து வயதுச் சிறுவனாக இருந்தபோது, அவள் ஆறு வயதுச் சிறுமியாக இருந்தாள். தில்லைவனத்தின் குடும்பத்தாரும் ஷண்முகவடிவின் குடும்பத்தாரும் ஒரு தடவை சிதம்பரத்துக்குத் திருவாதிரைத் திருநாளுக்காகப் போயிருந்தார்கள். அப்பொழுது ஷண்முகவடிவு 'அம்மா, அத்தானை என் கையைப் பிடித்துக்கொண்டு நடக்கச் சொல்' என்று அழுது பிடிவாதம் பிடித்ததும், மற்றப் பெண்கள் எல்லாம் இதைக் கேட்டு, தில்லைவனத்தைக் 'கோட்டா' பண்ணியதும் அவனுக்கு ஞாபகத்துக்கு வந்தது. 'சே, சே! இந்த அசட்டு ஷண்முகவடிவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளவே கூடாது' என்று தீர்மானித்தான். ஆனால் இந்தத் தீர்மானத்தை அப்பாவுக்கு எப்படித் தெரிவிப்பது? அவன் தன் அப்பாவுக்கு ரொம்பவும் பயந்தவன் ஆயிற்றே!

இதைப்போல், ஷண்முகவடிவு அசட்டுத்தனமாக நடந்துகொண்ட பல சம்பவங்கள் நினைவுக்கு வந்தன. அவள்பால் அவனுக்கு அருவருப்பு இன்னும் அதிகமாயிற்று.

ரொம்பவும் பயந்த சுபாவமுள்ளவர்கள் சிற்சில சமயங்களில் சற்றும் நம்ப இயலாத காரியங்களைச் செய்து வைப்பார்கள்!

எதிரில் கிடந்த ரோமியோவும் ஜூலியட்டும் என்ற புஸ்தகத்தைப் பார்த்தான். அவர்கள் ஒருவரை யொருவர் எவ்வளவு அன்னியோன்னியமாகக் காதலித்தார்கள்? கடைசியில் எப்படிப் பிரிந்து வாழ நேர்ந்தது?

துஷ்யந்தனும் சகுந்தலையும் எப்படிப் பட்ட காதலர்கள்! ஆனால் அவர்கள் ஒருவரை யொருவர் பிரிந்து எவ்வளவு கஷ்டப் பட்டார்கள்?

நளனும் தமயந்தியும் ஒருயிரும், ஈருடலுமாக வாழ்ந்த காதலர்கள். அவர்களையும் பிரிவெனும் துயர் வாட்டி எடுக்கவில்லையா?

காதல் இருந்த இடங்களில் எல்லாம் பிரிவும் இருந்திருக்கிறது. ஆகவே, ஷண்முகவடிவைக் கல்யாணம் செய்து கொள்ளாமல் பிரிந்து வாழ வேண்டுமென்றால், உண்மையாக அவளைக் காதலித்து விடவேண்டும் என்ற ஆரம்பத்தில் கூறிய முடிவுக்குத் தில்லைவனம் வந்தான். அன்றைக்கே ஷண்முக வடிவுக்கு ஒரு காதல் கடிதமும் எழுதி விட்டான்!

எனினும் அவன் மனசுக்குள், 'இது என்ன அசட்டுத்தனம்! அந்தப் பெண் இந்தக் கடிதத்தை எல்லோருக்கும் காட்டி ரகளை கட்டிவிட்டால் என்ன செய்வது?' என்று நடுங்கிக் கொண்டிருந்தான். இரவு பகல் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. இரண்டு நாள் கழித்து அவனுக்குக் கடிதம் வந்தது. ஆவலுடன் பிரித்துப் பார்த்தான். ஷண்முக வடிவு எழுதியிருந்தாள். அவள்தான் அவன் மீது எவ்வளவு அன்பு செலுத்தியிருந்தாள்! அவள் சின்னஞ்சிறு பிராயத்திலிருந்தே தன் உயிரைத் தில்லைவனத்தின்மீது வைத்து விட்டாளாம். ஆனால் அப்பொழுதெல்லாம், அந்த அன்புக்குச் சற்றும் பொருட்படுத்தாது தில்லைவனம் கொடுமையாக நடந்து கொண்டதுபற்றி மிகவும் வருத்தப் படுவாளாம். ஆனால், எதிர்பாராத விதமாகத் தில்லைவனத்தினிடமிருந்து இப்படி ஒரே அடியாக அன்பைப் பொழிந்து எழுதியிருந்த கடிதம் பார்க்க அவள் அடைந்த ஆனந்தம் கொஞ்ச நஞ்சமில்லையாம். அவள் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொல பொல என்று அரும்பியதாம். தன் அன்பையும் நன்றியையும் எப்படித் தெரிவித்துக் கொள்வது என்றே தெரியவில்லையாம்......

இந்தக் கடிதத்தைப் பார்த்தவுடன் தில்லைவனத்துக்குத் தன் பேரிலேயே கோபம் வந்தது. 'நம்பி இவ்வளவு அன்பு செலுத்தும் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள மறுப்பதாவது! ஆகா! எவ்வளவு அழகாக எழுதியிருக்கிறாள்' என்று எண்ணினான்! 'இந்தக் கல்யாணம் தடைப்படக் கூடாதே!' என்ற கவலை அவன் மனசில் குடிகொண்டது! அந்தக் கவலை ஷண்முக வடிவின் கழுத்தில் மாங்கல்யதாரணம் ஆன பிறகுதான் அவன் மனசை விட்டு நீங்கிற்று.

* * *

ஒரு நாள் எதேச்சையாகத் தில்லைவனத்தைச் சந்தித்த போது, "காதல் புரிந்ததில் கல்யாணம் தடைப்பட வில்லை, நடந்துவிட்டது, இல்லையா?" என்றேன்.

"ஆமாம்; காதல் புரிந்ததில் கல்யாணம் தடைப்படவில்லை. கல்யாணம் நடந்துதான் விட்டது! ஆனால் கல்யாணம் நடந்ததில் இப்பொழுதெல்லாம் அடிக்கடி **காதல்தான் தடைப்படுகிறது!**" என்றான் தில்லைவனம்.



அழகிய கூந்தல்!
நம்ப முடியவில்லையே!

அழகிய கூந்தலே உங்களுடைய வசீகரத்தை அதிகப்படுத்த வல்லது. நறுமணம் உள்ள "ஜேம்ஸ் அம்லா ஹேர் ஆயில்" சிறந்தது தலையில் வைத்துத் தேயுங்கள். கூந்தல் செவ்வையாய் மிருதுவாகவும், பளபளப்பாகவும் ஆகிறதென்று பாருங்கள். பொடுகுகளை நீக்கி கூந்தலை வளரச் செய்கிறது.



ஜேம்ஸ்

அம்லா ஹேர் ஆயில்

ஜேம்ஸ் பெர்ப்யூமரி கம்பெனி
சென்னை.

JJ-97

இலங்கை, சிங்கப்பூர், பர்மா முதலிய இடங்களுக்கு சோல் ஏஜண்டுகள் தேவை

சமயத்தில் வேண்டுவது பலசாலியான மனிதரே!



கேசரி குடீரம் லிட், மதராஸ்

ஒரிஸ்ஸா, நைஜாம் சமஸ்தானங்கள், ஆந்திரா ஜில்லாக்கள் தமிழ் நாடுகளுக்கு ஏஜண்டுகள்:


சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்
பேர்ஹாம்பூர், செகந்திராபாத்,
பெஜவாடா, மதுரை

No. 6



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

கல்கி



KALKI செப்டம்பர் 26, 1948 4 அணா

கொள்ளேகாலம்
பட்டுச் சேலைகள்

•

சிறந்த வேலைப்பாடோடு கூடிய, உயர்ந்த கொள்ளே காலம் பட்டுச் சேலைகளுக்கும் பலவூர் நூல் ஜவுளி தினுசுகளுக்கும் கீழ்க் கண்ட விலாசத்திற்கு விஜயம் செய்யுங்கள்.

மஹாலக்ஷ்மி ஸ்டோர்ஸ்

பாண்டிபஜார் :: தியாகராயநகர்

தீபாவளி நெருக்கடியில் நண்பர்கள் தங்கள் தேவையைத் தேர்ந்தெடுப்பதற்கு சிரமப்படக் கூடும் என்பதற்காகவே ஏராளமான ஜவுளியை இப்போதே சேமித்து வைத்திருக்கிறோம்.

•

...பம்பாய் தென்னிந்திய வாசிகள் தங்கள் திருப்திக்காகவும், சிக்கனத்திற்காகவும் எங்கள் நிலையத்திற்கு விஜயம் செய்யக் கோரப்படுகிறார்கள்.

மஹாலக்ஷ்மி ஸ்டோர்ஸ்

பிம்டிவாலா பில்டிங்ஸ்
லகம்ஸி நாப்பு ரோடு
மாதுங்கா G. I. P. :: பம்பாய் - 19

"லங்கர்" மார்க்
வாசனை பாக்குத் தூள்



★

அசல்

பாதாம் எண்ணை

★

ரோஜாப்பூ
குல்கந்து

★

ரஷிக்லால் & கோ.,

கோவிந்தப்ப நாயக்கன் தெரு
மதராஸ் - 1

REGD. NO. M. 4392



படிப்பில்லாதவனை மணம் செய்து கொண்டிருக்கக் கூடாது. அப்போது தப்புச் செய்து விட்டு இப்போது இப்படிப் பேசுவதில் என்ன பயன்?"

"தப்பு என்பேரில் இல்லை, தாரிணி! உங்கள்பேரில்தான்! உங்களால் வந்த வினைதான் இதெல்லாம்!"

"வெகு அழகு! இப்படியெல்லாம் பேசாதீர்கள். உங்கள் மனைவி உட்கார்ந்திருக்கும் இடத்துக்கு நாமும் போகலாம், வாருங்கள்! இல்லாவிட்டால் அவளுடைய 'கோளாறு' இன்னும் அதிகமாகி விடும்."

"அதிகமானால் ஆகட்டும்; அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை" என்றான் ராகவன். ஆயினும் தாரிணி போகத் தொடங்கியதும் அவளைப் பின்பற்றி அவனும் போனான். இருவரும் ஏரி ஓரம் சென்று சீதாவின் பக்கத்தில் உட்கார்ந்தார்கள்.

ஏரிக்கரையில் படகு ஒன்றும் இல்லை. ஆனால், ஏரியில் சில படகுகள் மிதந்து கொண்டிருந்தன. அவை ஏரியின் நடுவில் இருந்த சோலை சூழ்ந்த ஒரு சிறு தீவை நோக்கிப் போய்க் கொண்டிருந்தன. அந்தத் தீவில் உயரமான மரங்களின் மத்தியில் ஒரு பெரிய மாளிகை காணப்பட்டது.

"அந்த மாளிகை யாருடையது?" என்று தாரிணி கேட்டாள்.

"சரித்திர நிபுணராகிய தங்களுக்கு இது தெரியாதா, என்ன? பழைய சரித்திரத்தைத்தான் ஆராய்வீர்கள் போலிருக்கிறது. இந்த சமஸ்தான ராஜாவின் அரண்மனைதான் இது. காலஞ்சென்ற பெரிய ராஜா உயிரோடிருந்தபோது இந்த மாளிகையில் அடிக்கடி வசிப்பாராம். அவருடைய உல்லாசக் கேளிக்கைகள் எல்லாம் இதிலேதான் நடக்குமாம்! உங்களுக்குத் தெரியுமோ, இல்லையோ? ஐந்தாறு வருஷத்துக்கு முன்னால் இந்த நாட்டின் ராஜாவைக் கொல்லுவதற்குப் பம்பாயில் ஒரு முயற்சி நடந்தது. கொல்ல முயற்சித்தவள் ஒரு ஸ்திரீ. பத்திரிகையில் எல்லாம் பிரமாதப் பட்டது. ஆனால் அந்த முயற்சி பலிக்கவில்லை. கொலை செய்ய முயற்சித்த ஸ்திரீ இரண்டு வருஷம் கடுங்காவல் தண்டனை அடைந்ததுதான் லாபம். கத்திக் காயம் கூடப் படாமல் அப்போது ராஜா தப்பிவிட்டார். இரண்டு வருஷத்துக்கு முன்பு அதிகக் குடி காரணமாகச் செத்தொழிந்தார்."

"இப்போதுள்ள ராஜா யார்? அவருடைய குணம் எப்படி?" என்று தாரிணி கேட்டாள்.

"இப்போதுள்ள ராஜா சிறு பையன். டேராடூனில் படிக்கிறான். நாம் இறங்கியிருக்கிறோமே, அந்த வீட்டில் வசிக்கும் திவான் ஆதிவராகாச்சாரியார் தான் இப்போது ராஜ்ய நிர்வாகம் செய்து வருகிறார்."

"அப்படியானால், இப்போது ராஜ்யம் நன்றாக நடந்து வருகிறதாக்கும்."

"ஏதோ சுமாராய் நடந்து வருகிறது. ஆனால் பழைய ராஜாவின் துர் மந்திரியாயிருந்த விநாயக ராவ் மதோங்கர் இன்னும் உயிரோடிருக்கிறான். அரண்மனையிலும் சரி, சமஸ்தானத்திலும் சரி, அவனுடைய அட்டூழியங்கள் அதிகம். திவானும் அவன் விஷயத்தில் கொஞ்சம் ஜாக்கிரதையாயிருந்து வருகிறார். இல்லாவிட்டால், ஏதாவது இல்லாதது பொல்லாததைக் கிண்டி விட்டுத் திவானுடைய வேலைக்கே உலை வைத்து விடுவான்!"

ஆரம்பத்தில் ஏதோ கவனமாக இருந்த சீதா, பம்பாயில் ரஜனிபூர் ராஜாவைக் கொல்லும் முயற்சி நடந்ததைப் பற்றிக் காதில் விழுந்ததும், அவர்களுடைய பேச்சில் கவனம் செலுத்தலானாள். ராகவன் மதோங்கரைப் பற்றிச் சொல்லி முடித்ததும், "பம்பாயில் இந்த ஊர் ராஜாவைக் குத்திக் கொல்ல முயற்சித்த ஸ்திரீ யார்?" என்று கேட்டாள்.

"ஓகோ! நீ கூடக் கவனித்துக் கொண்டிருக்கிறாயா? அந்த ஸ்திரீ யாரோ தெரியாது. சிலர் அவளை ஹிந்து ஸ்திரீ என்றார்கள். சிலர் அவளை முஸ்லிம் ஸ்திரீ என்றார்கள். ஒரு சிலர் அவள் தென்னாட்டைச் சேர்ந்தவள் என்றும் சொன்னார்கள். யாராயிருந்தால் என்ன? பெரிய ராட்சஸியாயிருக்க வேண்டும்! பட்டப் பகலில் கொலை செய்ய முயற்சிப்பதற்கு அவளுக்கு எத்தனை தைரியம் இருந்திருக்க வேண்டும்?" என்றான் ராகவன்.

"புருஷர்கள் மட்டும் என்ன அக்கிரமம் வேணுமானாலும் செய்யலாம்; ஸ்திரீகள் அதற்குப் பழி வாங்கக் கூடாதோ?" என்றாள் சீதா.